இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 174 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 05 வெள்ளிக்கிழமை 19.05.2017

புதிய சேவை அறிமுகம்
பொதிகள் சேவை
Door to Door Service
1kg க்கு மேல் 01kg க்கான கட்டணம்
அவுஸ்திரேலியா Rs 800/-
லண்டன் Rs 600/-
ParceLk
இல. 225 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 2224338 / 021 4925024
இல. 25 கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. 024 4930200

# கத்திக் கதறியழுத உறவுகள் உணர்வோடு நினைவேந்தல்



## கண்ணீரால் நிறைந்தது முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்

முள்ளிவாய்க்கால், மே 19

இறுதிப் போரில் இடம்பெற்ற தமிழினப் படுகொலையை நினைவேந்தும் நிகழ்வு முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் உணர்வெழுச்சியுடன் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் அரசியல்வாதிகளும் பொதுமக்களும் உணர்வுபூர்வமாகத் தமது அஞ்சலியைச் செலுத்தினர். >> 25

## இனியொரு போர் வராத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

முள்ளிவாய்க்கால் மண்ணில் நின்றபடி கொழும்பு அரசிடம் சம்பந்தன் கேள்வி

முள்ளிவாய்க்கால், மே 19

இந்த நாட்டில் இனியொரு போர் வராத நிலமை ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்று முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில்நின்று கொழும்பு அரசைப்பார்த்துக் கேள்வியெழுப்பினார் எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன்.

முள்ளிவாய்க்கால் துயரின் 8ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் முதற்றடவையாக சம்பந்தன் நேற்றுக் கலந்துகொண்டார். நினைவுச் >> 25

## குழப்பகரமான நிலை!

முள்ளிவாய்க்கால், மே 19

முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. எனினும்கடந்த முறையைப் போலன்றி ஒருவித குழப்பகரமான நிலை இருந்ததை அவதானிக்க முடிந்தது.

ஒளிப்படம் மற்றும் காணொலிகளை எடுப்பதற்காகக் குழுமி நின்ற ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலரால் நிகழ்விடத்தில் பெரும் நெரிசல் >> 25

## சின்னப்பர் தேவாலயத்தில் நேற்றுமாலை நினைவேந்தல்

நினைவுக்கற்கள் வைக்கப்பட்ட இடத்தில் அஞ்சலி செலுத்தத் தடைவிதிக்கப்பட்டதால்

முல்லைத்தீவு, மே. 19

முள்ளிவாய்கால் கிழக்கு சின்னப்பர் தேவாலயத்தில் நேற்று மாலை 4 மணிக்கு சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுத்தலுடன் முள்ளிவாய்கால் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

சின்னப்பர் கத்தோலிக்க இல்லத்துக்கு >> 25



## ஐக்கியம், ஒருமைப்பாடு பற்றிப் பேசும் அரசு ஏன் படையினரை இங்கு வைத்திருக்கிறது?

வடக்கு மாகாண முதலமைச்சர் முள்ளிவாய்க்காலில் கேள்வி

முள்ளிவாய்க்கால், மே 19

போரின்போது அல்லது போர் முடிவின்போது மனித உரிமைகளுக்கு மாறான போர்க்குற்றங்களை இழைத்தவர்கள் படையினர். போர் முடிந்து நாட்டின் ஐக்கியத்தையும் >> 25



## முல்லையில் மட்டும் கடையடைத்து உயிரிழந்தோருக்கு அஞ்சலி

முல்லைத்தீவு, மே 19

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் முல்லைத்தீவு வர்த்தகர்கள் மாத்திரம் நேற்றுக் கடைகளை அடைத்தனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வணிகர் கழகத்தினரால்ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவு தின >> 25



## அரசியல் செய்யாதீர்கள்!

முள்ளிவாய்க்கால், மே 19

முள்ளிவாய்க்காலில் நேற்றைய தினம் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்ற போது திடீரென உணர்ச்சிவசப்பட்ட பெண் ஒருவர் அங்கு கூடியிருந்த அரசியல்வாதிகளைப் பார்த்து "இங்கு வந்து அரசியல் செய்யாதீர்கள்!" என்று கோபாவேசத்துடன் விரல்களை நீட்டிக் கொந்தளித்தார். >> 23

## மஹாசேன் பலகாய நேற்று கிளிநொச்சியில் அடாவடி

சிங்கக்கொடிகளை மின் கம்பங்களில் கட்டிவிட்டுத் தப்பிச் சென்றனர்



கிளி., மே 19

காலியில் இருந்து கிளிநொச்சிக்கு நேற்றுப் பேருந்தில் வந்த ம்ஹாசேன் பலகாய அமைப்பின் கும்பல் கிளிநொச்சி நகரின் மத்தியில் அடாவடி புரிந்ததால் அங்கு சிறிது >> 24

## சம்பந்தர், சுமந்திரனும் முள்ளிவாய்க்காலில்



முள்ளிவாய்க்கால், மே 19

முள்ளிவாய்க்காலில் நேற்று நடந்த நினைவேந்தல் நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் மற்றும்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட >> 24

## முள்ளிவாய்கால் நினைவேந்தல் தமிழகத்திலும் கடைப்பிடிப்பு



சென்னை, மே 19

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு சென்னையிலும் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. >> 25

வடக்கின் மாபெரும் சுகாதாரக் கண்காட்சி
காலம்
மே 19,20,21
நேரம்
10.00 - 6.30
இடம்
யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்
இன்று
Me >> 29

12 மாத நிலையான வைப்பு
13.25%
வ.வி.வீ. 13.25%
இப்பொழுது உங்களுடைய
நிலையான வைப்பிற்கு
அதிகபட்ச வட்டி வீதம்
24 மணி நேர அழைப்பு மையம் : 011 2350000
அருகிலுள்ள DFCC வங்கிக் கிளைக்கு விரைந்து நிலையான வைப்பு கணக்கினை ஆரம்பியுங்கள்.
www.dfcc.lk
ரூ. 25,000 இலிருந்து ரூ. 10 மில்லியன் வரை. நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# கேப்பாபிலவில் 432 ஏக்கர் காணி ஒரு மாதத்துக்குள் விடுவிக்கப்படும்

## படை முகாம் அதிகாரியைச் சந்தித்துப் பேசிய பின்னர் போராட்டத்தில் ஈடுபடும் மக்களிடம் சம்பந்தன் உறுதி







முல்லைத்தீவு, மே. 19

கேப்பாபிலவில் படையினர் வசமுள்ள 432 ஏக்கர் காணிகள் ஒரு மாதத்துக்குள் விடுவிக்கப்படும் எனக் கேப்பாபிலவு மக்களிடம் நேற்று உறுதியளித்தார் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன்.

111 ஏக்கர் காணிகளை விடுவிக்க இராணுவம் 6 மாத கால அவகாசம் கோரியுள்ளதாகவும் அவர் கூறினார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்பதற்காக முல்லைத்தீவுக்கு நேற்று வருகை தந்த எதிர்க்கட்சித்தலைவர், அங்கு தமது காணிகளை விடுவிக்கக் கோரி 80 நாள்களாகத் தொடர் அமைதிவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை நேரில் சந்தித்துப் பேசினார். இதன் பின்னர் கேப்பாபிலவு இராணுவ முகாம் தளபதியையும் சந்தித்தார். இதனையடுத்து மீண்டும் வந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுடன் உரையாடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மிகுதியாக உள்ள 70 ஏக்கரை விடுவிக்கும் எண்ணம் இராணுவத்துக்கு இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கேப்பாபிலவு இராணுவ முகாம் அமைந்துள்ள இடத்தைச் சென்று பார்வையிட்டோம். அதற்குப் பொறுப்பாக இருக்கும் அதிகாரியான பெர்னாண்டோ உட்படப் படை அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினோம்.

அங்கு 243 ஏக்கர் காணி உடனடியாக விடுவிக்கக் கூடிய நிலையில் உள்ளது. 189 ஏக்கர் காணியை ஒரு மாத்துக்குள் விடுவிப்பதாக நிச்சயமாகச் சொல்கிறார்கள். அதனை விரைவாக விடுவிப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். மேலும் 111 ஏக்கர் காணியை விடுவிப்பதற்குத் தமக்கு 6 மாத காலம் தேவைப்படுவதாக இராணுவ அதிகாரி கூறினார். அத்துடன் 100 மில்லியன் ரூபா நிதியும் அதற்குத் தேவையாக உள்ளது என்றும், அதை விரைவாக விடுவிப்பதற்கு முயற்சிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன் பிரகாரம் கேப்பாபிலவில் 543 ஏக்கர் காணியை விடுவிக்கக்கூடிய நிலைமை உள்ளது. மிகுதி 70 ஏக்கர் காணி அவர்களது கட்டடங்கள், முகாம்கள் அமைந்துள்ள நந்திக் கடல் பகுதியாக உள்ளது. அதை விடுவிக்கும் நோக்கம் அவர்களுக்கு இல்லை. அதில் இருந்து தாங்கள் வெளியேறுவதாக இருந்தால் 400 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாக அவர்கள் என்னிடம் கூறினர்.

அவர்களைப் பொறுத்தவரை அந்தக் காணியில் இருந்து விலகும் நோக்கம் இல்லை. ஆனால் மக்களின் காணியில் இருந்து நீங்கள் விலகவேண்டும் என்றே மக்கள் சொல்லுகிறார்கள். அந்தப் பகுதியில் பாடசாலைகள், கோயில்கள், மயானம் என்பன அமைந்துள்ளன. எனவே நீங்கள் அதனையும் விடுவிக்க வேண்டும் என்று நான் இராணுவ அதிகாரியிடம் கூறினேன்.

இது தொடர்பில் அரச தலைவருடனும், இராணுவத் தளபதியுடனும் கலந்துரையாடி நல்ல முடிவுகள் எடுக்கப்படும்- என்றார். (த-7)



## 5 மாடிக் கட்டடம் சரிந்து ஒருவர் சாவு; 22 பேர் படுகாயம்

### வெள்ளவத்தையில் பயங்கரம் மழைக்கு மத்தியிலும் மீட்புப் பணி

கொழும்பு, மே 19

கொழும்பு, வெள்ளவத்தையில் ஐந்து மாடிக் கட்டமொன்று நேற்று முற்பகல் சரிந்து விழுந்ததில் தொழிலாளர்கள் 23 பேர்வரை படுகாயமடைந்துள்ளனர்.

அவர்களில் ஒருவர் நேற்றிரவு வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

கட்டடத்துக்குக் கீழ் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனங்களும் முழுமையாகச் சேதமடைந்துள்ளன.

இடரில் காயமடைந்தவர்களுள் 14 பேர் களுபோவில வைத்தியசாலையிலும், 9 பேர் கொழும்பு தேசியவைத்தியசாலையிலும் சிகிச்சைப்பெற்று வருகின்றனர். இவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என வைத்தியசாலை வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

வெள்ளவத்தை, சாலிமன் வீதியிலுள்ள சவோய் திரையரங்குக்குப் பின்னால் நிர்மாணிக்கப்பட்டு வந்த பிரமாண்டமான மாநாட்டு மண்டபமொன்றின் கட்டடமே முற்பகல் 10.45 மணியளவில் சரிந்து விழுந்தது.

இதனால் கட்டடத்துக்குள்ளும், வெளியிலும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் காயமடைந்துள்ளனர். இதையடுத்துச் சம்பவ இடத்துக்குப் பொலிஸார், இராணுவத்தினர், தீயணைப்புப் படையினர் விரைந்தனர். கட்டட இடிபாடுகளுக்குள் சிக்குண்டவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்றிரவு உயிரிழந்தார்.

சரிந்துவிழுந்த கட்டடம் அமைந்திருந்த வீதியில் திருமண மண்டபமொன்றும் இருக்கின்றது. அதற்குவந்திருந்த வாகனங்கள் உட்பட ஏனைய சில வாகனங்கள் கட்டடத்துக்கு கீழ்தான் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவை முற்றாகச் சேதமடைந்துள்ளன.

கொழும்பைச்சூழ நேற்று அடைமழைபெய்ததால் அதற்கு மத்தியிலும் மாலைவரை மீட்புப் பணி தொடர்ந்தது. சம்பவ இடத்துக்கு அரசியல் பிரமுகர்களும் படையெடுத்தனர்.

இடர் தொடர்பில் ஆராய்வதற்காக வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சு குழுவொன்றை அமைத்துள்ளது.

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் இன்று சம்பவம் இடம்பெற்று ஆராயவுள்ளனர். கட்டட நிர்மாணமுறையில் தவறிருக்கின்றதா அல்லது கலவையில் கோளாறு ஏற்பட்டுள்ளதா என்பது பற்றி ஆராயப்படும்.

அதேவேளை, வெள்ளவத்தை கட்டடத்தில் ஏற்பட்ட விபத்துக்கு முறையான அனுமதிப் பெறாமல் அதனை நிர்மாணித்தமையே காரணமாகும் என்று தேசிய மொழிகள் ம்றறும் நல்லிணக்க அமைச்சரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்தார். (த-4-5)



## கிளிநொச்சியில் நேற்று நினைவேந்தல் நிகழ்வு

கிளிநொச்சி மே 19

தமிழ்த் தேசதேக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் முள்ளிவாய்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்றுக் கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

நேற்று மாலை 4 மணியளவில் ஆரம்பமான இந்த நிகழ்வில் பொதுப் படத்துக்கான மலர்மாலையை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் அணிவித்தார். தொடர்ந்து பொதுச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது. பின்னர் இந்து, கிறிஸ்தவ மதப் பிரார்தனைகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் குருகுலராஜா, வட மாகாணசபை உறுப்பினர்களான அரியரத்தினம், பசுபதிப் பிள்ளை மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-6)


## 22ஆம் திகதி போராட்டம்; மருத்துவர் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, மே 19

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை அரைநாள் பணிப்புறக் கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளது.

கொழும்பில் கூடிய அரச மருத்துவர் அதிகாரிகள் சங்கத்தின் மையக் குழுக் கூட்டத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் அனைத்துப் பல்கலைகழக மாணவர் ஒன்றிய சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது மாணவர்கள் மீது கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதைக் கண்டிக்கும் முகமாகவே 22ஆம் திகதி அரைநாள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் குதிக்கச் சங்கம் தீர்மானித்துள்ளது. (த-4)



## பஸ் விபத்தில் 16 பேர் படுகாயம்

நுவரெலியா, மே19

நுவரெலியாவில் பிரதேசத்தில் நேற்றுமதியம் இடம்பெற்ற பஸ் விபத்தில் 16 பேர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்கள் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியாவிலிருந்து பட்டிப்பொல நோக்கி சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வெலிமடை பிரதான வீதியில் சுமார் 30 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. (த-ய-43)

## காணாமற்போனோர் குறித்து தீர்வைப் பெற்றுத் தாருங்கள்

### சம்பந்தனிடம் உறவுகள் கோரிக்கை



யாழ்ப்பாணம், மே 19

காணாமற்போனோர் தொடர்பில் தீர்வைப் பெற்றுத்தர உங்களால் முடியும். அதனைப் பெற்றுத் தாருங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனிடம் முல்லைத்தீவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமற்போனோரின் உறவுகள் கோரிக்கை விடுத்தனர்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாக 73 நாள்களாகத் தொடர் போராட்டத்தை மேற்கொண்டுவரும் காணாமற்போனோரின் உறவுகளை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் நேற்றுச் சந்தித்து கலந்துரையாடினார். இதன்போதே அவர்கள் மேற்படி கோரிக்கையை முன்வைத்தனர்.

அவர்கள் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இறுதிப்போரின்போது கொல்லப்பட்டவர்களை நாம் கோரவில்லை. நாம் கோருவது போர் முடிவடைந்த பின்னர் இராணுவத்தின் கையில் ஒப்படைத்தவர்களையும் கூட்டிச் செல்லப்பட்டவர்களையுமே. அவ்வாறு ஒப்படைக்கப்பட்டவர்கள் தொடர்பில் நீங்கள் முயன்றால் தீர்வைப்பெற்றுத்தர முடியும்என்றனர்.

இதற்குப் பதிலளித்த சம்பந்தன், காணாமற்போனோர் விடயத்தில் சில இடங்களில் குறிப்பிட்டளவானோர் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக நீங்கள் கருதுவது எனக்கும் தெரியும். அவ்வாறான இடங்களுக்கு காணாமல்போனோரின் உறவுகளில் சிலராவது சென்று பார்க்கவேண்டும்.

காணாமற்போனவர்களில் இறந்தவர்கள் தவிர உயிரோடு இன்னும் இருப்பவர்களை மீட்டுத்தர நிச்சயமாக ஆவன செய்யப்படும் - என்றார். (த-101)

# முள்ளிவாய்க்காலில் பெருந்துயர் நினைவு


வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் சுடர் ஏற்றும்போது...


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அஞ்சலி செலுத்தும் போது...


நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்


நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்


சுடர் ஏற்றும் உறவுகள்


உரையாற்றும் போது...


அகவணக்கம்




வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்


முள்ளிவாய்க்காலில் கதறி அழும் உறவுகள்


நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன்


நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன்


ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஷ்பிரேமச்சந்திரன்




பிரமுகர்கள்


முள்ளிவாய்க்காலில் ஏற்றப்பட்ட சுடர்


வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன்

# உதயன் அலுவலகத்திலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்



















முள்ளிவாய்க்காலில் கொன்றொழிக்கப்பட்ட எமது உறவுகளின் நினைவேந்தல் நிகழ்வும், குருதிக் கொடையும் உதயன் பத்திரிகை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

நினைவேந்தல் நிகழ்வு முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமானது. 3 நிமிட மௌன வணக்கத்தைத் தொடர்ந்து முதன்மைச் சுடரை உதயன் பொது முகாமையாளர் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து உயிரிழந்த உறவுகளுக்கு மலர் தூவி அஞ்சலி செய்யப்பட்டது. நினைவு நிகழ்வுகளைத் தொடர்ந்து உயிர் நீத்த உறவுகளின் நினைவாகக் குருதிக் கொடை இடம்பெற்றது.

இந்த வைபவத்தில் உதயன் பணியாளர்கள், பொது மக்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டதுடன் குருதிக் கொடையும் வழங்கினர். முதன்மை நினைவேந்தல் நிகழ்வு முள்ளிவாய்க் காலில் நடைபெறும் அதேவேளை, உதயன் அலு வலகத்திலும் வருடாந்தம் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(த-8)





# யாழ். பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்













முள்ளிவாய்க்கால் மே 18 நினைவு தினம் நேற்று காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் சிறப்பான அஞ்சலி நிகழ்வுகளுடன் ஆரம்பமாகி நடைபெற்றது. துணை வேந்தர் விக்னேஸ்வரனும் கலந்து கொண்டார்.

## கொடுப்பனவுகளை வழங்கக் கோரி நோத்சீ பணியாளர் ஆர்ப்பாட்டம்



யாழ்ப்பாணம் மே 19

யாழ்ப்பாணம் நோத்சீ நிறுவனத்தின் பணியாளர்கள் 14 பேர் தமக்கு உரிய கொடுப்பனவுகளை நிறுவனம் வழங்கவில்லை என்றும், அவற்றைப் பெற்றுத்தர ஆவன செய்ய வேண்டும் எனக் கோரி தொழில் திணைக் கள அலுவலகத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் கவன வீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.

நிறுவனத்தினில் தொழில் புரியும் மற் றும் இளைப்பாறிய ஊழியர்கள் 14 பேருக் குரிய சம்பளம் மற்றும் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி போன்ற கொடுப்பனவுகளை வழங்கக் கோரியே ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

"நிறுவனத்தில் எமக்கான கொடுப்பனவு களுக்கான நிதிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. இருப்பினும் அந்தப் பணம் எமக்கு வழங்கப்படவில்லை. அவ்வாறானால் அந்த நிதிக்கு என்ன நடந்தது? நீதிமன்றம், மனித உரிமை ஆணைக்குழு, தொழில் திணைக் களம் என பல ஆண்டுகளாக அலைக் கழிந்த நிலையில் எம்மில் இருவர் உயிரிழந்து விட்டனர். எஞ்சியோரும் உயிரிழக்கும் வரையா காத்திருக்கின்றனர்." என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் இயங்கு கின்ற நோர்த்சீ நிறுவன அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, இந்த விடயம் தொடர்பில் எமக்கு எதுவும் தெரியாது. நீங்கள் கொழும்பில் அமைந்துள்ள எமது தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுங்கள் என பதிலளித்தனர். (ற-8,101)

## தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் முள்ளிவாய்கால் நினைவேந்தல்



யாழ்ப்பாணம், மே 19

யாழ்ப்பாணம் மார்டின் வீதியில் அமைந்துள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று மாலை, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் உணர்வு பூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (வ-101)

### கிந்துப்பிட்டி மயானத்துக்கு மதில் கட்ட

## நீதிமன்றில் அனுமதி கோரிய இருவர் மீது நேற்றுத் தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 19

புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டி கிந்துப்பிட்டி மயானத்துக்கு சுற்று மதில் அமைக்க மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் அனுமதியைக் கோரிய இருவர் மீது நேற்றுச் சிலர் தாக்குதல் மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நீதிமன்ற அனுமதியுடன் சுற்று மதில் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இளைஞன் மீது சிலரால் கடந்த செவ்வாய்க்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டது. இளைஞன் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் தாக்குதல் நடத்தியோர் மீது அச்சுவேலிப் பொலிஸார் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டது. இந்த நிலையில் கிந்துப்பிட்டி மயானத்துக்கு சுற்று மதில் அமைப்பதற்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் அனுமதி கோரிய இருவர் மீது நேற்றுச் சிலரால் தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. அது தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டதாகவும் கூறப்பட்டது.

சம்பவங்கள் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸாரிடம் தகவல் அறியத் தொடர்புகொண்ட போதும் அது பலனளிக்கவில்லை. புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டி கிந்துப்பிட்டி மயானத்தை அகற்றுமாறு ஒரு தரப்பினர் கோரிக்கைவிடுத்து வருகின்றனர். எனினும் அதனை அகற்ற முடியாது என்று மற்றொரு தரப்பினர் உறுதியாக உள்ளனர். அவர்கள் நீதிமன்றின் அனுமதியுடன் மயானத்துக்கு சுற்று மதில் அமைத்து வருகின்றனர். (வ-37)

## கற்றலுக்குச் செல்லும் மாணவிகளுக்கு உடுப்பிட்டிச் சாலைகளில் இடையூறு

### பெற்றோர் விசனம்

கரணவாய் மே 19

உடுப்பிட்டிச் சாலைகளில் ஒன்று கூடும் இளைஞர்கள் மாணவிகளுடன் அநாகரிகமாக நடந்து கொள்வதாகப் பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

உடுப்பிட்டி முதன்மை வீதியுள்ள புளியடி மற்றும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி உள்ளிட்ட பகுதிகளில் பாடசாலை முடிவடையும் போதும் தனியார் வகுப்புக்கள் முடிவடையும் நேரங்களிலும் ஒன்று கூடும் இளைஞர்கள் மாணவிகளுடன் தவறான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வதோடு மோட்டார் சைகிள்களில் பின் தொடர்ந்து செல்வதாகவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர் .

தினமும் உடுப்பிட்டியிலுள் பிரபலமான பெண்கள் பாடசாலைக்கும் உடுப்பிட்டி, நெல்லியடிப் பகுதிகளிலுள்ள தனியார் கல்வி நிலையங்களுக்கும் நூற்றுக்கு மேற்பட்ட மாணவிகள் தொண்டைமனாறு, கெருடாவில், கொம்பந்தறை மற்றும் உடுப்பிட்டிப் பகுதகளில் இருந்து வருகின்றனர்.

இவர்களுடன் இளைஞர்கள் அநாகரிமாக நடந்து கொள்வதனால் கற்றல் செயற்பாடுகளுக்குச் செல்ல தமது பிள்ளைகள் தயக்கம் காட்டி வருவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

எனவே வீதிகளில் ஒன்று கூடி மாணவிகளுடன் அநாகரிகமாக நடக்கும் இளைஞர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் முன் வரவேண்டும் என்று பெற்றோர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (வ-108)



## பயமில்லை என்றால் தேர்தலை நடத்துங்கள்

### அரசுக்கு மகிந்த சவால்

கொழும்பு, மே 19

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தலில் வெல்ல முடியும் என்ற நம்பிக்கை அரசுக்கு இருந்தால் - தோல்விப் பயமில்லை என்றால் உடனடியாகத் தேர்தலை நடத்திக் காட்டுங்கள் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அரசுக்குச் சவால் விடுத்துள்ளார்.


மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சாவின் தந்தையின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட பிறகு ஊடகவியலாளர்களைச் சந்தித்துப் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

செப்ரெம்பர் மாதம் கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வட மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஆனால், இரண்டு வருடங்களைத் தாண்டியும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நடத்தப்படாததால் இந்த மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல் இடம்பெறுமா என்ற கேள்வி எழுகின்றது.

மக்களின் வாக்குரிமையை மீறும் அதிகாரம் அரசியல்வாதிகளான எமக்குக் கிடையாது. அவ்வாறு மீறினால் அது சட்டவிரோதம். எமது ஆட்சியில் ஒருபோதும் தேர்தலை ஒத்திப்போட்டதில்லை. வட மாகாண சபையை எம்மால் கைப்பற்ற முடியாது என்று தெரிந்தும்கூட அதற்கான தேர்தலை நடத்தினோம். அந்த மக்களின் வாக்குரிமையை நாம் பாதுகாத்தோம். தோற்றுவிடுவோம் என்று அஞ்சி இந்த ஆட்சியைப்போல் தேர்தலை நாம் ஒத்திப்போடவில்லை. ஆனால், இந்த அரசு தோல்விப் பயத்தின் காரணமாகவே தேர்தலை ஒத்திப்போடுகின்றது. அப்படி இல்லையென்றால் தேர்தலை நடத்திக் காட்டுமாறு நாம் அரசுக்கு சவால் விடுக்கின்றோம் - என்றார். (து-3)

## ஒரே சாலை விபத்தில் 5 வாகனங்கள் சிக்கின; இருவர் படுகாயம்





சாவகச்சேரி, மே 19

சாவகச்சேரி நுணாவில் சந்தியை அண்மித்த பகுதியில் 5 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியால் ஏற்பட்ட விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று பி.ப. 3 மணியளவில் இடம்பெற்றது. விபத்தில் 4 வாகனங்கள் சேதமடைந்தன.

"யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் வந்த தனியார் பேருந்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக பயணிகளை இறக்கிக் கொண்டிருந்தது. பருத்தித்துறை சாலையிலிருந்து நுணாவில் சந்தியில் ஏ 9 சாலைக்கு வந்த படையினரின் வாகனம் பயணிகளை இறக்கிக் கொண்டிருந்த பேருந்தை முந்த முற்பட்டது. இதன்போது சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் ஜீப்பை படையினரின் வாகனம் மோதியது. அவ்வழியே சென்று கொண்டிருந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணியின் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவையும் இந்த விபத்தில் சிக்கின" என்று பொலிஸார் தெரிவித்தனர். தனியார் ஜீப்பில் பயணித்த வட்டுக்கோட்டை மாவடியைச் சேர்ந்த நாகராசா தினேஸ் ( வயது 27 ) உடுவில் மல்வத்தைச் சேர்ந்த சக்திவேல் அபில்ராஜ் ( வயது 20 ) ஆகியோர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-9)

## திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கு பண்டத்தரிப்பில் புதிய நடைமுறை

யாழ்ப்பாணம், மே 19

திண்மக் கழிவுகளை வீதிகளிலும் சந்திகளிலும் வீசப்படுவதைத் தவிர்க்கும் வகையில் திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்திட்டம் பண்டத்தரிப்புப் பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. வலி. தென்மேற்குப் பிரதேச சபையால் குறிப்பிட்ட தினங்களில் ஒலி எழுப்பிய வண்ணம் வரும் வாகனத்தில் குடியிருப்பாளர்கள் தரம் பிரித்து வைத்திருக்கும் திண்மக்கழிவுகளைக் கொடுப்பதற்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வலி.தென்மேற்கு பிரதேச சபையின் கீழ் மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம் என நான்கு உப அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இந்தப் பிரதேசங்களில் வசிக்கும் பலர் தங்கள் குடியிருப்புக்களில் திண்மக்கழிவுகளை மூடையாகக் கட்டி வீதிகளிலும் சந்திகளிலும் வைக்கின்றார்கள். அவை சுகாதாரத்துக்குப் பங்கம் ஏற்படுவதுடன் போக்குவரத்துக்கும் இடையூறாகவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. திண்மக் கழிவுகளைச் சேகரிக்க செல்லும் வாகனம் குறிப்பிட்ட தினங்களில் குறிப்பிட்ட நேரங்களில் செல்வதில்லை. இதனால் வாகனத்தின் வருகையை எதிர்பார்த்து மணிக்கணகாகக் காத்திருக்கும் குடியிருப்பாளர்கள் ஏமாற்றத்துக் குள்ளாகிறார்கள்.

இந்த நிலையில், பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தால் திண்மக் கழிவுகள் அகற்றுவது தொடர்பாக புதிய நடைமுறை முன்னெடுக்கப்படுகிறது. "குறிப்பிட்ட தினங்களில் ஒலி எழுப்பியவாறு செல்லும் வாகனத்தில் மக்கள் தரம் பிரித்து வீடுகளில் சேகரித்து வைத்திருக்கும் திண்மக் கழிவுகளைக் கொடுப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன" என்று பட்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தின் பொறுப்பதிகாரி கனகேந்திரம் தெரிவித்தார். (வ-115)

இணுவில் அருள்மிகு
ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார்
திருக்கோயில்
வருடாந்த மஹோற்சவம் - 2017



கொடியேற்றம்
வெள்ளிக்கிழமை (19.05.2017) நண்பகல் 12 மணி
மாலை 7.00 மணி
குதிரை வாகனங்களில் சுவாமி வீதியுலா
19.05.2017 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 28.05.2017 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 29.05.2017 தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

# சகல அரச நிறுவனங்களுக்கும் கைவிரல் அடையாள இயந்திரம்

கொழும்பு, மே 19

சகல அரச நிறுவனங்களுக்கும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் கைவிரல் அடையாள இயந்திரத்தை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.



அரசஊழியர்களின்கடமை நேரத்துக்கான வரவு மற்றும் கடமை நேரம் முடிந்து வெளியேறுதல்என்பவற்றை உறுதி செய்யும் வகையில், சகல அரச நிறுவனங்களுக்கும் கைவிரல் அடையாள இயந்திரம் வழங்கப்படவுள் ளது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் இது தொடர்பான சுற்றறிக்கை சகல அரச நிறுவனங்களுக்கும், திணைக்களங்களுக்கும், மாகாண சபைகளுக்கும், கூட்டுத்தாபன, சபைகளின் பிரதானிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறி தெரிவித்தார். (ஜ-10)

# உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் கட்டளைச் சட்டத்தில் திருத்தம்

## அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, மே 19

உள்ளூராட்சி சபைத் தேர்தல் கட்டளைச் சட்டத்தில் சில அதிகாரங்கள் திருத்தப்படவுள்ளன.

அதற்குத் தேவையான சட்ட திட்டங்களை வரைய அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

உள்ளூராட்சி நிறுவனங்களில் தேர்தல் நடத்தும் கட்டளைச் சட்டம் தொடர்பான திருத்தச் சட்ட வரைவு முன் வைக்கப்பட்டுள்ளது.

இதனை அமைச்சரவை உபகுழு மேலும் ஆராய்ந்தது. இதற்குத் தேர்தல் ஆணைக்குழு முன்வைத்த அம்சங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டு இறுதிச் சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்ட வரைவின் சில பிரிவுகள் அரசியல் அமைப்பை மீறும் வகையில் அமைந்துள்ளன. அதனை நாடாளுமன்றில் சிறப்புப் பெரும்பான்மை மூலம் அங்கீகரிக்க வேண்டுமென சட்டமா அதிபர் சுட்டிக்காட்டியிருந்தார். இந்த அம்சங்கள் தொடர்பில் அதிகாரிகள் மேற்கொண்ட கலந்துரையாடலின் பின்னர், நாடாளுமன்றில் சாதாரண பெரும்பான்மை மூலம் நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் குறித்த சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் குறித்த சட்ட வரைவு மீதான திருத்தங்களை நாடாளுமன்ற குழுநிலை விவாதங்களில் இணைத்துக் கொள்வது தொடர்பாக அமைச்சர் பைசர் முஸ்தபா யோசனை முன்வைத்திருந்தார். (ஜ-10)

# யாழ். திருநெல்வேலிச் சந்தியில் மின் விளக்குகள் ஒளிர்வதில்லை

## ஒரு வாரமாகியும் சீராக்கப்படாமை குறித்து பொது மக்கள் விசனம்

திருநெல்வேலி, மே 19

யாழ்ப்பாணம், திருநெல்வேலிச் சந்தையை அண்மித்த பகுதிகளில் வீதி விளக்குகள் ஒளிர்வதில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.

கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக அவை பழுதடைந்த நிலையில் உள்ளன. அவை சீரமைக்கப் படாமையால் அதிகாலையில் சந்தைக்கு வரும் வியாபாரிகள், விவசாயிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

"யாழ்ப்பாணம் பலாலி வீதியில் திருநெல்வேலி சந்திப் பகுதியிலுள்ள ஒரு தொகுதி வீதி மின் விளக்குகள் கடந்த ஒரு வார காலத்துக்கு மேலாக ஒளிர்வதில்லை. இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. எனினும் இதுவரை அவை சீராக்கப்படவில்லை.

திருநெல்வேலி பொதுச் சந்தையில் அதிகாலையில் கூடும் விவசாயிகள் உள்ளிட்ட ஆயிரக் கணக்கானோர் வீதியில் போதிய வெளிச்சமில்லையால் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்" என்று பொது மக்களால் தெரிவிக்கப்பட்டது. (வ-37)

# பாலியல் தொழில் குற்றச்சாட்டில் கைதான பெண்கள் மறியலில்

கிளிநொச்சி, மே19

கிளிநொச்சி - விநாயகபுரம் பகுதி வீடொன்றில் வைத்து சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட நான்கு பெண்களையும் எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிவான் மன்று நேற்று உத்தரவிட்டது. குறித்த வீட்டில் பாலியல் தெழதில் இடம்பெற்று வருவதாகக் கிளிநொச்சி பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய சிறப்பு முற்றுகையின் மூலம் இவர்கள் நால்வரும் கைதுசெய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-ய)

# சின்னம் சூட்டுதல்

தென்மராட்சி, மே 19

கச்சாய் அ.த.க.பாடசாலை மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டுதல் நிகழ்வு இன்று காலை 7.45 மணிக்கு பாடசாலை முதன்மை மண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. பாடசாலை அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு விருந்தினர்களாக மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி உப அதிபர் ஐ.குணசீலனும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பிரதி அதிபர் திருமதி தே.சுதேந்திரனும் கலந்து கொள்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# மகிந்தவை பழிவாங்கும் மைத்திரி அரசு

## மகிந்த அணியினர் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 19

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச கடந்த காலத்தில் படையினருடன் இணைந்து மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொண்டவர். ஆனால், தற்போதைய மைத்திரி அரசு அவரைப் பழிவாங்கும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பின் இந்திக அனுருத்த தெரிவித்தார்.



மகிந்த அணியினர் நேற்று காலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

நாட்டில் தற்போது உருவாகியுள்ள அரசியல் நிலைமையில், தேவைப்படுவது அமைச்சரவை மாற்றம் அல்ல. அரச மாற்றமே தேவை . நேற்றைய தினம் வெற்றிகரமாகக் கொண்டாட வேண்டிய தினம். கடந்த காலத்தில் மனிதாபிமான நடவடிக்கை மூலம் வடக்கு மக்களுக்கு பிரதிபலன் கிடைத்தது. எனினும் தற்போதைய அரசு அனைத்தையும் நீக்கம் செய்துள்ளது.

அரசின் முக்கிய 10 மோசடியாளர்களை அம்பலப்படுத்தியதன் காரணமாக மகிந்தானந்த அளுத்கமகே கைது செய்ய முயற்சித்து வருகிறது.-என்றார். (10)

# மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கன்னாகம் |
|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 80 |
| கத்தரி | 100 | 120 | 120 | 120 |
| கரட் | 180 | 200 | 240 | 240 |
| மரவள்ளி | 60 | 80 | 60 | 70 |
| பயிற்றை | 140 | 100 | 80 | 100 |
| பாகல் | 160 | 200 | 160 | 240 |
| கருணைக்கிழங்கு | 100 | 120 | | 100 |
| பெ.வெங்காயம் | 90 | 100 | 100 | 100 |
| சி.வெங்காயம் | 200 | 300 | 250 | 240 |
| பூசணி | 50 | 60 | 60 | 60 |
| தக்காளி | 100 | 120 | 100 | 100 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 50 |
| கீரை | 25 | 30 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 40 | 30 |
| பச்சை மிளகாய் | 160 | 140 | 220 | 180 |
| புடோல் | 80 | 100 | 100 | 80 |
| கோவா | 140 | 200 | 240 | 120 |
| வெண்டி | 80 | 100 | 100 | 100 |
| போஞ்சி | 200 | 200 | 240 | 180 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 120 |
| தேங்காய் | 70 | 65 | 50-60 | 70 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 110 | 110 |
| தேசிக்காய் | 70 | 60 | 60 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 15 | 10 |
| கறிமிளகாய் | 120 | 200 | 180 | |
| இராசவள்ளி | 180 | 250 | 250 | 250 |
| முருங்கைக்காய் | 100 | 140 | 120 | 120 |

# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 1000 | 800 |
| நண்டு | 400 | 300 | 500 | 300 |
| கணவாய் | 600 | 600 | 800 | 700 |
| பாரை | 500 | 600 | 700 | 800 |
| சுறா | 500 | 700 | 100 | 800 |
| சீலா | 400 | 400 | 500 | |
| விளை | 500 | 400 | 600 | 600 |
| முரல் | 400 | 400 | 500 | 300 |
| கும்பிளா | 400 | 500 | 450 | 500 |
| கிளாக்கன் | 800 | – | 700 | |
| ஓரா | 300 | 300 | 500 | |
| திரளி | 200 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 150 | 400 | |
| சூடை | 150 | 100 | 200 | 150 |
| ஒட்டி | 250 | 400 | 300 | |
| திருக்கை | 350 | 250 | 400 | 400 |
| மதனம் | 200 | 150 | 300 | |
| கொய் | 150 | 60 | 80 | 100 |
| பாலை | 200 | 220 | 600 | 400 |
| வாழை | 200 | – | 500 | |

# குழு மோதலில் தொடர்புடைய குற்றச்சாட்டில் 2 பெண்கள் கைது

## நெல்லியடிப் பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 19

வடமராட்சி துன்னாலை வேம்படி சந்திப் பகுதியில் கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கும்பல்களுக்கு இடையேயான மோதலுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 2 பெண்கள் நேற்று முன்தினம் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

"மோதல்சம்பவத்துடன் 27 பேர் தொடர்புபட்டுள்ளார்கள். அவர்களில் பெண்களும் உள்ளனர். அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன" என்று பொலிஸாரால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மோதலுடன் தொடர்புடைய 27 பேரையும் உடனடியாகக் கைது செய்யுமாறு பருத்தித்துறை நீதிவான் மன்று பொலிஸாருக்கு உத்தரவிட்டது. அதனடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு 6 பேரை கைது செய்தனர். சம்பவத்துடன் தொடர்புடைய முதன்மைச் சந்தேகநபர் சட்டத்தரணி மூலம் நீதிமன்றில் சரணடைந்திருந்தார். அவர்கள் அனைவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று பெண்கள் இருவரைப் பொலிஸார் தேடி வந்தனர். பொலிஸ் நிலையத்துக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இரு பெண்களும் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னணி

கடந்த மாதம் 21ஆம் திகதி நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துன்னாலை, வேம்படி சந்திப் பகுதியில் இடம்பெற்ற பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த 2 கும்பல்களுக்கு இடையே கைகலப்பு ஏற்பட்டது. அது மாலை 5 மணியளவில் உக்கிரமடைந்தது. கண்ணாடியிலான சோடாப் போத்தல்கள், வாள், கம்பி, கற்கள் போன்றவற்றால் இரு கும்பல்களும் மோதலில் ஈடுபட்டன. மோதலில் 7 பேர் படுகாயமடைந்தனர். (வ-21,26)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கிளிநொச்சியில்





கிளிநொச்சி மே 19
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்றைய தினம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களால் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் நடத்தப்பட்டது.
இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வலிந்து காணமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் நெய்விளக்கேற்றி. தேங்காய் உடைத்து வழிபாட்டில் ஈடுபட்டனர். (ற-6)





# மட்டக்களப்பில் நினைவேந்தல்

மட்டக்களப்பு, மே 19
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு உணர்வு பூர்வமாக மட்டக்களப்புவாகரைப் பிரதேசத்திலுள்ள ஸ்ரீ செல்வ விநாயகர் பிள்ளையார் ஆலய முன்றலில் நேற்றுக் காலை நடைபெற்றது.
விநாயகப் பெருமானுக்கு அபிசேகப்பூசைநடைபெற்று உயிர்நீத்தவர்களின்ஆத்மா சாந்திவேண்டிவிசேடபூசை நடைபெற்றது.
நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், ஞா.சிறிநேசன், ச.வியாழேந்திரன், கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜாசிங்கம், மாகாணசபை பிரதித் தவிசாளர் நி.இந்திரகுமார், உறுப்பினர்களான இரா.துரைரெட்னம், ஞா.கிருஸ்ண பிள்ளை, ம.நடராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான, பொன்.செல்வராசா, பா.அரியநேத்திரன் தமிழரசுக்கட்சிக் கிளை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர்கலந்துகொண்டு உயிர்நீர்த்த அனைவருக்கும்அஞ்சலி செலுத்தினர். (ற-21)

# தமிழினத்துக்கு எதிராக நடந்த இனஅழிப்புக்கு நீதி வேண்டும்

## யோகேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு



மட்டக்களப்பு, மே 19
இலங்கையில் தமிழினத்துக்கு எதிராக நடைபெற்ற இன அழிப்புக்கு கலப்பு நீதிமன்றில் பன்னாட்டு நீதிபதிகளின் பங்குபற்றலுடன் நியாயமான நீதி விசாரணை நடைபெற்று பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும்.
இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுமட்டக்களப்புவாகரைப்பிரதேசத்திலுள்ள ஸ்ரீ செல்வ விநாயகர் பிள்ளையார் ஆலய முன்றலில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது
வெருகல் மாவிலாறு பகுதயில் ஆரம்பமான போர் முள்ளிவாய்காலில் முடிவடைந்தது. அதில் தமிழர்கள் திட்டமிட்டவகையில்அழிக்கப்பட்டார்கள். பலர் காணாமல் ஆக்கப்பட்டார்கள். அந்த மாபெரும் இன அழிப்பு தொடர்பாக இதுரை ஒரு தீர்க்கமான முடிவு கிடைக்கப்படாத நிலையில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.
போர்ச்சூழலில்சிறுவர்கள், முதியவர்கள், பெண்கள், ஆண்கள் எனபல்லாயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். பலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வீதிகளில் அலைந்து திரியும் துர்ப்பாக்கிய நிலை இன்றும்தொடர்கிறது. முள்ளிவாய்க்கால் படுகொலையின் பின்னரும்அதற்குமுன்னரும்காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக இந்த அரசுதீவிரவிசாரணைசெய்யவேண்டும். அதற்கு அமைக்கப்பட்ட குழுக்கள் நியாயமாகச் செயற்பட வேண்டும். பாதிக்கப்பட்ட எமது சமூகத்துக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதில் நாங்கள்உறுதியாகஇருக்கின்றோம்.
காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் விரைவாகக் கண்டுபிடிக்கப்பட வேண்டும் அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதற்காக நாங்கள் இறைவனைப் பிரா ர்த்திக்கின்றோம்.
சிறைகளில் அரசியல் கைதிகளாக எமது பல உறவுகள் இன்னும் வாடிக் கொண்டிருக்கின்றனர். சிறு விடயங்களுக்காக கைதுசெய்யப்பட்டு பல வருடங்களாக வாடிக்கொண்டிருக்கின்ற அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும். நாங்கள் இத்தனை காலமாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் நீடித்து நிலைத்திருக்கும் அரசியல் தீர்வு விரைவில் கிடைக்க வேண்டும்எனபிரார்த்திப்போம். என்றார். (ற-21)



யாழ்/ முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் நேற்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. மாணவர்கள்உயிரிழந்தவர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். (ற)

# வாகரையில் நினைவேந்தல்



வாகரை, மே 19
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் 8 ஆம் ஆண்டு நினைவுகூரல் மட்டக்களப்பு - வாகரை மாணிக்கபுரம் வாவிக் கரையில் (வைத்திய சாலை வீதிக்கு அருகில்) நேற்று நடைபெற்றது.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தலைமையில் காலை 10 மணியளவில் நிகழ்வு ஆரம்பமானது.
நிகழ்வில் கலந்துகொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் போரில் உயிர்நீத்தவர்களின் உறவினர்கள் உயிர்நீத்த உறவுகளுக்காக மலர்தூவி அஞ்சலி செலுத்தியதுடன், நினைவுச் சுடர் ஏற்றினர். (ற)







முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று திருகோணமலை மனித உரிமைகள் மேம்பாட்டுக்கும், பாதுகாப்புக்குமான நிலையத்தில் நடைபெற்றது. திருகோணமலை மறைவாட்ட ஆயர் கிரிஸ்டியன் நோயல் இமானுவேலும், சமூக ஆர்வலர்களும், நலன் விரும்பிகளும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற)

## தமிழினப் படுகொலை நினைவேந்தல் மன்னாரில்





மன்னார், மே 19
மன்னாரில் நேற்றுத் தமிழினப் படுகொலை நினைவு நாள் நிகழ்வு உணர்வுபூர்வமாக நடைபெற்றது. மன்னார் பொது அமைப்புகளின் ஒன்றியம் நிகழ்வை ஏற்பாடு செய்தது.
முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் பொதுச் சுடரை முள்ளிவாய்க்காலில் தனது குடும்ப உறவுகள் 5 பேரை பறி கொடுத்த மேரி என்னும் தாய் ஏற்றி வைத்து நினைவேந்தல் நிகழ்வை ஆரம்பித்தார். மாலை அணிவத்து, மலர் தூவி உயிர் நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.
நினைவேந்தல் நிகழ்வில் சர்வமதத்தலைவர்கள், வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரணி எஸ்.பிரிமூஸ் சிறாய்வா, வைத்தியர் ஜீ.குணசீலன், ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ், மன்னார் பிரஜைகள் குழுவின் முக்கியஸ்தர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் பிரதிநிதிகள், மன்னார் சமாதான அமைப்பின் தலைவர் பீ.ஏ.அந்தோனிமார்க், மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய பிரதி நிதிகள், போரில் தமது உறவுகளை தொலைத்த உறவினர்கள் எனப் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.
(ற - 56)

# உணர்வுபூர்வமாக அமைய வேண்டும் அஞ்சலி நிகழ்வு

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

மன்னார், மே 19
ஆயிரம் பேரை ஒன்றுதிரட்டி முள்ளிவாய்க்கால் நினைவு அஞ்சலியை செலுத்துவதைக் காட்டிலும் உணர்வுள்ள ஒரு குறுகிய சமூகமாக இணைந்து நடத்துவது சாலச்சிறந்தது.
இவ்வாறு வடக்கு மாகாண சபை கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்தார்.
முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலைகளின் எட்டாவது ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வு நேற்று மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலக பகுதியில் உள்ள அடம்பன் நெடுங்கண்டல் பிரதேசத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார் என்று அவரது ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது:
எமது இனம் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்ற கனவுகளோடு தமது இன்னுயிர்களை உவந்தளித்த சகல போராளிகளுக்கும் அதேவேளை அநியாயமாக இழக்கப்பட்ட சகல தமிழ் மக்களதும் ஆன்மா சாந்தியடைய எமது அஞ்சலிகளை செலுத்துகின்றோம். அதேவேளை ஒருசில விடயங்களை இங்கு சுட்டிக்காட்டவேண்டிய தேவை உள்ளது. இந்த நிகழ்வை நாம் பார்க்கும்போது தமிழ் மக்களாகிய நாம் இழந்த இழப்புக்களை மறந்துவிட்டோமா என்ற ஓர் வினா எழுகின்றது.
மாந்தை மேற்கு பிரதேச மக்கள் போரில் மிகுதியான பாதிப்புக்களை சந்தித்தவர்கள், முள்ளிவாய்க்கால் வரை சென்று பல உறவுகளை இழந்தவர்கள் . இந்தப் பிரதேசத்தில் இந்த ஆண்டு நடத்துவதே சாலச்சிறந்தது என்று தீர்மானித்து அதனடிப்படையில் இந்த இடம் தீர்மானிக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.
இங்கு வந்திருக்கும் உறவுகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. அதனால்தான் நாங்கள் இவ்வாறான ஒரு கேள்வியை கேட்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.
என்னை பொறுத்தமட்டில் ஆயிரம் பேரை ஒன்று திரட்டி அஞ்சலி நிகழ்வுகளை நடத்துவதை விடவும் உணர்வோடு ஒரு குறுகிய சமூகமாக நாம் இணைந்து நடத்துவது சாலச்சிறந்தது என்று கருதுகிறேன். மரியாதை நிகழ்வில் உணர்வோடு கலந்து கொண்டு இழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்திய அனைத்து சொந்தங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார் - என்றுள்ளது. (ற - 21)

## வவுனியாவில் நினைவேந்தல்







வவுனியா, மே 19
வவுனியா செட்டிக்குளத்தில் நேற்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன. தமிழ் விருட்சம் அமைப்பின் ஏற்பாட்டில் நினைவேந்தல் நடைபெற்றது.
உயிரிழந்த உறவுகளுக்காக ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெற்றது. விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ற -21)



வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் உயிரிழந்த உறவுகளுக்கு நேற்றுக் காலை நந்திக் கடலில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். (ற -21)

# குறுகிய இடத்துள் முடக்கப்பட்டு கொல்லப்பட்டனர் தமிழ் மக்கள்

முல்லைத்தீவு, மே 19
வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மூன்று இலட்சம் தமிழ் மக்கள் மிகக் குறுகிய வெளிக்குள் முடக்கப்பட்டனர். உணவு, மருந்து உதவிகள் எதுவுமின்றி மக்களை அந்தரிக்க வைத்து, குண்டு வீச்சுகளால் அவர்கள் கொல்லப்பட்டு கொடூரமான முறையில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.
இவ்வாறு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன் தெரிவித்தார்.
இறுதிப்போரின் போது படுகொலைசெய்யப்பட்டவர்களை நினைவுகூரும் நிகழ்வு நேற்று முள்ளிவாய்க்காலில் நடைபெற்றது. அது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது:
தமிழ் இனத்தின் மீது அரசாலும், அதன் படைகளாலும் கட்டவிழ்த்துவிடப்பட்ட ஆகப் பிந்திய மிக மோசமான படுகொலையின் பெரும் துயரை நினைவேந்தும் நாள் இன்று (நேற்று). இறுதிக்கட்டப் போரின் போது பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் ஈவிரக்கமின்றி அரச படைகளால் கொன்று குவிக்கப்பட்ட நாளை. ஈழத்தின் மானிடப் பேரவலம் நடந்தேறிய நாளை நினைவுகூர்ந்து வருடந்தோறும் கடைப்பிடிக்கப்படும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழ்பேசும் மக்களின் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றன. 2009 மே மாதத்தின் 12ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் தமிழ் மக்களின் அவலச் சாவு உச்சத்தில் இருந்தது. மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் போர் முடிவுக்கு வந்தது.
மே 12ஆம் திகதியிலிருந்து 18ஆம் திகதி வரையிலான வாரத்தை தமிழின அழிப்பு வாரமாக, முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் வாரமாக தமிழர்கள் பிரகடனப்படுத்திக் கடைப்பிடிக்கின்றனர். இறுதி நாளான மே 18 ஆம் திகதி நினைவேந்தல் நிகழ்வுக ளையும் பெருமெடுப்பில் நடத்தி வருகின்றனர்.
இறுதிப் போர் நினைவுகளை மீள் நிறுத்தி, தமிழின விடிவுக்காக மூச்சடங்கிப் போனவர்களுக்கும், கொத்தாகக் கொன்றொழிக்கப்பட்ட உறவுகளுக்காகவும் கடைப்பிடிக்கப்படும் நினை வேந்தல் நிகழ்வுகளில் உலகத் தமிழ் மக்கள் பங்கேற்கின்றனர். என்றுள்ளது. (ற -21)





முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலயத்தில் மே 18 நினைவேந்தல் நிகழ்வு நேற்றுக் காலை 9.30 மணியளவில் நடைபெற்றது. 3 நிமிட அமைதி அஞ்சலியுடன் தொடங்கிய நினைவேந்தல் நிகழ்வில் பொதுச்சுடரை பள்ளிமுதல்வர் சி.பாஸ்கரன் ஏற்றினார். தொடர்ந்து ஆசிரியர்கள் சுட்டிவிளக்குகளை ஏற்றினர். தொடர்ந்து பாடசாலை மாணவர்கள் நினைவேந்தல் தளத்தில் மலர் அஞ்சலிகளையும் வரிசையாக நிகழ்த்தினர். (ற)

### கொக்குளாய் கரையில் சட்டத்துக்குப் புறம்பான மீன்பிடி:

# நீதிமன்ற உத்தரவை மீறியமைக்கான தனி வழக்குப் பதிவு செய்ய உத்தரவு

முல்லைத்தீவு, மே 19

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குளாய் கடற்கரையில் நீதிமன்ற உத்தரவை மீறி தொடர்ந்து தொழில் புரிந்தமை தொடர்பிலும், அவ்வாறு தடைவிதிக்கப்பட்டதை நடைமுறைப்படுத்தத் தவறிய திணைக்களம் தொடர்பிலும் தனித்தனியான வழக்குகளைத் தாக்கல் செய்யுமாறு கூறி வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குளாய் கடற்கரையில் உள்ளூர் மீனவர்களின் பயன்பாட்டுக்காக பிரதேச செயலாளரால் வாடி அமைப்புக்கென வழங்கப்பட்ட நிலப்பரப்புக்குள் தென்னிலங்கை மீனவர்களுக்கான கரைவலைப் பாட்டுப் பகுதிக்குள் உள்ளடங்குவதால் அந்த வாடியைத் தடை செய்ய வேண்டும் என 3 தென்னிலங்கை மீனவர்களின் சார்பில் நீரியல் வளத் திணைக்களம் கடந்த ஆண்டு ஜூலை மாதம் முல்லைத்தீவு நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்தது.

அதையடுத்து உள்ளூர் மீனவர்கள் அந்தப் பகுதியில் தொழில் புரிய இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது. வழக்கு தொடர்ந்தும் இடம்பெற்றது. கடந்த மார்ச் மாதம் 14ஆம் திகதிய வழக்கின் போது வாடி அமைப்புக்காக வழங்கப்பட்ட பிரதேசம் தென்னிலங்கை மீனவர்களின் கரை வலைப் பாட்டுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிக்குள் அடங்கவில்லை என பிரதேச செயலாளரால் அரச நில அளவையாளரின் அளவீட்டு ஆவணம் ஊடாக முல்லைத்தீவு நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

> “ கடந்த மார்ச் மாதம் 14ஆம் திகதிய வழக்கின்போது வாடி அமைப்புக்காக வழங்கப்பட்ட பிரதேசம் தென்னிலங்கை மீனவர்களின் கரை வலைப் பாட்டுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிக்குள் அடங்கவில்லை என பிரதேச செயலாளரால் அரச நில அளவையாளரின் அளவீட்டு ஆவணம் ஊடாக முல்லைத்தீவு நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தில் வாடி அமைந்துள்ள பகுதி தென்னிலங்கை மீனவர்களுக்கு வழங்கப்பட்ட பகுதியில் இருந்து 375 மீற்றருக்கும் அப்பாலேயே உள்ளது என பிரதேச செயலாளரினால் அரச நில அளவையாளர் மூலம் மேற்கொண்ட அளவீட்டின் ஆவணத்தில் நில அளவைத் திணைக்கள அதிகாரியும் ஒப்பமிட்டிருந்தார்.

நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் பிரதேச செயலாளரால் மன்றில் சமர்ப்பித்த நில அளவை வரைபடத்தை இரத்துச் செய்து அந்தப் பகுதியை கரைவலைப்பாடு தொழில் புரிபவர்களிடமே வழங்க வேண்டும் எனக் கோரியிருந்தனர்.

அந்தப் பகுதியை சகல தரப்பின் பிரசன்னத்துடன் மீண்டும் அளவை செய்யுமாறு நீதிபதி கட்டளையிட்டிருந்தார். இதன் பிரகாரம் நில அளவீடு இடம்பெற்ற சமயமும் தென்னிலங்கை மீனவர்கள் குறுக்கீடு செய்தனர். அந்தப் பகுதியில் தொழில் புரிவதற்கு உள்ளூர்ப் படகுத் மொழிலாளர்களுடன் தென்னிலங்கை கரைவலைத் தொழிலாளர்களிற்கும் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவை பிறப்பித்தது.

இது தொடர்பாக வழக்கு நேற்று மன்றில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது. உள்ளூர் மீனவர் சங்கம் சார்பில் சிரேஸ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தலைமையிலான சட்டத்தரணிகள் முன்னிலையாகினர்.

நீதிமன்றின் ஆணையை மீறியும் கரவலைப்பாடு தொழிலாளர்கள் தொடர்ந்தும் தொழில் புரிவது சட்டத்தரணிகளால் மன்றின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. உள்ளூர் மீனவர்களின் மீன்பிடிக்கு அனுமதிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டது. அந்தப் பகுதி நிலத்தை சட்டமுறைமையாக மீனவர் சங்கத்திடம் வழங்க வேண்டும் என்றும் கோரப்பட்டது.

இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த நீரியல்வளத் திணைக்களத்தின் பிரதிநிதிகள் குறித்த விடயம் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை கோறப்பட்டுள்ளது. அதுவரை கால அவகாசம் தேவை என்றனர்.

இவற்றை ஆராய்ந்த நீதவான் நீதிமன்ற உத்தரவை மீறி தொடர்ந்தும் தொழில் புரிந்தமை தொடர்பிலும் அவ்வாறு தடைவிதிக்கப்பட்டதனை நடைமுறைப்படுத்த தவறிய திணைக்களம் தொடர்பிலும் தனியான வழக்குத் தாக்கல் செய்யுமாறு கூறி வழக்கை ஒத்திவைத்தார்.

(ற - 101)

## பேருந்திலிருந்து விழுந்த நடத்துநர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, மே19

பேருந்திலிருந்து தவறி விழுந்து படுகாயமடைந்த நடத்துநர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

மட்டக்களப்பு வாழைச்சேனை இலங்கைப் போக்குவரத்துச் சாலையில் கடமை புரியும் 35வயதுடைய எச்.முஹம்மது அன்வர் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 9ஆம் திகதி மட்டக்களப்பிலிருந்து பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்ட பேருந்து கதுறுவெல பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகப் பயணித்தபோது நடத்துநர் பேருந்திலிருந்து தவறிக் கீழே வீதியில் விழுந்துள்ளார்.

தலையிலும் உடம்பிலும் படுகாயமடைந்த அவர் உடனடியாக பொலன்னறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

தொடர்ந்து அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக்காலை உயிரிழந்துள்ளார்.

(ற -ய.46)

## முகமாலை அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் வழிபாடு

பளை, மே 19

17 வருடங்களின் பின்னர் முகமாலை அன்னை வேளாங்கண்ணி ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கொட்டகையில் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு விசேட கூட்டுத் திருப்பலி வழிபாடும் சாலையோரத்தில் அமைக்கப்பட்ட திருச்சொரூப ஆரம்ப நிகழ்வும் இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2000ஆம் ஆண்டு ஆலய வளாகத்தில் காணப்பட்ட ஆலயம் குருமனை, பங்குமனை போன்ற கட்டடங்களும் பாடசாலைக் கட்டடமும் போரால் முற்றாக அழிவடைந்தன. 2002 ஆம் ஆண்டு சமாதான கால வேளையில் படைமுகாமுக்கு அருகில் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அழிவடைந்த கட்டடங்களைக் காணமுடிந்தது. அங்கு நடப்பட்டிருந்த திருச்சிலுவை மட்டும் சேதங்களுடன் முழுமையாகக் காணப்பட்டது.

2011 ஆம் ஆண்டு முகமாலை வடக்குப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட போதிலும் ஆலயம் சீரமைக்கப்படவில்லை. அண்மையில் முகமாலை தெற்குப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பின்னர் யாழ்.மறை மாவட்ட ஆயரின் வேண்டுகோளின் பிரகாரம் பங்கு மக்களின் அனுசரணையுடன் ஆலாய வளாகத்தில் தற்காலிகமாக சிறிய ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த ஆலயத்தில் முதல் வழிபாடு நாளை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(ற - 9)

## வாள்வெட்டு: மாணவர் இருவருக்கு பிணை வழங்கக் கோரி மனு

யாழ்ப்பாணம்.மே.19

வாள்வெட்டுக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறையில் இருப்பவர்களில் இரு மாணவர்களுக்கு பிணை கோரி விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மடத்தடியில் இடம்பெற்ற வாள்வெட்டுச்சம்வத்துடன் தொடர்புடையவர்கள் என்று கைது செய்யப்பட்டு, பின்பு பிணையில் விடு விக்கப்பட்டு பின்பு தீர்ப்புக்கு திகதி யிடப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார்கள். கடந்த 16ஆம் திகதி இவர்களுக்கான தீர்ப்பு வழங்கப்பட்டது. தீர்ப்பில் குற்றஞ்சா ட்டப்பட்ட எட்டு பேரில் மூவருக்கு மூன்று வருடங்கள் சிறைத் தண்டனையும் ஐந்து பேருக்கு ஒரு வருடச்சிறைத்தண்டனையும் அளிக்கப்பட்டது. இவர்களுக்குள் மாணவர்களும் உள்ளடங்குகின்றனர். நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் இரண்டு மாண்வர்கள் சார்பில் முன்னிலையாகியிருந்தார். மாணவர்கள் இருவருக்கும் ஒரு வருடச்சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

இந்த வழக்கு இரண்டு மாணவர்களையும் அவர்களது கல்வி நடவடிக்கையில் தொடர்ந்தும் ஈடுபடுவதற்காக பிணையில் விடுவிக்க வேண்டும் என்று பிணைமனுக்கோரி நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரனும், வடமாகாண சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான கே.சயந்தனும். சட்டத்தரணி மு.றெமீடியஸ்சும் யாழ். நீதவான் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். பிணைமனுவைப் பரிசீலனை செய்த மன்றின் நீதிபதி பிணையோடு சம்பந்தப்பட்ட கட்டளைக்காக வழக்கை இம்மாதம் 23ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

(ற -12)

## டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கை 22ஆம் திகதி

சாவகச்சேரி மே 19

சுகாதார அமைச்சின் விசேட டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் தொடர்பாக சாவகச்சேரி சுகாதார திணைக்களத்தின் நடவடிக்கைகள் எதிர்வரும் 22ஆம் மற்றும் 23 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

22 ஆம் திகதி சாவகச்சேரி நகரப் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட மீசாலை கிழக்கு மேற்குப் பகுதிகளிலும் 23 ஆம் திகதி கோயிற்குடியிருப்பு, சங்கத்தானை, கல்வயல் ஆகிய பிரிவுகளிலும் டெங்குக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் நடைபெறும் என்றும், அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது குடியிருப்புகள் மற்றும் காணிகளை துப்பரவாக வைத்திருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இரு தினங்களும் டெங்கு தொடர்பாக காணிகளையும் குடியிருப்புகளை பார்வையிடவரும் அலுவலர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் டெங்குப் பிரிவினரால் விசேட டெங்குக் கட்டுப்பாட்டு செயற்பாடுகளை நேற்றும், இன்றும் நடத்துமாறு அறிவிக்கப்ட்டிருந்தது. இந்தத் தினங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறுவதை முன்னிட்டு மாகாண சுகாதார அமைச்சுல் எதிர்வரும் 22 மற்றும் 23ஆம் திகதி களில் நடத்த ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

(ற -9)

# பச்சிலைப்பள்ளி மாணவருக்கான பேருந்துச் சேவைகளை நடத்துக

## பிரதேச மக்கள் கோரிக்கை

பளை, மே. 18

பச்சிலைப்பள்ளிப் பிரதேச மாணவர்களின் நலன் கருதி பாடசாலை பேருந்துச் சேவைகளை நடத்த வேண்டும் என்று பிரதேச பொது அமைப்புகள் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிச் சாலைகளின் முகாமையாளர்களை கேட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலைகள் காலை 7.30 மணிக்கு ஆரம்பிக்கப்படுகின்றன. தென்மராட்சிப் பிரதேச பாடசாலைகள் மற்றும் யாழ்ப்பாணப் பாடசாலைகள் போன்றவற்றில் கற்கும் பச்சிலைப்பள்ளிப் பிரதேச மாணவர்கள் பாடசாலைப் பேருந்துச் சேவைகள் இன்றி சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எழுதுமட்டுவாழ் வரையுமான மாணவர்களை காலை வேளைகளில் தூர இடங்களிலிருந்து வரும் இ.போ.ச. பேருந்துகள் ஏற்றாமல் செல்வதால் மாணவர்கள் உரிய நேரத்திற்கு பாடசாலைக்குச் செல்ல முடிவதில்லை. இதே போன்று எழுதுமட்டுவாழ் சந்தியிலிருந்து பளையில் உள்ள பாடசாலைகளில் கற்கும் மாணவர்களும், இயக்கச்சி பாடசாலையில் கற்கும் மாணவர்களும் இ.போ.ச.பேருந்து கிடைக்காததால் தினமும் வகுப்புக்குப் பிந்திச் செல்கின்றனர். இதனால் அவர் களின் கற்றல்நடவடிக்கை களில் பின்தங்கியுள்ள னர்.

> “ எழுதுமட்டுவாழ் வரையுமான மாணவர்களை காலை வேளைகளில் தூர இடங்களிலிருந்து வரும் இ.போ.ச. பேருந்துகள் ஏற்றாமல் செல்வதால் மாணவர்கள் உரிய நேரத்திற்கு பாடசாலைக்குச் செல்ல முடிவதில்லை.

முன்னைய காலத்தில் பளையிலிருந்தும் ஆழியவளையிலிருந்தும் வரும் இ.போ.ச.பேருந்துகள் பாடசாலை மாணவர்களை ஏற்றி வந்து கொடிகாமத்திலிருந்து புறப்படும் பாடசாலை சேவையில் இணைத்து விடுவர். தற்போது காலை 7.30 மணிக்கு பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுவதால் அவ்வாறு நடப்பதில்லை.

தினமும் காலையில் பளையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான பாடசாலை பேருந்து சேவையை ஆரம்பித்து முன்னரைப்போன்று கொடிகாமத்திலிருந்து செல்லும் பாடசாலை பேருந்துடன் இணைந்து பயணிக்க ஆவண செய்ய வேண்டும்.

இதனால் மாணவர்களின் எதிர்கால கல்வி மேம்பாட்டுக்கு உதவ வேண்டும் என்று பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புகள். பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ற -9)

# பிரபாகரனை அஞ்சலிப்பது அச்சுறுத்தலாகாது

## கூறுகிறார் சரத் பொன்சேகா



கொழும்பு, மே 19
உயிரிழந்த புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு உறவினர்கள் இருந்தால் அவர்கள் அவரது சாவை நினைவு கூருவது தப்பில்லை. அது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலுமில்லை என்று அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.
களனியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டின் பாதுகாப்பு தொடர் பிலான பொறுப்பை ஓய்வுபெற்ற படை அதிகாரிகளால் ஏற்க முடியாது. போர் நிறைவையொட்டி நாட்டில் பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. வடக்கு-கிழக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்வுகள் இன்று சர்ச்சையைக் கிளப்பியுள்ளன. வருடா வருடம் இந்தச் சர்ச்சை ஏற்படுவது வழமைதான்.
உயிரிழந்த புலிகளை நினைவு கூரமுடியுமா. புலிகளின் தலைவர் பிரபாகரனை நினைவு கூர முடியுமா என்ற கேள்வி இப்போது முன்வைக்கப்படுகிறது. பிரபாகரனை நினைவு கூர முடியும் என்பதுதான் எனது நிலைப்பாடு. பிரபாகரனுக்கு உறவினர்கள் யாரும் இருந்தால் அவரை நினைவு கூர முடியும். அவருக்காகத் தீபம் ஏற்றவும் அன்னதானம் கொடுக்கவும் முடியும். இது ஒருபோதும் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையாது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் பிரபாகரனின் மச்சான் என்று கூறுகின்றார். அவர் உறவினர் என்றால் அவராலும் நினைவு கூர முடியும்.
நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் படையினரின் நலன்கள் பற்றியும் போரால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் நலன்கள் பற்றியும் தேடிப் பார்க்க வேண்டும். போர் முடிந்த பின் இவர்களின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றதா என்று தேடிப் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றார். (த-3)

# ஜேர்மன் உதவியுடன் பறக்கும் அம்புலன்ஸ்

## இலங்கையில் விரைவில் சேவை

கொழும்பு, மே 19
நாடு முழுவதும் தரை வழியாகவும், வான் வழியாகவும் நோயாளர் காவுவண்டிச் சேவைகளை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டத்துக்கு ஜேர்மன் அரசு உதவ முன்வந்துள்ளது.
ஜேர்மனின் பென்ஸ் நிறுவனமும், ஏயார் பஸ் நிறுவனமும் இதற்கான முதலீடுகளை மேற்கொள்ளவுள்ளன. இலவசமான முறையில் இது செயற்படுத்தப்படவுள்ளது என்று சுகாதார அமைச்சுத் தகவல்கள் கூறுகின்றன.
ஜேர்மன் சென்றுள்ள அமைச்சர் ராஜித சேனாரத்ன, ஜேர்மனின் பொருளாதார நிதித்துறை அதிகாரிகளுடன் நடத்திய பேச்சைத் தொடர்ந்து இதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.
இயற்கை இடர்கள், அவசர விபத்துக்கள் என்பனவற்றின்போது, நோயாளர்களை ஏற்றிச் செல்ல ஜேர்மனின் ஏயார் பஸ் நிறுவனம் 24 உலங்குவானூர்திகளை வழங்கவுள்ளது.
நாடளாவிய ரீதியில் ஆயிரத்து 50 அம்புலன்ஸ் வண்டிகளும், 240 இடர் வாகனங்களும் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளன. இந்திய அரசின் அம்புலன்ஸ் சேவையின் ஊடாக இலங்கை மக்களுக்கான பெரும் சேவைகள் இடம்பெறுகின்றன. ஜேர்மன் உதவியுடன் இந்தச் சேவையை விரிவான முறையில் மேற்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும். குறைந்த வட்டி வீதத்தின் கீழ் இந்த முதலீடு இடம்பெறவிருக்கிறது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-4-10)



முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்களுக்கு முள்ளிவாய்க்கால் கடற்கரையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அஞ்சலி செலுத்தினர். முள்ளிவாய்க்காலில் பரா 3 கப்பல் கரையொதுங்கிய பகுதியில் ஒழுங்குபடுத்தப்பட்ட இடத்தில் இரண்டு மாவீரர்களின் தாயால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. தாயைப் பறிகொடுத்த மகனால் கல்லறைக்கு மலர் மாலை அணியப்பட்டது. (ற-7)

# சந்தேகநபர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மே 19
குற்றம் நிரூபிக்கப்படாததால் ஒருவர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார்.
2013ஆம் ஆண்டு செம்ரெம்பர் மாதம் 29ஆம் திகதி இரவு கோண்டாவிலுக்கும் உப்புமடச்சந்திக்கும் இடையில் இடம்பெற்ற விபத்தில் மோட்டார்ச் சைக்கிளில் பயணித்த மூன்று நண்பர்கள் காயமடைந்தனர்.
இதில் ஒருவர் பிடரிப்பகுதியில் அடிபட்டு காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த நிலையில் ஏழு நாள்களின் பின்னர் உயிரிழந்தார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் காயமடைந்தவர்கள் யாரோடு மோதினார்களோ அவர்மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நடைபெற்றுக்கொண்டிருந்தது.
இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றின் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் விசாரணைக்காக வந்தது. இதன்போது பொலிஸாரால் விபத்து தொடர்பில் சரியான காரணங்களை முன்வைக்க முடியவில்லை. குற்றஞ்சாட்டப்பட்டார் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார். (ற-12)

# மரண அறிவித்தல்

பிறப்பு
04
02
1955



இறப்பு
15
05
2017

## திருமதி வனிதாகாந்தி தில்லைநடராஜா

பருத்தித்துறை புலோலி கிழக்கு புலோலியை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட வனிதாகாந்தி தில்லைநடராஜா அவர்கள் 15.05.2017 அன்று அதிகாலை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி தில்லைநடராஜா அவர்களின் அன்பு மனைவியும் பிருத்தாகாந்தி - சுபசீலன் (லண்டன்), வருணகாந்தி (லண்டன்), நிர்ஷாகாந்தி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுபசீலன் (லண்டன்) அவர்களின் மாமியாரும், காலஞ்சென்ற ராதாகாந்தி (கனடா), லலிதாகாந்தி (கொழும்பு - கல்கிசை), ஜெயாகாந்தி (அமெரிக்கா), லதாகாந்தி (கனடா), பிரபாகாந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சஞ்சீவ்காந்தி, சுகிர்தாகாந்தி, நிருத்திகாகாந்தி, ராஸீலா, மயூரி ஆகியோரின் அன்பு பெரியம்மாவும், ஜெஷேன், டோற்வா, நிகாரிகா, ஆர்த்திகா, சாயிகிருத்திக், கஜானன் ஆகியோரின் அன்பு அத்தையும், ஜெகசோதி, இரத்தினேஸ்வரி, இராஜலஷ்மி, யோகராசா ஆகியோரின் அன்பு அண்ணியும், கலா (கனடா), அமரர் அரியரட்ணம் (கொழும்பு), விக்னேஸ்வரி (அமெரிக்கா) புஸ்பகாந்தன் (கனடா), மித்திராதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 20.05.2017 மகிந்த மலர்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, 21.05.2017 ஞாயிற்றுக்கிழமை அன்று அன்னாரின் இறுதிக்கிரியை மு.ப. 11.00 மணியளவில் மகிந்த மலர்சாலையில் நடைபெற்று பின்னர் கல்கிசை பொது மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: பிள்ளைகள், வருணாகாந்தி: 00447488733233, சுபன் : 0769499131

# மரண அறிவித்தல்

தோற்றம்
29
.
02
.
1936



மறைவு
17
.
05
.
2017

## திருமதி பரமேஸ்வரி நல்லையா

யாழ்.நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி நல்லையா 17.05.2017 புதன்கிழமை நீர்வேலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானை தம்பதிகளின் அருமை மருமகளும், காலஞ்சென்ற நல்லையாவின் அன்பு மனைவியும், பரஞ்சோதி, பவளரத்தினம், பகவதி, பத்மநாதன், காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் பாலசுப்பிரமணிம் (ஜேர்மனி), பஞ்சாதேவி, பரிமளம், காலஞ்சென்ற பத்மராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சந்திரகுமார், இந்திரகுமார் (லண்டன்), வசந்தகுமாரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், மகேஸ்வரி, வசந்தாதேவி (லண்டன்), பத்மநாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும், சோபனா, வினோத், சாதனா, அஜிதா, நர்த்தனா, கீர்த்திகா, ஆர்த்திகா, இந்துஷா, இந்துசன், லக்சா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், யதுஷன், மாதங்கி, தஸ்மிகன், நிவேதன், நித்திலன், நிலவன், ஓவியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பின்னர் பூதவுடல் நீர்வேலி தெற்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரந்தன் வீதி,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

தகவல்
பத்மநாதன் (தம்பி),
சந்திரகுமார் (மகன்).

(CS/ 4036)(11)

# அமைச்சரவையை மாற்றினால் பெரும் பிரளயம் வெடிக்குமாம்

## எச்சரிக்கின்றார் பிரியந்த எம்.பி.

கொழும்பு, மே 20
பெரும் இக்கட்டான நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி மைத்திரிக்கு செய்த உதவியை அவர் அடியோடு மறந்துவிட்டார். அவரது சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்திக்கொள்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின்ரின் அமைச்சுப் பதவிகளைப் பறித்தால் பெரும் பிரளயம் உண்டாகும்.

இவ்வாறு புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஷோக்க பிரியந்த எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் தேசிய தோட்டத் தொழிலாளர்கள் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடந்த வைபவமொன்றில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

> ஐக்கிய தேசியக் கட்சியின் உதவியில்லாமல் மைத்திரி ஜனாதிபதியாகியிருக்க முடியாது. அந்த உண்மையை அவர் மறந்துவிட்டார் என்பது அவரது தற்போதைய நடவடிக்கைகளிலிருந்து தெரியவருகின்றது. ஜனவரி 8ஆம் திகதியும் ஒகஸ்ட் 17ஆம் திகதியும் மைத்திரியை ஏறிட்டுப் பார்க்காமல் இருந்த பலர் இன்று அவருக்குத் தாளம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உதவியில்லாமல் மைத்திரி ஜனாதிபதியாகியிருக்க முடியாது. அந்த உண்மையை அவர் மறந்துவிட்டார் என்பது அவரது தற்போதைய நடவடிக்கைகளிலிருந்து தெரியவருகின்றது.

ஜனவரி 8ஆம் திகதியும் ஒகஸ்ட் 17ஆம் திகதியும் மைத்திரியை ஏறிட்டுப் பார்க்காமல் இருந்த பலர் இன்று அவருக்குத் தாளம் போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

மைத்திரி தனது சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்திக்கொள்வதற்காக அமைச்சரவையில் மாற்றங்களைச் செய்தால் பெரும் பிரச்சினைகள் ஏற்படும். என்றார். (ற)

# சு.கவின் பேச்சாளராக தயாசிறி இணக்கம்

சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சரவைப் பேச்சாளராக செயற்படுவதற்கு விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர இணக்கம் தெரிவித்துள்ளார்.

இந்தப் பதவிக்குப் பொருத்தமான ஒருவரைத் தேர்ந்தெடுக்குமாறு ஜனாதிபதி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதம செயலாளரும் அமைச்சருமான மஹிந்த அமரவீரவுக்கும் சிறி லங்கா சுதந்திரக்கட்சியின்சிரேஷ்ட உப தலைவரும் அமைச்சருமான அநுர பிரியதர்ஷன யாப்பாவுக்கும் பணிப்புரை விடுத்திருந்தார்.

அவர்கள் இருவரும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலரிடம் இது தொடர்பில் வினவியபோதும் தயாசிறி ஜயசேகர மாத்திரமே அந்தப் பதவியை ஏற்க சம்மதம் தெரிவித்திருக்கிறார்.

தயாசிறி ஜயசேகரவின் சம்மதம் பற்றி அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராய்ந்த பின்னர் இறுதி முடிவு எடுக்கப்படுமென அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்திருக்கிறார். (ற)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் கற்பிக்கும்
திருமதி யஸ்ரின் யூலியட் தேவசகாயராசா
அவர்களின் தாயாரான
**திருமதி யேசுதாசன் திரேசம்மா**
அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யா/கொட்டடி நமசிவாய வித்தியாலய சமூகத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆலய பிரதம குரு
**சோ.பால கிருஸ்ணக்குருக்கள் (குஞ்சன் ஐயா)**
அவர்களின் அருமைச் சகோதரன்
**சோமசுந்தரஐயர் சுப்பிரமணியக்குருக்கள்**
அவர்கள் 16.05.2017 அன்று சிவபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபை**
**கோண்டாவில் மேற்கு, கந்தர்வளவு**
**ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் கோயில் (காளி கோயில்)**

# இரணைதீவு மக்களுடைய போராட்டம் தொடர்கிறது

கிளிநொச்சி, மே 19
சொந்த இடங்களில் தம்மை மீளக்குடியமர்த்த வேண்டும் என வலியுறுத்தி இரணைதீவு மக்கள் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை யாழ். ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் நேற்று முந்தினம் காலை சந்தித்துக் கலந்துரையாடினர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேசசெயலாளர் பிரிவுக்கு உட்பட்ட இரணைதீவு மக்களின் காணிகளையும், வீடுகளையும் கடற்படையினர் ஆக்கிரமித்துள்ள நிலையில் மக்கள் கடந்த பல வருடங்களாக இடம்பெயர்ந்து நாச்சிக்குடாவில் இரணை மாதா நகரில் வாழ்கின்றனர்.

அவர்கள் எங்களது சொந்தக் காணிகளை விடுவித்து தங்களது சொந்த நிலத்தில் தம்மை மீளக் குடியமர்த்த வேண்டும் என்று வலியுறுத்தி கடந்த பல நாள்களாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.


போராட்டத்தின் 17ஆவது நாளான நேற்று முந்தினம் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் சென்று அந்த மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அவருடன் கொழும்பு மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் சி.பாஸ்கராவும் கலந்து கொண்டுள்ளார். யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையும் மக்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் தேவைகள் தொடர்பில் கேட்டறிந்தார். (ற-21)



## 7ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
**சந்திரசேகரம் நடேசபிள்ளை**
(ஓய்வுநிலை அதிபர் - யா/ சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்)

தோற்றம் 21.03.1937
மறைவு 06.06.2010



அன்பின் இருப்பிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் இலக்கணமாய் குடும்ப வம்ச விளக்காய் ஒளிர்ந்து
உறவுகளை வாழவைத்து வழிகாட்டிய
எமது அன்பின் குலவிளக்கே!
ஏழாண்டுகள் ஆனாலும் நூறாண்டுகள் ஆனாலும்
நெஞ்சைவிட்டகலாது உங்கள் நினைவுகள்....
ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. **குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



அமரர் அப்பர்
**உமாபதிசிவம்**
(மறவன்புலவு - கச்சாய்)

தோற்றம் 29.07.1959
இறப்பு 31.05.2016

திதி:- தசமி

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் விளங்கி இறைபதம் எய்திய எம் குடும்பத் தலைவரின் முதலாம் ஆண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வு 21.05.2017 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறவுள்ளது. அனைத்து அன்பு உறவுகளையும் ஆத்மசாந்தி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கச்சாய் தெற்கு,கொடிகாமம்.
077 634 1284
மனைவி - கலைமதி
பிள்ளைகள்.(கச்சாய் வீரபத்திரர் ஆலயம்)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் இராமநாதபுரம், வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் தற்போது இல. 257, உதயநகர் கிழக்கில் வசித்து வந்தருவமான

**அமரர் தர்மலிங்கம் மகேஸ்வரி**

கடந்த 19.04.2017 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் தர்மலிங்கம் மகேஸ்வரி அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், நேரிலும் தொலைபேசியிலும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (19.05.2017) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்**
(நாயகி பல்பொருள் வாணிபம்)
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளை, பூட்டப்பிள்ளை
**077 321 1302**

**இல.257, உதயநகர் (கிழக்கு)**
**கிளிநொச்சி.** (AKN) (134)

## விபத்தில் இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், மே 19
யாழ்ப்பாணம் சாவகச்சேரி நுணாவில் ஏ9 வீதியில் இராணுவ வாகனம் ஒன்று வீதியால் பயணித்த மினிபஸ், பட்டா ரக வாகனம், மோட்டார் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் என 4 வாகனங்களை மோதியது. அதில் இருவர் படுகாயமடைந்தனர். இராணுவத்தினரின் பேருந்து ஒன்றே விபத்தை ஏற்படுத்தியது.

கனகம்புளியடி நுணாவில் வீதியிலிருந்து ஏ 9 வீதிக்கு பயணிக்க முயன்ற இராணுவ வாகனம் ஏ 9 வீதியில் பயணித்த பட்ட ரக வாகனத்துடன் மோதுண்டது.

பேருந்துத் தரிப்பிடத்தில் தரித்து நின்ற பயணிகள் போக்குவரத்து சிற்றூர்தி, வீதியால் பயணித்த மோட்டார்க் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவற்றையும் மோதியது.

பட்டா ரக வான்கத்தில் பயணித்த இருவர் படுகாயமடைந்த நிலையில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ந-9)

## மைத்திரி இல்லையேல் ஐ.தே.க. எதிர்க்கட்சியே

*அமைச்சர் எச்.டபிள்யூ.குணசேன சுட்டிக்காட்டு*

கொழும்பு, மே 19
மைத்திரிபால சிறிசேன பொது வேட்பாளராகப் போட்டியிட்டிருக்காவிட்டால் ஐக்கிய தேசியக் கட்சி இன்னும் எதிர்க்கட்சியாகவே இருந்திருக்கும் என்பதை அந்தக் கட்சியின் பின் வாங்கு (பெஞ்ச்) உறுப்பினர்கள் நினைவில் வைத்துக் ள்ளவேண்டும்.

இவ்வாறு தென் மாகாண கடற்றொழில் அமைச்சர் எச்.டபிள்யூ. குணசேன தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கால்நடை மற்றும் கைத்தொழில் திணைக்களத்தின் ஊழியர்கள் மத்தியில் ஏற்பட்ட சச்சரவை நீக்கிவைப்பதற்காக கடந்த செவ்வாய்க்கிழமை அங்கு சென்றிருந்தபோதே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது
புதிய அரசொன்றை நாங்கள் அமைக்க விரும்பினால் பொது எதிரணியில் ஏராளமானவர்கள் முன்வரக் காத்திருக்கிறார்கள். அமைச்சரவையில் மாற்றமொன்று நடக்கவே வேண்டும். தங்களது கடமைகளை ஒழுங்காகச் செய்யாதவர்களும், ஊழல் மோசடிக்காரர்களும், இரட்டை வேடம் போடுபவர்களும் கட்டாயமாகநீக்கப்படவேண்டும். ரணில் விக்கிரமசிங்க ஓடச்சொன்னால் ஓடுகின்ற, பாயச் சொன்னால் பாய்கின்ற முதுகெலும்பற்ற வர்கள் அரசுக்குத் தேவையில்லை. அத்தகையவர்கள் அரச தலைவருக்கு தலையிடியைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

பின் பெஞ்சு ஐ.தே.கவினர் ஆகாயத்தை நோக்கிக் குதித்தால் நிச்சயமாக கீழே விழவேண்டுமென்பதை நன்றாக மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். என்றார்.(ற)

**மகோற்சவக்காலக் கடைகள் ஏலம்**

எமது ஆலய மகோற்சவம் 30.05.2017 அன்று ஆரம்பிக்கவுள்ளது. எனவே மகோற்சவக் காலக் கடைகளை ஏலம் எடுக்க விரும்பும் வர்கள் எதிர்வரும் ஞாயிறு (21.05.2017) காலை 11.30 மணியளவில் எமது ஆலய முன்றலில் கூடுமாறு வேண்டுகிறோம்.

**தர்மகர்த்தாக்கள் சபை**
**அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்.**

**வருடாந்த வைகாசிப் பெருவிழா - 2017**

இடம் : சந்நிதியான் ஆச்சிரமம்
காலம் : 21.05.2017 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணி

பஞ்சபுராணம் - மங்கள விளக்கேற்றல்
வரவேற்புரை:
கவிமணி க. ஆனந்தராசா (அன்னைதாசன்)
ஆசியுரை:
நல்லை ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய ஸ்வாமிகள்
தலைமையுரை:
ஆ.சிவநாதன் (அதிபர்)
சிறப்புரைகள்:
செஞ்சொற் செல்வன் இரா.செல்வவடிவேல் (ஆசிரியர்)
திரு. சி.பத்மநாதன் (இளை. பிரதேச மக்கள் வங்கி வடபிராந்திய முகாமையாளர்)
வாழ்துப்பா
திரு துரை. கணேசமூர்த்தி (ஆசிரியர்)
விருது பெறுபவர்: "(வியாவில் ஐயனார் தேவஸ்தான அறங்காவலர்)"
திரு.க.சோமசேகரம் (மகாராணி)
விருது வழங்குபவர்: "(ஞானதானவள்ளல்)"
திரு.செ.மோகனதாஸ் சுவாமிகள் (சந்நிதியான் ஆச்சிரமம்)
சேவைக்குரிய கௌரவம்:
மருத்துவர் லயன் S.S.அருளானந்தம் அவர்கள்
சிறப்பு நிகழ்வுகள்: வில்லிசை : "மகளிர் நிறை காக்கும் காப்பே தலை"
வழங்குபவர்கள் : ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய மாணவர்கள்
இன்னிசை வழங்குபவர் : செல்வி இ. லீலாவதி (பக்கவாத்திய சகிதம்)
(காரைநகர் கிழவன்காடு கலாமன்ற இசை ஆசிரியர்)
நன்றியுரை:
வழமைபோன்று ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய காலை பூசை வழிபாட்டினைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமத்தில் விழா நிகழ்வுகள் இடம்பெறும்.
அனைவரும் வருக!
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை
சந்நிதியான் ஆச்சிரமம் (ஏ.கே.ஏ. 2116)

## கட்டுப்பாட்டு விலையில் அரிசியை விற்க முடியாத நிலைமை

*வவுனியா வர்த்தக சங்கம் சுட்டிக்காட்டு*

வவுனியா, மே 19
நிர்ணயிக்கப்பட்ட விலையில் அரிசியை விற்பனை செய்ய முடியாதுள்ளது என்று வவுனியா வர்த்தக சங்கம் தெரிவித்தது. வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் அண்மையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீன், வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், கே.கே.மஸ்தான் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே வர்த்தக சங்கம் இந்த கோரிக்கையை முன்வைத்தது.

அரிசியை கொழும்பில் 92 ரூபாவுக்கே கொள்வனவு செய்ய முடிகிறது. அங்கிருந்து இங்கு கொண்டு வரும் பாரவூர்திக் கூலி, ஏற்றி இறக்கும் கூலி, வர்த்தகருக்கான இலாபம் என்பனவற்றை வைத்தே விற்க வேண்டும். இப்படி இருக்கையில் நிர்ணய விலையான 80 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியவில்லை.

உள்ளூர் நெல்லையும் பொலன்னறுவை போன்ற வெளியிடங்களில் இருந்து வருபவர்கள் அதிக பணம் கொடுத்து கொள்வனவு செய்கிறார்கள். அதனால் நாங்களும் அதிக விலைக்கு கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதால் அரிசியை கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்ய முடியவில்லை. இதனால் கட்டுப்பாட்டு விலை தொடர்பில் ஒரு மீளாய்வு செய்யுமாறு வர்த்தக சங்கம் கேட்டுக் கொண்டது.

அதற்கு பதிலளித்த இணைத்தலைவரும், வர்த்தக கைத்தொழில் அமைச்சருமான றிசாட், கட்டுப்பட்டு விலைக்கு கூடிய விலையில் விற்பனை செய்தால் நடவடிக்கை எடுக்குமாறு கூறப்பட்டுள்ளது.

கட்டுப்பாட்டு விலைக்கு விற்க முடியும் என நினைக்கிறேன். தற்போது கூறப்பட்டுள்ள விடயம் தொடர்பில் மீள பரிசீலனை செய்யப்படும் என்றார். (ந-21)

## கொழும்பு வைத்தியசாலையில் உடல்கள் தேக்கம்

கொழும்பு, மே 20
கடந்த பல மாதங்களாக உறவினர்களால் பொறுப்பேற்கப்படாத நிலையில் பத்து உடலங்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் தேங்கிக் கிடக்கின்றன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

இதில் எட்டு ஆண் உடலங்களும் இரண்டு பெண் உடலங்களும் உள்ளடங்குவதாகவும், இவற்றை அடையாளம் காட்டுவதற்கு பொது மக்களிடம் பல வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டும் இதுவரை அவற்றை அடையாளம் காட்டிப் பொறுப்பேற்க எவரும் முன்வரவில்லை எனவும், உடலங்கள் தொடர்பான விவரங்களை தேசிய வைத்தியசாலையின் பொலிஸாருடனோ அல்லது பொலிஸ் தலைமையகத்திலுள்ள பொதுமக்கள் தொடர்புப் பிரிவிலோ பெற்றுக்கொள்ளமுடியுமென பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ற)

**வேலையாள்கள் தேவை**
மிக்சர் கம்பனி ஒன்றிற்கு பெண் பிள்ளைகள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
**077 631 6273**

**தேவை**
சாவகச்சேரியில் இயங்கும் சிற்றுண்டி நிலையத்திற்கு ரீ மேக்கர் தேவை.
077 163 3470

**மணமகள் தேவை**
யாழ் இந்து கௌரவ குடும்பம் 1991 உத்தரட்டாதி இலண்டன் PR உள்ள அழகிய மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. சகல விவரங்களுடன் viber இற்கு அனுப்பி வைக்கவும். (CS 3701) (22.17)
Viber- 076 702 1622, T.P- 077 211 6772

**மணமகள் தேவை**
யாழ் இந்து கௌரவ குடும்பம் 1979 ரேவதி 3 இல் சூரி. செவ். புதன் குற்றமில்லை. IT அட்வான்ஸ் டிப்ளோமா இயன் மருத்துவ சிகிச்சையாளர். அரச தொழில் புரியும் மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. சகல விவரங்களுடன் viber இற்கு அனுப்பி வைக்கவும். (CS3701) (22.17)
Viber- 076 702 1622, T.P- 077 211 6772



**World Class British Degree @ ICBT Jaffna Campus**
Apply now for New Intake 2017
Accredited by EQAA European Quality Assurance Agency

**ICBT HND QUANTITY SURVEYING**
» Entry Qualifications
- G.C.E. A/L or Equivalent
- Certificate in related field

» Duration: 2 Years
★ All HND's are equal to NVQ Level 06
★ All HND's are mapped to British qualification frame work (NQF Level 5)

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

BIRMINGHAM CITY University
RICS Accredited
**BSc (Hons) Quantity Surveying**
» Entry Qualifications
Higher National Diploma in Quantity Surveying or any other accepted programs.
UGC
Week End Part Time Classes
» Duration: 1 Year
Progression Route to RICS: BSc + APC → MRICS DEGREE COMPLETION IN SRI LANKA
0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk
National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner Education Service Sector

# தடுப்பிலுள்ள ஆண்களுக்கு பாலியல் துன்புறுத்தல்

*அனைத்துல மனித உரிமை அமைப்பு குற்றச்சாட்டு*

கொழும்பு,மே 19
இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னரும், சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆண்கள் பலர் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இவ்வாறு அனைத்துலக மனித உரிமை அமைப்பு ஒன்று குற்றஞ்சாட்டியு ள்ளது.
அமெரிக்காவைச் சேர்ந்த மனித உரிமைகள் அமைப்பொன்றின் ஆய்வு அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர்கள் மீதான சித்திரவதையாக, பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன. ஆண்கள் அதிகளவில் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். ஆனால் அது குறித்த தகவல்கள் வெளிவருவதில்லை. சமூகக் களங்கம் மற்றும் சட்ட ரீதியாக ஓரினச் சேர்க்கைக் குற்றம் என்பதாலும் பாதிக்கப்பட்டவர்கள் இதுபற்றி வெளிப்படுத்த முன்வருவதில்லை.
37 வருடங்கள் உள்நாட்டுப் போரில் பாலியல் துன்புறுத்தல்கள் அதிகம் இடம்பெற்றன. எனினும், பெண்கள் தொடர்பான துன்புறுத்தல் வழக்குகளைப் போலன்றி, தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது தாம் அதிகம் துன்புறுத்தப்பட்டோம் என்று ஆண்கள் ஒப்புக் கொண்டனர்.
போரின் போதும், போருக்குப் பின்னரும் தமிழர்களுக்கு எதிராக, ஆண்கள் மீதான பாலியல்துன்புறுத்தல்கள் இடம்பெற்றதற்கான பதிவுகளை ஆவணப்படுத்தியுள்ளோம்.
ஆண்களுக்கும், சிறுவர்களுக்கும் எதிரான பாலியல் வன்முறைகள் பற்றிய முழுமையாக தகவல்கள் தெரியவில்லை. ஆண்கள் மற்றும் சிறுவர்களுக்கு் எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் மே 2009 இல் போர் முடிவுக்கு வந்த பின்னரும் நிறுத்தப்படவில்லை, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட மற்றும் தடுத்து வைக்கப்பட்ட ஆண்கள் பாலியல் துன்புறுத்தல்களைச் சந்திக்கும் சம்பவங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. போருக்குப் பின்னர் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆண் சந்தேக நபர்கள் கொடூரமாக, மனிதாபிமானமற்ற வகையில் நடத்தப்பட்டனர் - என்றுள்ளது.(ஐ - 10)

# பௌத்த தீவிரவாதிகள் மீது அவசர நடவடிக்கை தேவை

*பிரதி அமைச்சர் ஹரீஸ் கோரிக்கை*



கொழும்பு,மே 19
பௌத்த தீவிரவாதிகள் மீது அவசரமாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இனவாதச் செயற்பாட்டு பிரதானியான ஞானசார தேரர் மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில், ஏனைய செயற்பாட்டாளர்கள் அடங்கிப் போகின்ற நிலை ஏற்பட வழிவகுக்கும். இல்லாவிட்டால் முஸ்லிம் இளைஞர்களும், மக்களும் பொறுமை இழந்து வீதிக்கு வருகின்ற போது பெரும் விபரீதம் ஏற்படும்.
இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் வேண்டுகோள் விடுத்தார்.
முஸ்லிம்களுக்கு எதிராக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவருகின்ற இனவாதச் செயற்பாடுகள் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"பௌத்த தீவிரவாதிகள் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொண்டு வரும் வன்செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் ஞானசார தேரரின் காட்டுமிராண்டித்தனமான இனவாதக் கருத்துக்கள் மற்றும் செயற்பாடுகள் முஸ்லிம்களைப் பீதியடையச் செய்துள்ளன.
அண்மையில் பொலனறுவை ஒனேகம பிரதே சத்துக்குச் சென்று இவர்களின் மற்றுமொரு இனவெறியாட்டத்தை அரங்கேற்றி இருக்கின்றனர். இதன்போது ஞானசார தேரர் முஸ்லிம்களின் ஏக இறைவனான எல்லாம் வல்ல அல்லாஹ்வையும், புனித அல்குர்ஆனையும் தூசித்து மிக மோசமாகப் பேசி இருக்கின்றார். இது முஸ்லிம்களைச் சண்டைக்கு வலிந்திழுக்கின்ற செயலாகவே இருக்கின்றது.
அதேவேளை வெள்ளம்பிட்டி, கொஹிலவத்தை இப்றாஹிமியா ஜும்மா பள்ளிவாசல் மீது இனவாதிகளால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அத்தோடு மூதூர் செல்வநகர் அருகிலுள்ள முஸ்லிம் கிராமத்தில் இனவாதிகள் காடைத்தனம் புரிந்துள்ளனர்.
இவர்கள் வெறிநாய் போன்று தொடர்ச்சியாக இனங்களுக்கிடையில் காணப்படும் நல்லிணக்கத்தையும், நல்லுறவையும் சீர்குலைக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றனர்.
முன்னாள் அரச தலைவர் சந்திரிகா இந்த நல்லாட்சியை உருவாக்குவதற்கான தேர்தல் காலப் பரப்புரையின் போது நாங்கள் ஆட்சிக்கு வந்தால் முஸ்லிம்களுக்கு எதிராக இனவாதமாகச் செயற்படுகின்ற ஞானசார தேரரை நாயை இழுத்துச் சென்று அடைப்பது போன்று சிறைக்குள் தள்ளித் தகுந்த நடவடிக்கை எடுப்போம் என்று கூறி மக்களின் வாக்குப் பெற்று ஆட்சிக்கு வந்தார். எதிர்வரும் புனித ரம்ழான் நோன்புக் காலத்தில் முஸ்லிம்கள் அதிகமாக இரவு நேர வணக்கங்களில் ஈடுபடுகின்ற சூழ்நிலையில், இனவெறியர்களின் இவ்வாறானசெயற்பாடு முஸ்லிம்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. தம்மை தற்காத்துக் கொள்ளவேண்டிய தேவையும் உருவாக்கப்பட்டுள்ளது"- என்றார்.(ஐ -10)

## பிரச்சினைகளை மூடி மறைக்க முயற்சிக்கிறது அரசு

*ஜி.எல். பீரிஸ் குற்றச்சாட்டு*

கொழும்பு,மே 19
அரசிலுள்ள தகுதியற்ற அமைச்சர்களை நீக்காமல், அமைச்சரவை மாற்றம் செய்யப் போவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் செயல் தலைவலிக்குத் தலையணை மாற்றுவதற்கு ஒப்பான நடவடிக்கை ஆகும்.
இவ்வாறு முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.
தகுதியற்ற, ஊழல்கள் மேற்கொள்ளும் அமைச்சர்கள் யார் என்பது நாட்டுக்குத் தெரியும். இத்தகையவர்களுக்கு இன்னுமொரு அமைச்சை வழங்குவது பிரச்சினைக்குத் தீர்வல்ல. அரசு பிரச்சினைகளை மூடிமறைக்க நடவடிக்கை எடுக்கிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.
(ஐ- 10)

## உயரமான பட்டத்தை வடிவமைத்து நுவரெலியா நபர் உலக சாதனை

ஆயிரத்து 240 அடி உயரமான பிரமாண்டமான பட்டமொன்றைத் தயாரித்து நுவரெலியா மீபிலிமானவைச் சேர்ந்த நபர் ஒருவர் உலக சாதனை படைத்துள்ளார். நூறு சேலைகளைப் பயன்படுத்தி மீபிலிமான டோனி அல்லது வர்ல்ட்ஸன் டோனி என அழைக்கப்படும் குமார பந்துல என்பவரே இந்தச் சாதனையாளராவார். மீபிலிமான ஸ்ரீ கல்லூரி மைதானத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இந்தப் பட்டத்தின் மொத்த எடை 38 கிலோ கிராம் எனவும், வேறொருவரின் உதவியும் இல்லாமல் தனது சொந்தச் செலவில் இந்தப் பட்டத்தைத் தயாரித்திருப்பதாகவும் அவர் கூறினார். (ஐ)

## பன்னல சூட்டுச் சம்பவம்; இரு இளைஞர்கள் கைது

கொழும்பு, மே 19
பன்னல பகுதியில் கடந்த 5 ஆம் திகதி ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பன்னல பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய. கைது செய்யப்பட்ட அவர்கள். 20 மற்றும் 28 வயது மதிக்கத்தக்கவர்கள். இருவரும் கோனவிலப் பகுதியைச்சேர்ந்தவர்கள்என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது.
சந்தேகநபர்களை குளியாபிட்டிய நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று மன்னிலைப்படுத்தப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ -10)

## அம்பாந்தோட்டை வழக்கு ஒத்திவைப்பு.

அம்பாந்தோட்டை முதலீட்டு வலய விவகார வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
அம்பாந்தோட்டை முதலீட்டு வலய காணி விவகாரம் தொடர்பில் கடந்த ஜனவரி 7ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தை அடுத்து, கைது செய்யப்பட்டவர்கள் குறித்து சட்டமா அதிபரின் அறிவுரை இதுவரை கிடைக்கப் பெறவில்லை என்பதால் வழக்கு விசாரணைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, எதிர்வரும் நவம்பர் 27 ஆம் திகதிக்கு இந்த வழக்கு விசாரணைகளை ஒத்தி வைக்க அம்பாந்தோட்டை நீதிவான் மஞ்சுல கருணாரத்ன நேற்று உத்தர விட்டார். இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்ட 39 சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ - 10)

MedExpo
Jaffna 2017 International Healthcare and Medical exhibition
வடக்கின் மாபெரும் சுகாதாரக் கண்காட்சி
இந் நிகழ்வில் கலந்து கொண்டு அனைவரும் பயன்களை பெறலாம்
மே
19 20 21
ஆகிய திகதிகளில்
10.00 am - 6.30 pm
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்
+ வைத்தியசாலைகள்
+ மருத்துவ உபகரணங்கள்
+ மருந்து வகைகள்
+ ஆயுர்வேதம் - சித்தமருத்துவம்
+ ஒப்பனையும் அழகுசாதனமும்
+ FMCG
+ உணவு மற்றும் போசாக்கு
+ ஆயுட் காப்புறுதி
+ மருத்துவக் கல்வி

வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் ஏற்பாட்டில் உயிரியல் கண்காட்சி
பிரசித்தி பெற்ற இந்திய மருத்துவர்களினால் மகப்பேறு இல்லாத தம்பதியர்களுக்கு இலவச ஆலோசனைகள் வழங்கப்படுகின்றது
பதிவுகளுக்கு : 0773436927
www.evolutionecs.com
Platinum Sponsor
International Fertility & Research Centre
experience the miracle
Official Cosmeceutial Partner
ARPL
Harcourts
Official Healthcare Partner
Northern Central Hospital
Official Event Partner
Official Print Media Partner
Official Electronic Media Partner
Official Digital Media Partner
Event Organized by
Evolution
Events and Corporate Services
Supported by
Provincial Department of Education Northern Province
Jaffna Municipal Council







அமெரிக்க அதிபர் ட்ரம்ப், ஐ.எஸ்.ஐ.எஸ். எதிரான ஆயுததாரிகள் தொடர்பான இரகசியக் கோப்புக்களை ரஷ்யாவுக்கு வழங்கினார் என்று அமெரிக்க ஊடகங்கள் குற்றம்சாட்டியுள்ள நிலையில் அவருக்கு எதிராக வெள்ளைமாளிகையில் கடந்த சில தினங்களாக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. ட்ரம்ப், ரஷ்ய அதிபர் புடினின் கைப்பொம்மை, ட்ரம்ப் புடினின் நாய்க்குட்டி போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர். (ம)

## வானூர்தி மூலம் உலகை தனியாகச் சுற்றும் பெண்

காபுல், மே 19

ஆப்கானிஸ்தானின் பெண் விமானி தனியாக உலகைச் சுற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இவர் தனது பயணத்தை அமெரிக்காவின் புளோரிடாவில் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி முடிக்கவுள்ளார்.

யஸ்தா என்ற 23 வயதுப் பெண்ணே இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள டேடோனா கடற்கரை வானூர்தி நிலையத்தில் இருந்து கடந்த 13 ஆம் திகதி தனது பயணத்தைத் தொடங்கினார். அங்கிருந்து ஸ்பெயின், எகிப்து, இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா உள்ளிட்ட 18 நாடுகளுக்கு செல்ல முடிவு செய்துள்ளார். இதன் மூலம் உலக நாடுகளை வானூர்தியில் தனியாகச் சுற்றிய இளம் பெண் என்ற பெருமையைப் பெறுகிறார். (ம)





# ஏமனில் கொலரா தீவிரம்: 200 பேர் பரிதாப உயிரிழப்பு

சனா, மே 16

ஏமனில் கொலரா நோய் பரவி வருவதையடுத்து கிட்டத்தட்ட 200 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 12 ஆயிரத்து 500 பேர் நோயின் தாக்கத்துக்கு உட்பட்டுள்ளனர். இதனால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கும் என்று பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கம் அச்சம் வெளியிட்டது.

கடந்த மாதம் இறுதி வாரத்தில் இருந்தே நோயின் தாக்கம் மிகவும் தீவிரத்தன்மையுடன் பரவி வந்தது என்று சொல்லப்படுகிறது.

ஏமனில் ஓராண்டுக்குள் இரண்டாவதுமுறையாக கொலரா நோய் பரவியுள்ளது. நோயாளிகளின் சடுதியான அதிகரிப்பால் ஒரே படுக்கையில் 4 கொலரா நோயாளிகளை வைத்துப் பராமரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த அவசர நிலையை அடுத்து, தெற்கு சூடான், நைஜீரியா, சிரியா ஆகிய நாடுகளுடன் மனிதாந்த நெருக்கடிமிகுந்த பட்டியலில் உலக சுகாதார அமைப்பு ஏமனையும் சேர்த்துள்ளது. இந்த நிலை நீடித்தால் ஏமன் குழந்தைகளின் மோசமான ஆண்டாக இந்த வருடம் பதிவாக வாய்ப்புள்ளது என்று கருதப்படகிறது. (ம)



## தென்சீனக் கடல்பரப்பில் ரொக்கெட் லோஞ்சர்கள்

### சீனா மற்றொரு அதிரடி

பிஜிங், மே 19

சர்ச்சைக்குரிய தென்சீனக்கடல் பகுதியில் செயற்கைத் தீவுகளை அமைத்து இராணுவத் தளங்களை உருவாக்கி வரும் சீனா தற்போது ரொக்கெட் லோஞ்சர்களையும் அந்தப் பகுதியில் நிலை நிறுத்தத் திட்டமிட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

தென்சீனக் கடல் பகுதியில் உள்ள சில தீவுகளைச் சொந்தம் கொண்டாடுவதில் பிலிப்பைன்ஸ், வியட்நாம், சீனா ஆகிய நாடுகளுக்கிடையே பிரச்சினைகள் தொடர்ந்து வருகின்றன. இந்தப் பிரச்சினை தொடர்பாகப் பன்னாட்டு தீர்ப்பாயத்தில் சில வழக்குகளும் நிலுவையில் உள்ளன. இந்தக் கடல் பரப்பில் அவ்வப்போது இராணுவப் பயிற்சிகளை சீனா மேற்கொள்ளும். இதனால், பன்னாட்டுச் சமூகத்தின் கண்டனத்துக்கும் அது ஆளாகும்.

இந்த வரிசையில் மற்றொரு அதிரடி நகர்வாகத் தென்சீனக் கடல்பரப்பில் ரொக்கெட் லோஞ்சர்களை நிறுத்த சீனா திட்டமிட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



## நாய்க்கு சாவுத்தண்டனை

இஸ்லாமபாத், மே 19

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாண நீதிமன்றம் நாய்க்கு சாவுத் தண்டனை விதித்து தீர்ப்பிட்டுள்ளது. குழந்தையைக்கடித்த குற்றத்துக்காகவே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது என்று சொல்லப்படுகிறது. மனிதாபிமான அடிப்படையில் இந்த உத்தரவைப் பிறப்பிக்கப்பட்டது என்று நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன என ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

நாய் செய்த தவறுக்காக, அதன் வளர்ப்பாளர் ஜமீல் என்பவருக்கு ஏற்கனவே ஒரு வார சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அவரும் அந்த தண்டனையை அனுபவித்து விட்டு வெளியே வந்துள்ளார். தற்போது, தனது நாய்க்கு விதிக்கப்பட்ட சாவுத் தண்டனையை எதிர்த்து அவர் வழக்குத் தொடர்ந்துள்ளார். (ம)



ர
ட்
ஏ
அமெ

வொஷிங்
அமெரிக்
வியூகங்
குற்றம் ச
எழுந்து
ரஷ்ய அ
அதிபர் ட்
ஆயுததா
செய்திக
அதிர்வ
அமெரிக்
மக்கள்
முன்னா
தவிர தே
தொடர்பி
ஜேம்ஸ்
குற்றவா
குறிப்பிட்
இந்த வி
அமெரிக்
குறிப்பிட்
செர்ஜிக்
வழங்கத்

# செங்குத்தான தாவரத் தோட்ட


கொலம்பியாவின் போகோட்டா நகரின் மத்தியில் தாவரங்களால் சூழப்பட்ட 11 மாடிக் கட்டடம் ஒன்று உள்ளது. இதற்கு சாண்டாலியா என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடத்தில் 33 ஆயிரம் சதுர அடிக்கு தாவரங்கள் வளர்க்கப் படுகின்றன. இது உலகிலேயே மிகப் பெரிய செங்குத்தான தோட்டம் என்ற சிறப்பைப் பெற்றிருக்கிறது. ஸ்பெயின் நிறுவனமும் கொலம்பியாவின் க்ரான்கோல் நிறுவனமும் இணைந்து 8 மாதங்களில் இந்தத் தோட்டத்தை உருவாக்கியுள்ளன. இதில் 10 வகைகளில் ஒரு லட்சத்து 15 ஆயிரம் தாவரங்கள் இருக்கின்றன.

செங்குத்தாக உள்ள இந்தத் தோட்டத்துக்கு தண்ணீர் விடுவதும் தேவையான ஊட்டச் சத்துகளை அளிப்பதும் சவாலானதாக இருந்தது. பலகட்ட ஆய்வுக்குப் பிறகு பிரத்யேகமான பாசன முறையை இந்தத் தோட்டத்துக்குப் பயன்படுத்தி வருகிறார்கள். அதிகப்படியான நீர் சுவர்களில் சேமிக்கப் பட்டு, மீண்டும் பயன் படுத்தப்பட்டு வருகிறது. மனிதர்கள் வெளியேற்றும் கழிவுநீரைச் சுத்திகரித்து, தாவரங்களுக்குப் பயன்படுத்துகிறார்கள்.

3 ஆயிரத்து 100 மனிதர்களுக்கு ஓராண்டுக்குத் தேவையான ஒக்சியனை இந்தத் தோட்டம் வழங்குகிறது. தீங்கு விளைவிக்கக் கூடிய 2 ஆயிரம் தொன் வாயுக்களையும் 400 கிலோ தூசிகளையும் வடிகட்டுகிறது. 745 கார்கள் வெளியிடும் கார்பனை சுத்தம் செய்கிறது. கோடை காலத்தில் வீட்டுக்குள் செல்லும் வெப்பத்தின் அளவைக் குறைக்கின்றன.

இதனால் குளிர்சாதனத்தின் பயன்பாடு குறைகிறது. இது போன்ற செங்குத்து தோட்டங்களை உருவாக்குவது காலத்தின் கட்டாயம் என்கிறார் இந்தத் தோட்டத்தை உருவாக்கியவர்களில் ஒருவர். (ம)





# ரஷ்யாவுடன் ட்ரம்புக்குத் தொடர்புண்டு

## அமெரிக்காவில் கடும் எதிர்ப்பலை

வாஷிங்டன், மே 19

அமெரிக்க அதிபர் ட்ரம்ப், ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கு எதிரான வியூகங்களை ரஷ்யாவுக்கு வழங்கினார் என்று அமெரிக்க ஊடகங்கள் குற்றம் சாட்டியதை அடுத்து அங்கு அவருக்குத் தற்போது கடும் எதிர்ப்பலை எழுந்துள்ளது.

ரஷ்ய அயலுறவுத் துறை அமைச்சர் செர்ஜி லாரவ் அண்மையில் அமெரிக்க அதிபர் ட்ரம்பை வொஷிங்டனில் சந்தித்துப் பேசினார். அப்போது ஐ.எஸ். ஆயுததாரிகள் தொடர்பான ரகசிய தகவல்களை ட்ரம்ப் வழங்கினார் என்று செய்திகள் வெளியாகின. இந்த விவகாரம் அமெரிக்க அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகிறது.

அமெரிக்க ஊடகங்களின் இந்தச் செய்திகளை அடுத்து, ட்ரம்புக்கு எதிராக மக்கள் கொதிப்படைந்துள்ளனர். இதனால் அந்த நாட்டின் மத்திய ஊளவுத்துறை முன்னாள் தலைவர் ஜேம்ஸ் கோமே விசாரணைக்கு உத்தரவிட்டிருந்தார். அதிபர் தேர்தல் பரப்புரையில் ட்ரம்புக்கு ரஷ்யா உதவியதா என்பது தொடர்பிலும் விசாரணை நடத்துமாறும் அவர் தெரிவித்தார். இதனையடுத்து ஜேம்ஸ் கோமேயை பதவி நீக்கினார் ட்ரம்ப். இந்தப் பதவி நீக்கம் ட்ரம்ப் குற்றவாளி என்பதைக் காட்டுகிறது என்றும் அந்த நாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன.

இந்த விவகாரத்தில் ரஷ்ய அதிபர் புடின் தற்போது தடையிட்டுள்ளார். அவர் அமெரிக்கா எவ்வித இரகசியத் தகவலையும் வழங்கவில்லை என்று குறிப்பிட்டார். தேவைப்பட்டால் அமெரிக்க நாடாளுமன்றத்தில், ட்ரம்புக்கும் செர்ஜிக்கும் இடையில் நடந்த உரையாடல் தொடர்பான அறிக்கைகை வழங்கத் தயார் என்றும் புடின் மேலும் தெரிவித்தார். (ம)




# கேள்வி கோருதல்
# மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

1. தலைவர். மாவட்டச் செயலக பெறுகைக்குழு சார்பில் மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம். கண்டி வீதி. யாழ்ப்பாணத்திற்காக கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான தற்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.
2. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
3. கேள்வியாளர்கள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA/ICTAD) கட்டட நிர்மாணம், நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகால் என்பவற்றுக்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை கொண்டிருப்பதோடு கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும். அத்துடன் 30.09.2016 ஆம் திகதிய பொது நிதி சுற்றறிக்கை இல: 04/2016(i) இன் பிரகாரம் கேள்வியாளர்களினது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை பதிவு மற்றும் வியாபார அல்லது நிறுவனப் பதிவு வடமாகாணத்துக்கு உட்பட்டதாகவிருத்தல் வேண்டுமென இக்கேள்விகள் வரையறை செய்யப்பட்டுள்ளது.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV (Section IV) இலும். மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) / கேள்வி தரவுகள் மற்றும் ஒப்பந்த தரவுகள் இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது..
5. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய கேள்வியாளர்கள் கீழ்வரும் விலாசத்தில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன். இம் முகவரியில் 9.00 மணியிலிருந்து 15.00 மணிவரை அலுவலக நாள்களில் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம்.

**மாவட்டத் திட்டமிடல் செயலகம்,**
**மாவட்ட செயலகம்,**
**கண்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
Tel: 021-222 2427 021 -222 0637

6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 19.05.2017 முதல் 09.06.2017 வரை 9.00 மணியிலிருந்து 15.00 மணி வரையான** காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையினை கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு கட்டணமாகச் (பணமாகச்) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. கேள்விகள் **12.06.2017 ஆம் திகதியன்று 11.00 மணிக்கு** அல்லது அதற்கு முன்னர் **தலைவர், மாவட்ட செயலக பெறுகைக்குழு, மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் **நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு வேலைக்குமான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதரவிரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் கேள்வி கோரல் முடிவுற்ற உடனேயே கேள்விகள் திறக்கப்படும்.
8. முற்கேள்விச் சபைக் கூட்டம் **மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்** எனும் விலாசத்தில் **01.06.2017 அன்று 10.00** மணிக்கு நடைபெறும்.
9. கேள்வி விலைமனுவின் இறுதிநாளிலிருந்து அட்டவணையில் குறிப்பிடப்பட்ட நாட்கள் வரை செல்லுபடியுடையதாக இருத்தல் வேண்டும்.
10. சகல கேள்விகளுக்கும் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. ஒவ்வொரு கேள்விகளும் தனித்தனியே பகுப்பாய்வு செய்யப்பட்டு ஏற்புத்தன்மையுடைய குறைந்த பகுப்பாய்வு செய்யப்பட்ட கேள்வியுடைய ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்படுவார்.

| கேள்வி அடையாள இல | வேலை விவரம் | மீளளிக்கப்படாத தொகை (ரூபா) | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணை விவரம். | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தொகை | தேவைப்படும் காலம். |
| JF/DPS/ONUR/EEP/IV/08/2017 | விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலைய கட்டடம் நிர்மாணித்தல் | 1,000.00 | 2.47 | 90 நாள்கள் | C8 (கட்டடங்கள்) | 24,700.00 | 25.09.2017 வரை |
| JF/DPS/ONUR/EEP/IV/09/2017 | இறுப்பிட்டி உவர்நீர் தடுப்பணை அமைத்தல்- வேலணை | 1,500.00 | 8.46 | 120 நாள்கள் | C7 (நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகால்) | 84,600.00 | 25.09.2017 வரை |
| JF/DPS/ONUR/EEP/IV/11/2017 | சுருவில்குளம் புனரமைத்தல் - ஊர்காவற்றுறை | 1,000.00 | 3.04 | 90 நாள்கள் | C8 அல்லது மேல் (நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகால்) | 30,400.00 | 25.09.2017 வரை |
| JF/DPS/ONUR/EEP/IV/12/2017 | கிளுவாணைக்கேணி புனரமைத்தல் - காரைநகர் | 1,000.00 | 2.77 | 90 நாள்கள் | C8 அல்லது மேல் (நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகால்) | 27,700.00 | 25.09.2017 வரை |
| JF/DPS/ONUR/EEP/IV/13/2017 | பொன்னாலை கரையோரப் பிரதேசத்தில் உவர்நீர் தடுப்பணை அமைத்தல் | 1,500.00 | 6.55 | 120 நாள்கள் | C7 (நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகால்) | 65,500.00 | 25.09.2017வரை |
| JF/DPS/ONUR/EEP/IV/14/2017 | அராலி மத்தி வெள்ள அணை புனரமைத்தல் | 1,000.00 | 4.22 | 90 நாள்கள் | C8 அல்லது மேல் (நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகால்) | 42,200.00 | 25.09.2017 வரை |
| JF/DPS/ONUR/EEP/IV/15/2017 | உடுவில் பெரியகுளம் மற்றும் வாய்க்கால் புனரமைத்தல் | 1,000.00 | 3.38 | 90 நாள்கள் | C8 அல்லது மேல் (நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகால்) | 33,800.00 | 25.09.2017 வரை |
| JF/DPS/ONUR/EEP/IV/16/2017 | ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் நிர்மாணித்தல் - பளை வீமன்காமம் | 1,000.00 | 4.20 | 90 நாள்கள் | C8 (கட்டடங்கள்) | 42,000.00 | 25.09.2017 வரை |
| JF/DPS/ONUR/EEP/IV/17/2017 | பெரியஇராவளைக்குளம் புனரமைத்தல் - சாவகச்சேரி | 1,000.00 | 2.53 | 90 நாள்கள் | C8 அல்லது மேல் (நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகால்) | 25,300.00 | 25.09.2017 வரை |
| JF/DPS/ONUR/EEP/IV/18/2017 | பெரியதூவில்குளம் புனரமைத்தல் - சாவகச்சேரி | 1,000.00 | 2.51 | 90 நாள்கள் | C8 அல்லது மேல் (நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகால்) | 25,100.00 | 25.09.2017 வரை |
| JF/DPS/ONUR/EEP/IV/19/2017 | ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் நிர்மாணித்தல் - விடத்தற்பளை, சாவகச்சேரி | 1,000.00 | 4.20 | 90 நாள்கள் | C8 (கட்டடங்கள்) | 42,000.00 | 25.09.2017 வரை |
| JF/DPS/ONUR/EEP/IV/20/2017 | அம்பலாந்துறை சிலிவில் வாய்க்கால் திருத்தம் - சாவகச்சேரி | 1,000.00 | 2.02 | 90 நாள்கள் | C8 அல்லது மேல் (நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகால்) | 20,200.00 | 25.09.2017 வரை |
| JF/DPS/ONUR/EEP/IV/21/2017 | ஆனைவிழுந்தான்குளம் மற்றும் வாய்க்கால் புனரமைத்தல் - கரவெட்டி | 1,000.00 | 3.37 | 90 நாள்கள் | C8 அல்லது மேல் (நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகால்) | 33,700.00 | 25.09.2017 வரை |
| JF/DPS/ONUR/EEP/IV/22/2017 | நெல்லியடி மீன் சந்தை புனரமைத்தல் - | 1,000.00 | 2.94 | 90 நாள்கள் | C8 (கட்டடங்கள்) | 29,400.00 | 25.09.2017 வரை |
| JF/DPS/ONUR/EEP/IV/24/2017 | மணற்காடு மீன் சந்தை புனரமைத்தல் | 1,000.00 | 2.66 | 90 நாள்கள் | C8 (கட்டடங்கள்) | 26,600.00 | 25.09.2017 வரை |

**நா.வேதநாயகன்,**
**மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்.**

(AJA/TN/ 2086)(11)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## கூட்டு அரசின் போக்கு மாற்றம் பெறவேண்டும்

கொழும்பு அரசின் போக்கை அச்சொட்டாக, அப்பட்டமாக வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்திருக்கிறது பன்னாட்டு நெருக்கடிகள் குழுவின் அறிக்கை. மாற்றம் என்ற முழக்கத்துடன் 2015ஆம் ஆண்டு தை மாதம் தொடங்கிய இந்த ஆட்சியின் விறுவிறுப்பு படிப்படியாகக் குறைந்து - கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிப் போனது. வழக்கமான சிங்கள, பௌத்த அரசியல் மாயைக்குள்ளேயே இந்த அரசும் சிக்கிக் கொண்டுள்ளது என்பதை குறித்த அறிக்கை தெள்ளத் தெளிவாகக் குறிப்பிடுகிறது.

"அரச தலைவராக மைத்திரிபால சிறிசேன பதவியேற்ற முதல் 9 மாதங்களில் அரசின் சீரமைப்புகள் மளமளவென்று நடந்தேறின. அதன் பின்னர் வேகம் தணிந்து தவளத் தொடங்கின; அல்லது எதுவுமே நடக்காமல் போயின. இப்போது சமூ கப் பதற்றம் அதிகரித்து வருகின்றது. அரசின் கூட்டுக்குள் வெடிப்புகள் தோன்றத் தொடங்கிவிட்டன. புதிய அரசமைப்பு, நாடாளுமன்றத்தின் ஊடாகவா அல்லது பொது வாக்கெடுப்பு ஒன்றின் ஊடாகவா உருவாக்கப்படும் என்பது தெளிவற்றுள்ளது.

குற்றவாளிகளைத் தண்டிக்காமல் விடும் இலங்கையின் போக்கைச்சரிசெய்யும்வகையில்தேசியபாதுகாப்புஅமைப்புகளில் அரச தலைவரோ தலைமை அமைச்சரோ காத்திரமானசிலமாற்றங்களைச்செய்தால்அதுஇனங்களுக்குஇடையில்உடனடியாகஅமைதியின்மையைஉருவாக்குவதுடன் பாதிப்பையும் ஏற்படுத்துகிறது. "

இவ்வாறு தெரிவிக்கிறது அறிக்கை. கள நிலைமையை அப்படியேபடம்பிடித்துக்காட்டுவதைப்போன்றுஇருக்கிறதுஇது.

அதில் கூறப்பட்டிருப்பதைப் போன்றே, இரண்டு வருடங்களுக்கு முன்னர் அரச தலைவர் மீதும் இந்த அரசு மீதும் மக் களுக்கு, குறிப்பாகச் சிறுபான்மை மக்களுக்கு இருந்த எதிர் பார்ப்புக் குறைய ஆரம்பித்துவிட்டது. ஆரம்பத்தில் இந்த அரசு சில காரியங்களைச் செய்தது என்பதை மறுப்பதற்கில்லை.

இராணுவத்தின் வசம் இருந்த காணிகள் சில விடுவிக்கப்பட்டன, காணாமற்போனவர்கள் தொடர்பாக ஆராய்வதற்காக அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கான சட்டம் இயற்றப்பட்டது, புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக முழு நாடாளுமன்றமும் அரசமைப்பு உருவாக்கச் சபையாக மாற்றப்பட்டது, அரசியல் கைதிகள் சிலரை விடுவித்தது, போரில் உயிரிழந்த-விடுதலைப் புலிகள் உள்ளிட்ட அனைவரையும் - தமது உறவினர்களை நினைவு கூர்வதற்குத் தமிழர்களைஅனுமதித்தமைபோன்றசிலகாரியங்கள்நடந்தேறின.

எனினும் ஆரம்பிக்கப்பட்ட விடயங்களிலேயே முடிக்க வேண்டியவை இன்னும் பல. ஆரம்பிக்கப்படாமலேயே இருப்பவையோ அதனிலும் பல. அவற்றைச் செய்வதற்கு அரசு இப்போது தயங்குகிறது அல்லது ஒதுங்குகிறது.

தெற்கில் கிளம்பும் சிங்கள, பௌத்த பேரினவாதத்திற்குப் பயந்து அடிபணிந்து அல்லது அதனால் தமது அரசியல் எதிர்காலத்திற்குப் பாதிப்பு ஏற்பட்டுவிடும் என்று கருதியே ஆட்சியாளர்கள் இவ்வாறு பின்னடிக்கத் தொடங்கியிருக்கிறார்கள் என்பதை, இலங்கையின் அரசியல் வரலாறு தெரிந்த எவரும் மறுக்கமாட்டார்கள்.

ஆட்சியைக்கைப்பற்றுவதற்குச்சிறுபான்மை இனங்களின் ஆதரவைப் பெறுவதும், பின்னர் ஆட்சியைத் தக்க வைக்கவும் அரசியலில் நீடிக்கவும் பேரினவாதத்தின் பிடிக்குள் வீழ்வதையுமே கொழும்பின் ஆட்சியாளர்கள் காலம் காலமாகச் செய்தனர். இந்தப் போக்கிலிருந்து மாறாத வரையில் இலங்கைக்கு விடிவு கிடைக்காது.

வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத கூட்டான மைத்திரியும் ரணிலும் பழைய போக்கிலிருந்து நாட்டை மீட்பார்கள் என்ற நம்பிக்கையும் பொய்த்துப் போயிருப்பதையே நெருக் கடிகள் குழுவின் அறிக்கை எடுத்தியம்புகிறது. அந்த அறிக்கையே குறிப்பிடுவதைப் போன்று மக்களாட்சியால் கிடைத்த பயனைப் பாதுகாக்கவும், நீடித்திருக்கக்கூடிய மறுசீரமைப்பை மீண்டும் ஆரம்பிக்கவும் சமூக மற்றும் அரசியல் பிணக்கைத் தணிக்கவும் வேண்டுமானால் தற் போதைய அரசு கட்சி மற்றும் தனிநபர் அரசியல் நலன்களை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு மறுசீரமைப்பு அரசியலுக்குதிறந்த மனதுடன் திரும்பவேண்டும்.

# முத்தரப்புக்களதும் ஆதரவாளர்கள் குறித்து அவதானமாகச் செயற்பட்டாகவேண்டும்

கடந்த 14ஆம் திகதிய ஞாயிறு Apple பத்திரிகையில் 'வார இறுதிக் கதை' என்ற தலைப்பில் 'காசியப்ப பண்டார' எழுதிய கட்டுரை
தமிழில்: வீ.எஸ்.ரீ.



அரசில் அங்கம் வகிக்கும் இருபிரதான கட்சிகள்மத்தியில்கருத்து வேறுபாடுகள் உச்சமடைந்திருப்பதாகவும், அதன் பிரகாரம் எதிர்வரும் நாள்களில் அரசு வீழ்ச்சியுற நேரிக்கூடும் என்ற தகவலொன்று நாட்டின் அரசியலரங்கை சூடுபிடிக்க வைத்துள்ளது. இருப்பினும் நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்துவதாக வாக்குறுதி வழங்கியுள்ள அரசு பொருளாதார ரீதியில் தற்போது பாரதூரமான சிக்கலை எதிர்நோக்கியுள்ளதாகத் தோன்றுகிறது. இது அரசின் இருப்புக்கு அத்தனை தூரம் ஆரோக்கிமானதல்ல. அதுவும், இரண்டாண்டுகள் என்ற குறுகிய கால நிர்வாகத்தில் அத்தகைய பின்னடைவு ஏற்பட்டுள்ளமை மேலும் சிக்கலைத் தோற்றுவிக்கும் நிலைமையாகும்.

**ஐ.தே.கவின் நடவடிக்கையில் சந்தேகம்**

ஐ.தே.கட்சி தனது பொருளாதார செயற்பாட்டு முகாமைத்து வத்தைத் தனியார் துறையினரிடம் வழங்க நடவடிக்கை மேற்கொள்வது, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு நன்மை பயக்குமா என்பது குறித்து நாட்டு மக்கள் மத்தியில் சந்தேகம் நிலவுகின்றது. "போர்ட் சிற்றி" திட்டத்தை சீன நிறுவனத்துக்கு வழங்கியுள்ளதும், அதே சமயம் அம்பாந்தோட்டைத் துறைமுக நிர்வாகத்தைத் தனியார் நிறுவனத்திடம் வழங்கவிருப்பதும் அரசியல் ரீதியில் இலாபகரமானதல்ல. கூட்டு எதிரணியின் நிலைப்பாட்டின்படி, அது நாட்டின் வளத்தை வெளியாருக்கு விற்பதாகக் கொள்ளப்படும்.

அண்மைக்கால உலக நடைமுறையில், அரச செயற்பாடுகள் தனியார் தரப்புக்களுடன் கூட்டிணைந்து முன்னெடுக்கப்படுகின்றமை சிறப்பு அம்சமாகும். சிறீலங்கா போன்ற நாடுகள் அந்த விதமுகாமைத்துவத்தில்தோல்வி கண்டுள்ளன. அந்த நடைமுறையை இலங்கை ஒரு விதத்தில் செயற்படுத்த விளைந்து சிரமத்தை எதிர்நோக்க நேர்ந்தது. இதுவரை அரச மற்றும் தனியார் துறைகள் இணைந்து முகாமைத்துவம் செய்த இலங்கை விமான சேவையில் நட்டத்தை எதிர்நோக்கிய 'டெக்ஸாஸ் பசுபிக் குறூப்' என்ற நிறுவனம், தான் இலங்கை விமான சேவையில் மேற்கொண்டிருந்த முதலீடுகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டுள்ளது. எந்த நாட்டு முதலீட்டாளரும் இலாபத்தை நோக்கமாகக் கொண்டு செயற்படுவாரேயொழிய, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு பங்களிப்புச் செய்து நற்பெயரீட்ட முனைய மாட்டார். அந்த வகையில் தனியார் நிறுவனத்துடன் இணைந்து முகாமைத்துவம் மேற்கொள்வது குறித்து ஐ.தே.கட்சியும் அதன் தலைவர் ரணிலும் ஒருமுறைக்கு இருமுறை சிந்தித்தாக வேண்டும்.

> **சைட்டம் பிரச் சினை தொடர்பாக பணிப்புறக்கணிப்பு அச்சுறுத்தலுடன் ஆரம்பித்த வாரத்தில் குறித்த பணிப் புறக்கணிப்பால் அதில் ஈடுபட்ட தரப்பினர் பல தரப்பட்ட விமர்சனங்களுக்கு உள்ளாக நேர்ந்துள்ளது. தொழிற்சங்கமும் அரசும் இந்த விடயத்தில் நியாயமான நிலைப்பாட்டையே வெளிப்படுத்தியுள்ளன.**

**கீதா குமாரதுங்க விடயம்**

மறுபுறம் கீதா குமாரதுங்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இல்லாதொழிக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கையைக் குறிப்பிடலாம். நீதிமன்றத் தீர்ப்பின்படி நாடாளுமன்ற அதிகாரிகள் தமது கடமையை விரைவாக முன்னெடுத்தபோதிலும், கூட்டு எதிரணியின் கருத்துப்படி அது அரசின் பழிவாங்கலே. ஆனால் அரசுத்தலைவரோ அந்த விடயம் குறித்துத் தாம் எதுவும் தெரிந்து கொண்டிருக்க வில்லை என்ற விதத்தில்

நடந்து கொள்கிறார்.

அரச தலைவர் மாகாண சபைகளது செயற்பாடுகள் குறித்து தெளிவுபடுத்தியுள்ளார்.

அரசமைப்புத்திருத்தமொன்றின் மூலம் மாகாணசபைகள் உருவாக்கப்பட்ட போதிலும், 9 மாகாணசபைகளும் தத்தமது தீர்மானங்களுக்கமையவே செயற்படுகின்றன என அரச தலைவர் குறிப்பிட்டுள்ளமை முற்று முழுதானதொரு உண்மையே.

ஆயினும் மாகாண சபைகள் குறித்து முடிவுகளை மேற்கொள்ளும் அரச தலைவர், இந்தவிதம் மாகாண சபைகள் தத்தம் விருப்புக்கு ஏற்றபடி செயற்படுகின்றன என்று விமர்சிப்பது மட்டும் போதுமானதா என்பது குறித்துச் சிந்தித்தாக வேண்டும்.

**சைட்டம் தொடர்பான பிரச்சினை**

அதே சமயம் "சைட்டம்" பிரச்சினை தொடர்பாக பணிப்புறக்கணிப்பு அச்சுறுத்தலுடன் ஆரம்பித்த வாரத்தில், குறித்த பணிப்புறக்கணிப்பால் அதில் ஈடுபட்ட தரப்பினர் பல தரப்பட்ட விமர்சனங்களுக்கு உள்ளாக நேர்ந்துள்ளது.

தொழிற்சங்கமும் அரசும் இந்த விடயத்தில்நியாயமானநிலைப்பாட்டையே வெளிப்படுத்தியுள்ளன. தமது கோரிக்கையை வென்றெடுக்க பணிப்புறக்கணிப்பு முடிவைத் தவிர வேறெந்த மாற்றுவழியும் தொழிற்சங்கத்துக்கு இருந்ததில்லை. ஆனால் அரசுக்கோ சைட்டத்தை மூடிவிட விருப்பம் கிடையாது.


ஐ.தே.கட்சியின் கொள்கை நிலைப்பாட்டின்படி தனியார் மயப்படுத்தலூடாக அரசின் செயற்பாட்டைத் துரிதப்படுத்திப் பொருளாதார நிலையை உயர்த்துவது சாதகமான பலனைத்தருமென அந்தக் கட்சி நம்புவதால் சைட்டத்தை மூடிவிட ஐ.தே.கட்சியினருக்கு விருப்பமில்லை.

ஒருவகையில் அதனை இடைநடுவில் மூடிவிடுவதென்பது கூடச் சிக்கல்களுக்கு வழி வகுக்கும். இதுவரை காலமும் பெருந்தொகை நிதியைச் செலவிட்டுக் கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்ட மாணவர்கள், அநாதைகளாக்கப்பட்டு விடுவர். இவற்றையெல்லாம் அவதானித்துப் பார்த்தால் இவற்றையெல்லாம் உற்று நோக்கிக் கொண்டிருக்கும் பொதுமக்களே நியாயமற்ற தரப்பினராகக் கொள்ளத்தக்கவர்கள் என்றாகிறது.

நாட்டு மக்களால் உருவாக்கப்பட்ட அரசைக் கவிழ்க்க தொழிற்சங்கங்களுக்கு வாய்ப்பு வழங்கப்போவதில்லையென தலைமை அமைச்சர் தெரிவித்துள்ளார். அதேசமயம் அரச தலைவரும் இந்த அரசு தனது ஐந்தாண்டுகால சேவையை மேற்கொண்டு முடிக்கும்வரை அதனை எவராலும் வீழ்த்த இயலாது என உறுதிப்படத் தெரிவித்துள்ளார்.

**53 கோடிக்கான குறை நிரப்பு மதிப்பீடு**

இவை அனைத்துக்கும் மத்தியில் மேலும் 53 கோடி ரூபாய்களுக்கான



குறை நிரப்பு மதிப்பீடு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள் மற்றும் தலைமை அமைச்சரது செயலாளர் ஆகியோருக்கு வாகனக் கொள்வனவுக்கான தொகைக்கான மதிப்பீடே அதுவாகும். அரசு இத்தகைய செயற்பாடுகளால் தறுக்கணித்துப் போயுள்ள அதே வேளை, நிதி அமைச்சர், மின்சாரக் கட்டணங்களை உயர்த்துவது குறித்துக் கவனம் செலுத்தி வருவதாக சமூகவலைத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மகிந்த தலைமையிலான அரசு ஊழல், லஞ்சம், வீண்விரயம் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட்டதன் காரணமாகவே அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டது. இது ஐ.தே.கட்சியின் தீவிர ஆதரவாளர்கள்தரப்பின் நிலைப்பாடு. மகிந்த அரசின் அத்தகைய செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தும் வல்லமை அரச தலைவர் தேர்தலிலாயின் மைத்திரிபால சிறிசேனவிடமும், நாடாளுமன்றத் தேர்தலிலாயின் ரணில் விக்கிரமசிங்கவிடமும் மட்டுமே உள்ளதாக குறித்த தரப்பினர் தீவிரமாக நம்பி வந்தனர். ஆனால் மகிந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடி லஞ்சச் செயற்பாடுகள் யாவும் தற்போது தடுத்து நிறுத்தப்பட்டு விட்டனவா? என நல்லாட்சி அரசுக்கு எதிரானோர் இன்று கேள்வி எழுப்பி வருகின்றனர்.


**மௌனம் காத்து வரும் மைத்திரி தரப்பினர்**

இவை இரண்டுக்கும் மத்தியில் மைத்திரிபால தரப்பில் செயற்படுவோர் எந்தவித கருத்தும் வெளியிடாது வாய்மூடி மௌனம்காத்து வருகின்றனர். எத்தற்காக அவர்கள் அவ்விதம் நடந்து கொள்கின்றனர் எனத் தற்போது ஊகிக்க முடியாதுள்ளது.

ஆனால், அரச தலைவரோ மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் குறித்த சிக்கல்களில் மத்தியட்ச முயற்சியில் ஈடுபட்டு வருகிறார். அந்த விடயத்தில் மைத்திரி மகிந்த தரப்பினர் உள்ளக அதிகாரப் போட்டியில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. இதில் எவரது தரப்பு வெற்றி பெற்றாலும் அது மகிந்த தரப்பினருக்கே இலாபகரமாக அமையும். ஆதலால் மகிந்த தரப்பு ஆதரவாளர்கள் மற்றும் ஐ..தே.கட்சி ஆதரவாளர்கள் ஆகிய இரு தரப்பினர்கள் குறித்தும் கவனமாகச் செயற்பாட்டாக வேண்டும்.

"மகிந்த தலைமையிலான அரசு ஊழல், லஞ்சம், வீண்விரயம் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட்டதன் காரணமாகவே அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டது. இது ஐ.தே.கட்சியின் தீவிர ஆதரவாளர்கள் தரப்பின் நிலைப்பாடு. மகிந்த அரசின் அத்தகைய செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தும் வல்லமை அரச தலைவர் தேர்தலிலாயின் மைத்திரிபால சிறிசேனவிடமும், நாடாளுமன்றத் தேர்தலிலாயின் ரணில் விக்கிரமசிங்கவிடமும் மட்டுமே உள்ளதாக குறித்த தரப்பினர் தீவிரமாக நம்பி வந்தனர்.





## ஆசிரியருக்கான கடிதம்

### ஆண்டவனால் மட்டுமே இயலும்

மகிந்தவின் ஆட்சியில் முன்னொருபோதும் அனுபவித்திராத இன்னல்களுக்கும் அடக்கு முறைகளுக்கும் முகம் கொடுத்தவர்கள் ஈழத் தமிழ் மக்கள் மட்டும்தானென்றில்லை. நாட்டின் பெரும்பான்மையினச் சிங்கள மக்களும் கூட ஆட்சியாளர்களது மேலாதிக்கப் போக்குக் காரணமாக பல்வேறு வகைகளில் சிரமங்களுக்கும் பழிவாங்கல்களுக்கும் உட்பட்டு வருந்த நேர்ந்ததுண்டு.

இதனாலேயே தக்க தருணம் பார்த்து ஒட்டுமொத்தத் தமிழ் மக்களுடன் சிங்கள அதிருப்தியாளர்களும் இணைந்து ராஜபக்ச தரப்பினர் மீது வஞ்சம் தீர்த்துக் கொண்டனர்.

நாட்டில் நல்லிணக்கம் மத்தியிலான ஒற்றுமை என்பவை குறித்து சிங்கள மக்களில் ஒரு தரப்பினரைச் சிந்திக்க வைத்தது ராஜபக்ச நிர்வாகத்தின் மேலாதிக்கப் போக்கே. 'நிழலின் அருமை வெயிலில் செல்ல நேரும்போதுதான் விளங்கும்' என்ற முதுமொழி இதற்குப் பொருத்தமான உதாரணம்.

சரி, நல்லாட்சி அரசின் நிர்வாகத்தில் நாட்டில் இனங்கள் மத்தியில் நல்லுறவும் நல்லிணக்கமும் உருவாகப் போகின்றன என்ற தமிழ் மக்களது எதிர்பார்ப்பைச் சுக்குநூறாக்கும் விதத்தில் அண்மைக்காலமாக நாட்டின் கேடுகெட்ட, இனவாதப் போக்கில் ஊறித் திளைத்த சிங்களப் பேரினவாதிகள் அரசியல் தரப்பில் மட்டுமென்றல்லாது மத ரீதியிலும் கடும் இனவாத, மதவாதப் போக்கை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இவர்களது இரத்தத்தோடு ஊறிப் போய்விட்ட இனவாதம் அவ்வப்போது தலைதூக்கிச் சன்னதம் ஆடும் நிலை அதிகரித்து வருகின்றது.

ஞானசாரதேரர் போன்ற காவியுடையணிந்த, அடாவடித்தனம் பண்ணும் மதவாத இனவாதத் தரப்பினரும், தத்தமது அரசியல் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இனவாதம் கக்கும் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றோரும் சிங்கள மக்கள் மத்தியில் இருக்கும்வரை நாட்டில் இனங்கள்மத்தியில்நல்லெண்ணத்தையும் உருவாக்குவது எவராலும் இயலாத காரியமே. தமிழ் மக்களை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும் என்ற தந்தை செல்வாவின்அன்றைய வார்த்தைகளுக்கொப்ப, அந்த ஆண்டவன் மனம் வைத்தால் மட்டுமே சிங்கள இனவாதிகளது சிந்தனைகளிலும் நிலைப்பாடுகளிலும் மாற்றம் ஏற்படுத்த இயலும் என மனம் நொந்துகொள்ள வேண்டியுள்ளது.

பூ.பூபாலபிள்ளை.
நுணாவில்.



# முள்ளம் பன்றி

முள்ளம் பன்றி என்ற பெயரைக் கொண்டு இதனைப் பன்றி இனம் என எண்ணி விடக் கூடாது. பன்றியைப் போல உறுமினாலும் இது கொறிக்கும் விலங்குகளான எலி, அணில் போன்றவற்றின் இனத்தைச் சேர்ந்ததாகும். உடல் முழுவதும் முட்களைக் கொண்டிருக்கும். இது தன் விரோதிகளுக்கு இந்த முட்களால் எய்யும் என்பது தவறான கருத்து. தன் விரோதிகளைக் கண்டால் தன் உடலில் உள்ள முட்கள் அனைத்தையும் செங்குத்தாக நிற்கச் செய்து சிலிர்த்து பயமுறுத்தும். முட்கள் மிகுதியாகவுள்ள வாலை அக்கம் பக்கம் ஆட்டும். முள்ளம் பன்றியின் மேற்றோலில் இலேசாக இணைக்கப்பட்டிருக்கும். இந்த முட்கள் அதன் சிலிர்ப்பினால் உடலிலிருந்து நாலா புறமும் சிதறும். இந்த முட்கள் தற்செயலாக விரோதியினதோ அல்லது பக்கத்து நிற்பவர் உடலில் தைத்தால் அவற்றை எளிதில் நீக்கமுடியாது. ஏனெனில் இந்த முட்களின் நுனிப்பகுதி கூர்மையாகவும் கொக்கி போல் வளைந்தும் இருக்கும். இவ்வாறு முள்ளம்பன்றியை வேட்டையாட அதன் அருகே செல்லும் ஓநாய், கரடி, பூமா, ஜகுவார் போன்ற விலங்குகள் முட்களால் தாக்குண்டு இறப்பதுமுண்டு. ஆனாலும் பூமா ஜக்குவார் போன்ற விலங்குகள் இவற்றைக் கொன்று தின்றும் விடுகின்றன.

முள்ளம் பன்றியின் உடல் கறுப்பும் பழுப்பும் கலந்த நிறமுள்ளது. நடு முதுகிலும் இடுப்பிலும் உள்ள முட்கள் நீளமானவை. முட்கள் அடியில் கறுப்பாகவும் நுனியில் வெண்மையாகவும் இருக்கும். முள்ளம் பன்றிக் குட்டிகள் பிறக்கும் போது அவற்றின் உடலில் உரோமம்போல் தோன்றும் முடிகள் வெளியே வந்து காற்றுப் பட்டதும் இறுகி முட்களாக மாறுகின்றன. இவை பகலில் நடமாடாது தாம் நிலத்தில் தோண்டிய வளைகளிலே தங்கியிருந்து இரவிலேயே இரை தேடச் செல்லும். இளம் மரங்களின் வேர், பட்டை, கிழங்கு என்பன இவற்றின் உணவுகள். உருளைக் கிழங்கு, சக்கரை வள்ளிக் கிழங்கு என்பன இவற்றுக்கு மிகவும் விருப்பமானவை. வட அமெரிக்காவில் வாழும் முள்ளம் பன்றிகள் மரத்தில் ஏறக் கூடியவை. ஆசிய நாட்டவை தரையில் நகர்வன.

# அற்புத பொன்மொழிகள்

1. வாழ்க்கை என்பது கதைப் புத்தகம் அல்ல. அது ஓர் விசித்திரமான நாவல்.
2. மற்றவர்களுடைய துன்பங்களை உணர முடியாதவன். மனித தோற்றம் உள்ள விலங்காவான்.
3. நம் வாழ்வில் கிடைக்க முடியாத பெரும் செல்வம். நாம் வீணே கழிக்கும் ஒவ்வோர் விநாடியும்தான்.
4. ஒன்றை அடைய விரும்பி தீவினைகளைச் செய்யாதே.
5. ஆசைகளை அடக்க முடியாத ஆன்ம சுதந்திரம் அழிவை உண்டாக்கும்
6. ஒரு தவறு செய்த பின்னர் அதனைத் திருத்திக் கொள்ளாதவன் இன்னொரு தவறு செய்தவன் ஆவான்.
7. அற்ப ஆசை கோடி தவத்தைக் கெடுக்கும்.
8. உன்னதமான ஒவ்வொரு வேலையும் முடியாததாகவே முதலில் தோன்றும்.
9. பெரிய காரியங்கள் வல்லமையால் நிறைவேறவில்லை. விடாமுயற்சியினாலேயே நிறைவேறியுள்ளன.
10. இன்பங்களைப் பெற முயல்வதைவிட இலட்சியங்களைப் பெருக்க முயல்வதே நன்று.

# இயந்திர மனிதர்கள் (ரோபோக்கள்)

+ விஞ்ஞானத்தின் அதீத வளர்ச்சியின் பிரதிபலிப்புத்தான் ரோபோக்கள் எனப்படும் இயந்திர மனிதர்கள்.
+ இன்று ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகள் ரோபோக்களை உற்பத்தி செய்வதில் போட்டி போடுகின்றன.
+ ரோபோக்கள் மனிதர்கள் செய்யும் வேலைகள் அனைத்தையும் செய்யும் ஆற்றல் படைத்தனவாகத் திகழ்கின்றன.
+ இந்த இயந்திர மனிதர்களின் வருகையினால் உலகமே இன்று வியப்படைந்துள்ளது.
+ தரையில் மட்டுமன்றி விண்வெளி ஆய்வுகளுக்கும் ரோபோக்கள் பயன்படுத்தப்படுகின்றன.
+ இவற்றின் உற்பத்திப் பெருக்கத்தால் நாளடைவில் மனிதர்களுக்கே வேலை இல்லாமல் போகுமோ என அஞ்ச வேண்டியுள்ளது.
+ ரோபோக்களை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்தி னால் அவற்றால் நன்மை விளையும்.
+ ரோபோக்களைப் படைக்கும் விஞ்ஞா னிகள் இதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.
+ அவற்றை அழிவு வேலைகளுக்குப் பயன்படுத்தினால் பெரும் தீமையே உண்டாகும்.
+ அமெரிக்க விண்வெளி ஆய்வு நிலையமான நாசா விண்வெளி ஆய்வுகளை மேற்கொள்ள ரோபோக்களைப் பயன்படுத்துகிறது.





# விலங்கின விநோதங்கள்

**கரப்பான் பூச்சி:-** வெள்ளை நிற இரத்தமுடையவை. தலை இல்லாமல் ஒன்பது நாள்கள் உயிர் வாழும். அணுக்கதிர் வீச்சிலும் பாதிப்படையாதவை பூச்சிகளில் புராதனமான இனம்.

**ஆமை:-** ஊர்வனவற்றில் ஓடு கொண்ட ஒரே உயிரினம். பூமியில் அதிக ஆண்டுகள் வாழும். தோன்றிய நாள் முதல் மாற்றமடையாதது.

**யானை:-** குதிக்கத் தெரியாத துள்ளித் தாவத் தெரியாத விலங்கு. புயல் வருவதை முன்னதாகவே அறியும். நான்கு முழங்கால்கள் உள்ளன. குறுகிய கழுத்துள்ளது.

**நாய்:-** எல்லாக் கண்டங்களிலும் எல்லாத் தட்ப வெப்ப நிலைகளிலும் வாழும் ஒரே உயிரினம். மனிதர்களை விட பத்து மடங்கு கேட்கும் சக்தி, மோப்ப சக்தி உடையது. நாக்கிலும் வியர்க்கும் சக்தி உண்டு.

**பென்குயின்:-** பறக்காத பறவை என்றாலும் நீச்சலில் திறமையான பறவை. மனிதனைப் போல இரண்டு கால்களாலும் நடந்து செல்லும். வாழ்நாளில் ஒரே ஒரு முட்டையிடும். கடல் நீரைப் பருகும். கால்களால் அடைகாக்கும்.

**தாரா:-** காலைப் பிடித்து தூக்கினால் இறக்கும் பிராணி

**ஈசல்:-** பிறந்த நாள் அன்றே இறக்கும் உயிரினம்

**சிம்பன்ஸி :-** மனிதனைப் போல உருவம் உள்ள விலங்கு. மனிதனுக்கு அடுத்து அறிவு கூடிய மிருகம்.

**எறும்பு:-** உயிரினங்களில் தூங்காதது. தனது எடையைப் போல ஐம்பது மடங்கு எடையைத் தூக்கக் கூடியது.

**தீக்கோழி:-** இறக்கைகள் இருந்தும் பறக்கத் தெரியாத பறவை. ஓட்டகப் பறவை எனப்படும். மிகவும் வேகமாக ஓடக் கூடியது.

**சிலந்தி:-** மிக உயரத்தில் உயிர் வாழக் கூடியது. 25 கோடி ஆண்டுகளாக உருமாறாதிருக்கும் பூச்சியினம்.

**கிவி:-** பறக்கவும் தாவவும் தெரியாமல் நடந்தே செல்லும். மோப்பம் பிடிக்கும் பறவை. இறக்கை இல்லாத பறவை.

**புலி:-** வெள்ளை நிறத்தைக் கண்டு பயப்படும் விலங்கு.

**சுறா:-** எப்போதும் நீந்திக் கொண்டிருக்கும் ஒரு மீனினம்.

**கறையான்:-** கண்கள் இல்லாத உயிரினம். அதிக முட்டையிடும்.

**முதலை:-** நாக்கை அசைக்க முடியாதது. மூக்கில் பல் உள்ளது.

**ஒட்டகம்:-** நீந்தத் தெரியாதது. மூன்று இரப்பைகள் உள்ள விலங்கு.

# பார்வையின் பாதையில்....

ஒரு அரசன் தனது முதன்மை மந்திரி ஒருவர் காலமானதால், அவரது பதவிக்கு மதி நுட்பம் நிறைந்த மந்திரி ஒருவரை நியமிக்க விரும்பினார். பலபேரிடையே உடல் திடகாத்திரத்திலும் கல்வியறிவிலும் சிறந்தவர்களான ஐவரைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கு இறுதிப் போட்டி ஒன்றை நடத்த தீர்மானித்தார். அதன்படி அரச சபையில் பலர் முன்னிலையில் மந்திரித் தேர்வு இடம்பெற்றது. மூன்று ஒரே மாதிரியான மனித பொம்மைகள் ஐவர் முன்னும் வைக்கப்பட்டன. மூன்று பொம்மைகளிடையேயும் இருக்கும் வேறுபாட்டைக் கண்டு பிடித்து சொல்வதே போட்டி விதியாகும்.

போட்டி ஆரம்பமானது. போட்டியாளர்கள் ஒவ்வொருவராக அந்தப் பொம்மைகள் மூன்றையும் கூர்ந்து நோக்கினர். சுற்றிச் சுற்றி வந்து பார்த்தனர். ஆனால் அவர்களில் நால்வரால் அவற்றிடையே எந்த வேறு பாட்டையும் காண முடியவில்லை. நால்வரும் தமது முடிவைத் தனித் தனியாக அரசருக்குத் தெரிவித்தனர்.

ஐந்தாமவர் எழுந்தார். பொம்மைகளைப் பலவாறும் உற்று நோக்கினார். இறுதியில் ஒரு சிறு குச்சி ஒன்றைக் கொண்டு வரும்படி காவலர்களைக் கேட்டுக் கொண்டார். அதன்படி குச்சி அவரிடம் கொடுக்கப்பட்டது. அந்தக் குச்சியை அவர் முதலாவது பொம்மையின் காதில் விட்டார். உடனே அந்தக் குச்சியின் மறுமுனை பொம்மையின் வாய் வழியாக வெளியே தெரிந்தது. பின்னர் இரண்டாவது பொம்மையின் காதில் குச்சியை விட்டார். அப்போது குச்சியின் மறுமுனை பொம்மையின் மறுகாது வழியே எட்டிப் பார்த்தது. இறுதியாக மூன்றாவது பொம்மையின் காதினுள்ளும் குச்சியை விட்டார். ஆனால் குச்சி எந்தப் பகுதியூடாகவும் வெளிவரவில்லை. இதைக் கண்டு சபையோர் எல்லோரும் ஆச்சரியம் அடைந்தனர். ஐந்தாமவர் அரசரை நோக்கி "அரசே இந்த மூன்று பொம்மைகளுக்குமிடையே உள்ள வேறுபாடு என்னவெனில் முதலாவது பொம்மையின் காதுக்கும் வாய்க்குமிடையே தொடர்பு இருக்கிறது. மற்றொன்றுக்கு காதுக்கும் மறுகாதுக்கும் தொடர்பு உள்ளது. மூன்றாவது பொம்மையின் காதுக்கும் வேறு உறுப்புகளுக்கும் எந்தத் தொடர்புமில்லை" என்று கூறினார். அரசன் பதிலாக "நீ இந்தப் பொம்மைகளின் காதினுள் குச்சிகளை விட்டதால் அல்லவா வேறுபாட்டை அறிந்து கொண்டாய்? என்றார் "அரசே ஒரு உண்மையை அறிய வேண்டுமாயின் எந்த விடயத்தையும் மேலோட்டமாகப் பார்த்து அறிய முடியாது. ஆழமாக கூர்ந்து அவதானித்தே உண்மையை அறிய வேண்டும். நான் இப்படி கூர்ந்து அவதானித்த போது ஒரு உண்மையைக் கண்டு கொண்டேன். முதலாவது மனிதன் காதில் கேட்பவற்றையெல்லாம் ஒன்று விடாமல் மற்றவர்களுக்கு வாயால்உளறி விடும் ஓட்டைவாயன். இரகசியம் இவனிடத்தில் தங்காது. மற்ற மனிதன் இந்தக் காதால் கேட்பதை மற்றக்காதால் விட்டு விடும் அலட்சியப் போக்கும் அசிரத்தையும் கொண்ட பொறுப்பில்லாதவன். மூன்றாவது மனிதன் முதல் தரமானவன். காதால் வாங்கியதை மனதில் தக்க வைத்து அசைபோட்டு அனுபவத்தைப் பெறும் திறனும் பொறுப்பும் உடையவன் என்றான்.

அரசனும் சபையோடும் எழுந்து அவனது மதி நுட்பமான செயலையும், அதற்கு அவனளித்த விளக்கவுரைகளையும் பாராட்டினர். எதையும் மேலோட்டமாகப் பார்க்கும் போது எவருக்கும் எந்த விடயமும் புரிவதோ தெரிவதோ இல்லை.



நுணுக்கமான அறிவுடையவர்களால் தான் ஆழமாக நிறைய விடயங்களைத் தெரிந்து கொள்ள முடியும்.

மேலோட்டமான பார்வையில் எங்கள் கண்களே எங்களை ஏமாற்றிவிடும் உண்மைகளை அறிய முடியாது

**கண்களால் காண்பதும் பொய்**
**காதுகளால் கேட்பதும் பொய்**
**தீர விசாரித்து அறிவதே மெய்.**



# வர்ணம் தீட்டுவோம்

# தெலுங்கு ரீமேக்கில் நித்யா மேனன்!

நடிகை நித்யா மேனன் 'யுடர்ன்' தெலுங்கு ரீமேக்கில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். 2016ஆம் ஆண்டு கன்னடத்தில் வெளியான திரில்லர் படம் 'யு டர்ன்'. இந்தப் படத்தை பவன்குமார் இயக்கியிருந்தார். இந்த படத்தின் ஸ்ரத்தா ஸ்ரீநாத் நாயகியாக நடித்திருந்தார். அந்தப் படத்துக்குப் பிறகு நடிகை ஸ்ரத்தா ஸ்ரீநாத்துக்கு வாய்ப்புகள் குவிந்த வண்ணம் இருந்தன. பின்னர் மணிரத்னத்தின் 'காற்று வெளியிடை' படத்தில் நடித்தார். தற்போது 'இவன் தந்திரன்', 'விக்ரம் வேதா', 'ரிச்சி' ஆகிய தமிழ்ப்படங்களில் நாயகியாக நடித்து வருகிறார். மேலும், அப்படி ஸ்ரத்தா ஸ்ரீநாத்துக்கு பல படங்கள் கிடைக்க காரணமான 'யு டர்ன்' படம் தற்போது தெலுங்கில் ரீமேக் செய்யப்படுகிறது.





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எதிலும் நிதானம் காப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சீரான முன்னேற்றம் உண்டாகும். பணியாளர்கள் பணிச் சுமையைச் சந்திப்பர். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செயல்படுவர்.

**இடபம்**: நீண்ட நாள் இருந்த பிரச்சினை மறையும். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். ஆரோக்கியம் பலம் பெறும்.

**மிதுனம்:** எதிர்பார்ப்பு எளிதில் நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர்.

**கடகம்:** அனைவரின் அன்புக்குரியவராக திகழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இலக்குப் படிப்படியாக நிறைவேறும். எதிர் பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமையில் இருந்து விடுபடுவர்.

**சிங்கம்:** குடும்பத்தினரின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார மூலதன தேவைக்கான கடன் வாங்க நேரிடலாம். லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**கன்னி:** உலக நடப்புகளை ஆர்வமுடன் அறிவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பிள்ளைகளால் நன்மை உண்டாகும்.

**துலாம்:** திறம்படச் செயல்பட்டு வளர்ச்சி அடைவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய பணிமாற்றம் கிடைக்கும். நண்பர்களுடன் இனிய சந்திப்பு ஏற்படும்.

**விருச்சிகம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். நண்பருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகும். சேமிக்கும் விதத்தில் வருமானம் கிடைக்கும். விருந்து, விழாவில் பங்கேற்பர்.

**தனுசு:** குடும்பத்தினரின் ஆலோசனை நன்மைக்கு வழி வகுக்கும். தொழில், வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். லாபம் சீராக இருக்கும். பெண்கள், தாய் வீட்டினரின் அன்பைப் பெற்று மகிழ்வர்.

**மகரம்:** திறமையை வளர்த்துக் கொள்ள முயல்வீர்கள். பணி யாளர்கள் சுதந்திர உணர்வுடன் பணியாற்றுவர். ஆன்மிகச் சுற்றுலா சென்றுவரத் திட்டமிடுவீர்கள். நண்பரால் உதவி உண்டு

**கும்பம்:** மனச்சாட்சிக்கு அதிக முக்கியத்துவம் தருவீர்கள். திட்டமிட்ட பணிகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை பெற்று மகிழ்வர்.

**மீனம்:** வீண் பேச்சைத் தவிர்ப்பது நன்மை அளிக்கும். தொழில் வியாபாரத்தில் ஆதாயம் படிப்படியாக உயரும். பணியாளர்கள், சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வர்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 3 | | 7 | | | 8 | |
| 7 | 9 | 4 | | | | | | |
| 5 | 8 | 6 | | | 4 | 1 | | 7 |
| 1 | | 2 | | 6 | | | | |
| | | | | | | | | |
| | | | 2 | | | | 7 | |
| 3 | | | | | 8 | 7 | | |
| | | | 5 | | | 8 | | 3 |
| 9 | | 8 | 4 | | | 2 | | 6 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 4 | 5 | 6 | 7 | 9 | 3 | 1 |
| 6 | 7 | 1 | 9 | 3 | 8 | 4 | 5 | 2 |
| 5 | 9 | 3 | 4 | 1 | 2 | 6 | 8 | 7 |
| 2 | 6 | 9 | 7 | 8 | 5 | 3 | 1 | 4 |
| 4 | 1 | 8 | 2 | 9 | 3 | 7 | 6 | 5 |
| 7 | 3 | 5 | 1 | 4 | 6 | 8 | 2 | 9 |
| 9 | 5 | 6 | 3 | 2 | 4 | 1 | 7 | 8 |
| 1 | 8 | 7 | 6 | 5 | 9 | 2 | 4 | 3 |
| 3 | 4 | 2 | 8 | 7 | 1 | 5 | 9 | 6 |

சுடோக்கு


ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

சட்டம்பி ஸ்டாலின் @stalin

எப்போது அன்பு ஏற்றுக்கொள்ளப் படவில்லையோ நகர்ந்து செல். எப்பொழுது அன்பு பாராட்டபடவில்லையோ விலகிச் செல். எது உண்மையான அன்பு என்று காலம் கற்றுக் கொடுக்கும்.


1 15 12

அசைவ ஹோட்டல்ல சிக்கன் பிரியாணிக்கு முட்டை இலவசமா குடுக்கறாங்க...



என்னிக்காவது சைவ ஹோட்டல பொங்கலுக்கு வடை இலவசமா குடுத்துருக்காய்ங்களா...

முதல் காதலை மறக்க முடியாதுன்னு சொல்றவன் பூரா.. அடுத்தடுத்து அஞ்சாறு காதல் பண்ணுறவங்களாத் தான் இருக்கணும்...



ஒன்னே ஒன்னுனா.. 'காதல மறக்க முடியாது' னு தானடா சொல்லனும்...

நம்மள தினமும் ஊக்கபடுத்துறது பஸ் கண்டக்டர் தான்



போ.. போ.. முன்னாடி போ நடுவுலே நிக்காதே.. முன்னாடி போ போய்டே இரு...ன்னு சொல்லிக்கிட்டே இருக்கிறாரு!

வீட்டு முதலாளி, தன் வீட்டுக்கு முன்னால் ஒரு போர்டு வைத்திருந்தார்...
``வீடு வாடகைக்கு விடப்படும். குழந்தை வைத்திருப்பவர்கள்... தயவு செய்து தொடர்புகொள்ள வேண்டாம்"

2 நாள்கள் கழித்து ஒரு சிறுவன் வீட்டு முதலாளியிடம் வந்தான்.
``அங்கிள்! வீடு வாடகைக்கு தாறீங்களா?
எனக்குக் குழந்தை இல்லை... அம்மா, அப்பா மட்டும்தான் இருக்காங்க"






## விருச்சிகம்

மனசாட்சிக்கு விரோதமின்றி செயல்படும் நீங்கள், பிறர் செய்யும் தவறைத் தட்டிக் கேட்கவும் தயங்க மாட்டீர்கள். 14ஆம் திகதி வரை உங்களின் ஜீவனாதிபதியான சூரியன் 6ஆம் வீட்டில் நிற்பதால் அரசு வேலைகள் தாமதமில்லாமல் முடியும். பெரிய பதவிகள், பொறுப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். போட்டிகளிலும் வெற்றி பெறுவீர்கள். புது வேலைக்கு முயற்சி செய்தீர்களே! நல்ல பதில் வரும். புதிதாக முதலீடுகள் செய்து தொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகள் கிடைக்கும். பங்குகளின் மூலமாகவும் பணம் வரும்.

27ஆம் திகதி வரை உங்களுடைய ராசிக்கு சுக்ரன் சாதகமாக இருப்பதால் சுறுசுறுப்பாக இருப்பீர்கள். சோர்வு, களைப்பு நீங்கும். தள்ளிப் போன விஷயங்கள் நல்ல விதத்தில் முடியும். கணவன்மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். ஒருவருக்கொருவர் மனம் விட்டுப் பேசி சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வீட்டை விரிவுப்படுத்திக் கட்டுவது, அழகுபடுத்துவது போன்ற முயற்சிகளில் ஈடுபடுவீர். மகளுக்கு நீங்கள் எதிர்பார்த்தபடி நல்ல வரன் அமையும். உங்கள் ராசிநாதனாகிய செவ்வாய் சாதகமாக இல்லாததால் உடல் உஷ்ணத்தால் வேனல் கட்டி, சிறுசிறு நெருப்புக் காயங்கள், முன்கோபமெல்லாம் வந்துச் செல்லும். உடன்பிறந்தவர்களுடன் பிணக்குகள் வரும். சொத்து வாங்குவது, விற்பது தாமதமாகி முடியும்.

ஜென்மச் சனி நடைபெறுவதால் கொழுப்புச் சத்து உடலில் அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். நடைப்பயிற்சி அவசியமாகிறது. எண்ணெய் மற்றும் வாயுப் பதார்த்தங்களை தவிர்க்கப்பாருங்கள். நிழல் கிரகங்களான ராகுவும், கேதுவும் உங்களுடைய ராசிக்கு எதிராக நிற்பதால் வேலைச்சுமையால் அவ்வப்போது தூக்கம் குறையும். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை.

அநாவசியமாக யாருக்காகவும் எந்த உறுதிமொழியும் தர வேண்டாம். சின்ன சின்ன மரியாதைக் குறைவான சம்பவங்கள் நிகழக்கூடும். 8ஆம்திகதி முதல் 26ஆம் திகதி வரை புதன் 6இல் சென்று மறைவதால் சளித் தொந்தரவு, காய்ச்சல், காலில் சுளுக்கு, வேலைச்சுமை, உறவினர், நண்பர்களுடன் உரசல் போக்குகளெல்லாம் வந்து நீங்கும்.

கன்னிப் பெண்களே! உங்களின் நீண்ட நாள் கனவு நனவாகும். எதிர்பார்த்த நிறுவனத்தில் வேலைக் கிடைக்கும். உங்களின் புதிய திட்டங்களை பெற்றோர் ஆதரிப்பார்கள். காதல் இனிக்கும். குருபகவான் வலுவாக இருப்பதால் வியாபாரம் செழிக்கும். இரட்டிப்பு இலாபம் உண்டாகும்.

## வரலாற்றில் இன்றைய தினம்

1536 - இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றியின் இரண்டாம் மனைவி ஆன்பொலின் விபசாரம், தேசத்துரோகம் மற்றும் முறையற்ற பாலியல் தொடர்புகளுக்காக சிரச்சேதம் செய்யப்பட்டார்.

1568 - ஸ்கொட்லாந்து அரசிமேரியைக்கைது செய்யுமாறு இங்கிலாந்தின் முதலாம் எலிசபெத் மகாராணி கட்டளை பிறப்பித்தார்.

1743 - ஜீன் பீர் கிறிஸ்ரியனால் சென்ரி கிரேட் வெப்ப அளவுத் திட்டம் உருவாக்கப்பட்டது.

1780 - நியூ இங்கிலாந்தின் இருண்ட நாள். கடும்புயகையும் முகிலும் இணைந்து மூடியதன் காரணமாக கிழக்கு கனடா மற்றும் அமெரிக்காவின் நியூ இங்கிலாந்து பகுதி ஆகியன இருளில் மூழ்கியது.

1897 - நாடக ஆசிரியர் ஒஸ்கார் வைல்ட் றீடிங் கால் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

1962 - அமெரிக்க அரசதலைவராகவிருந்த ஜோன் எப்.கெனடிக்கு பிறந்தநாள் வாழ்த்து மடிசன் சதுக்க தோட்டத்தில் இடம்பெற்றது. பிரதான நிகழ்வாக மரிலின் மன்றோவின் 'ஹப்பி போர்த் டே' பாடல் இசைக்கப்பட்டது.

1963 - மார்ட்டின் லூதர் கிங் பர்மிங்காம் சிறையிலிருந்து கடிதம் நியூயோர்க் போஸ்ட் ஞாயிறு சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டது.

1999 - ரெலோ தளபதி குகனின் இறுதிக் கிரியையின்போது வவுனியா நகரம் முற்றாக முடங்கியது.

2016 - தமிழக முதல்வர் ஜெயலலிதா தமிழருக்கு நன்மை செய்வாரென வடக்கு முதலமைச்சர் விக்கி நம்பிக்கை.

2016 - இறுதிப் போரில் சரணடைந்தோரின் விவரங்களை ஜீலை 14 தரவேண்டுமென இராணுவத்துக்கு முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவு.

2016 - பரிசிலிருந்து கெய்ரோவுக்கு மெடிற்றனியன் கடலுக்கு மேலாகப் பறந்த எகிப்திய விமானம் விபத்துக்குள்ளாகியதில் 56 பயணிகள் மற்றும் 7 பணியாளர்கள் உயிருடன் கண்டுபிடிக்கப்படவில்லை.

**நாளை**

**வைகாசி-06**
சனிக்கிழமை -20.05.2017
திதி: நவமி பி.ப.1.04 வரை
நட்சத்திரம்: சதயம் கா. 07.01
சுபநேரம்:02.52-04.22 வரை
ராகுகாலம்:08.52-10.22 வரை

# கபடி விளையாட்டு ஆண்களுக்கானதா?

கபடி விளையாட்டு என்பது ஆண்களுக்கு மட்டுமானதா? பெண் பிள்ளைகள் அதில் ஈடுபடுதல் முறையற்ற ஒன்றா? அவ்வாறு அது ஆண்களுக்கு மட்டுமானது என்று வரையறுக்கப்பட்டிருந்தால் அது ஏன் பெண்களுக்குமானது என்று பன்னாட்டு அரங்கில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது? இவ்வாறான கேள்விகள் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் நிர்வாகத்தை நோக்கி வடமாகாண விளையாட்டுச் சமூகத்தால் நேரடியாகவும் மறைமுகமாகவும் எழுப்பப்படுகிறது.

கடந்த வருடம் நடைபெற்ற தேசியமட்ட கபடித் தொடரில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை 15 மற்றும் 19 வயதுக்குட்பட்ட பிரிவுகளில் தேசியத்தில் தங்கப்பதக்கம் வென்று சாதித்தது. கல்லூரிச் சமூகத்தாலும் வடமாகாண ரீதியிலும் அந்த இரு அணிகளுக்கும் பாராட்டுக்கள் குவிந்தன. ஆனால் நடப்பு வருடத்தில் கபடியில் இருந்து முற்றாக விலகும் முடிவை அந்தப் பாடசாலையின் நிர்வாகம் எடுத்துள்ளது. இது பல அதிர்வலைகளையும் ஏற்படுத்தியள்ளது.

“கபடிப் போட்டிகளில் விபத்துக்கள் கூடுதலாக இடம்பெறுவதால் பெண்களுக்குப் பொருத்தமற்ற விளையாட்டாக அது உள்ளது. வீராங்கனைகள் உடல் ரீதியாக பாதிக்கப்படுகின்றனர். பாடசாலையின் பெருமைக்காக அவர்கள் உடல் உபாதைக்குள்ளாவதை விரும்பவில்லை. எனவே மாணவிகளின் பெற்றோருடன் கலந்துரையாடி அவர்களின் சம்மதத்துடன் கபடித் தொடர்களில் கலந்துகொள்வதில்லை என முடிவெடுத்துள்ளோம்” என்று நிர்வாகம் அறிவித்துள்ளது. கபடிக்குப் பதிலாக கூடைப்பந்தாட்டம் போன்ற விளை யாட்டுக்களை புதிதாக அறிமுகப்படுத்தவும் மெதடிஸ்த பெண்கள் பாடசாலையின் நிர்வாகம் முடிவெ டுத்துள்ளது. எனின், கூடைப் பந்தாட்டத்தில் விபத்துக்கள், உபாதைகள் ஏற்படாதா? ஆபத்து அல்லாத விளையாட்டுக்கள் மட்டும்தான் பெண்களுக்கானது என்றால் இன்று பெண்கள் சதுரங்கத்திலும் கரம் தொடர்களிலுமே பங்கெடுத்துக் கொண்டிருப்பார்கள். கால்பந்தாட்டம், துடுப்பாட்டம், கபடி, கூடைப்பந்தாட்டம், எல்லே, கரப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம் என்று அத்தனை விளையாட்டுக்களிலும் உபாதைகள் தசைச் கிழிவுகள் இருக்கத்தான் செய்கின்றன. இவை பன்னாட்டு அரங்கிலும் விதிவிலக்கல்ல. இந்திய கிரிக்கெட்டின் கடவுள் என்று அழைக்கப்படும் சச்சின், அண்மையில் சென்னையில் ஆற்றிய உரையில் உபாதைகளும் விளையாட்டின்ஓர்அங்கமேஎன்றுகுறிப்பிட்டிருந்தார். அவற்றை நுணுக்கமான அணுகுமுறைகள் மற்றும் நுட்பமான வியூகங்கள் மூலம் இயலுமானவரைத் தவிர்க்க முடியும் என்றும் குறிப்பிட்டிருந்தார். இதையே பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையை நோக்கி தெரிவிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.



கபடி, கால்பந்தாட்டம், துடுப்பாட்டம் போன்ற விளையாட்டுக்களில் பெண்கள் ஈடுபடக்கூடாது என்ற எண்ணம் மாறி இன்று வீரர்களுக்கு நிகராக வீராங்கனைகளும் சாதிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். கோலூன்றிப் பாய்தல் பெண்களுக்கானது அல்ல அதில் உபாதைகள் வரும் என்று அனித்தா எண்ணியிருந்தால் இன்று அவர் தேசியச் சாதனையாளராக வலம்வந்திருக்க மாட்டார். பளுதூக்கல் வீராங்கனை ஆசிகா எண்ணியிருந்தால் ஆசியாவில் அவர் பதக்கம் வென்றிருக்க மாட்டார். சுசந்திக்கா ஜயசிங்க நினைத்திருந்தால் தேசியத்தின் இலங்கை மௌனித்திருக்கும்.

எனவே, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை எடுத்திருக்கும் இந்த முடிவு வெறுமனே அந்தப் பாடசாலையின் நிர்வாகத்துக்கானது அல்ல. இது வடமாகாணத்தின் பிரச்சினையாகும். இதன் தீவரத்தன்மையை கருத்தில் கொண்டு கைவிட்ட கபடியை அந்தப் பாடசாலை மீண்டும் ஏற்க வேண்டும். கபடி... கபடி.... என்ற குரல் மீண்டும் தேசியத்தில் மெதடிஸ்த பெண்களின் மூலம் ஒலிக்க வேண்டும். இனியும் முடிவில் மாற்றம் இல்லை என்று நிர்வாகம் அறிவித்தால் நிச்சயமாக அது வேதனைக்குரியது.

# பிரசாந்த் மல்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை

WE CARE FOR U

அனைத்து விதமான மூட்டுப் பிரச்சினைகளுக்கும் சரியான தீர்வு




**MedExPo Jaffna 2017**
International Healthcare and Medical Exhibition
May 19, 20, 21, 2017 - Stall No. 21
at Vembadi Girls High School, Jaffna, Sri Lanka

## கம்ப்யூட்டர் உதவியுடன் கூடிய மூட்டு மாற்று சத்திர சிகிச்சை

- கணினி மூலம் மூட்டு மாற்று சத்திர சிகிச்சை
- வயது ஒரு தடையில்லை
- ஒரே நேரத்தில் இரு மூட்டுகளுக்கும் சத்திர சிகிச்சை
- 100% முழு உத்தரவாதம்

கணினி மூலம் சத்திர சிகிச்சை செய்வதன் பலன்கள்:
- குறைந்த ரத்தப்போக்கு.
- இருதயம் மற்றும் நுரையீரலிற்கு ஏற்படும் அழுத்தம் குறைவு.
- மிக விரைவில் குணமடைந்து நடக்கலாம்.
- முழு அளவில் நல்ல பலன்கள்.







எங்களிடம் மருத்துவ சிகிச்சை பெற்ற இலங்கை மக்களுடன் நீங்களே பேசலாம்!




கொழும்பு 0767191222 0776738482

மட்டக்களப்பு 0771751144 0777771310

அக்கரைப்பற்று 0773 815174

கொழும்பு 0778213177, 0775384773

முன்பதிவுக்கு அழையுங்கள்
**0755 250 963**

**00 91 96262 62952**

www.drrajkanna.com

---

## உலகத்தரமான உயர் மருத்துவ தொழில்நுட்பம்

# உங்கள் நலன் காத்திட அர்ப்பணம்

26

விமான நிலையத்தில் வரவேற்பது முதல் நலமுடன் நாடு திரும்புவது வரை சிகிச்சை பெறுபவருக்கு தேவையான அனைத்து பிரத்யேக சேவைகளுடன்...

இந்தியாவின் முன்னணி பல்துறை மருத்துவமனைகளில் ஒன்றான கேஎம்சிஎச், தென்னிந்தியாவின் மான்செஸ்டர் எனப் புகழ்பெற்ற கோயமுத்தூர் நகரைத் தலைமையிடமாகக் கொண்டு கால் நூற்றாண்டுக்கும் மேலாக உலகத்தரமான மருத்துவ சேவைகள் அளிப்பதில் தனிமுத்திரை பதித்து வருகிறது.

அனுபவம் மிக்க மருத்துவர்கள். அதிநவீன மருத்துவ தொழில்நுட்பம். உலகத்தரமான சிகிச்சை முறைகள். சிகிச்சை பெறும் ஒவ்வொருவரும் பூரண குணம் பெற்றிட வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் கூடிய ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்பு. உங்கள் எதிர்பார்ப்பு கேஎம்சிஎச் சேவையின் பிரதிபலிப்பு . . .

**MedExPo**
May 19, 20, 21 - Jaffna 2017, SRI LANKA.

இடம்:
வேம்பாடி பெண்கள் மேல்நிலைப்பள்ளி,
யாழ்ப்பாணம், இலங்கை.
Stall Nos : 35, 36, 37.

### கேஎம்சிஎச் அளிக்கும் சிறப்பு மருத்துவ சேவைகள்

- முழுமையான புற்றுநோய் மருத்துவ மையம்
- தீவிர சிகிச்சைப் பிரிவு
- குடல்நோய் மருத்துவம் மற்றும் கல்லீரலியல்
- இருதய மருத்துவ மையம் மற்றும் எலக்ட்ரோ பிசியாலஜி
- ஆழ்ந்த மூளை தூண்டுதல் - நரம்பியல் மருத்துவம்
- சிறுநீரக சிகிச்சைப் பிரிவு
- இண்டர்வென்ஷனல் கதிர்வீச்சியல் சிகிச்சைப் பிரிவு
- அணுக்கதிர் மருத்துவம் மற்றும் PET CT
- கல்லீரல் சிகிச்சைப் பிரிவு
- எலும்புமுறிவு மற்றும் மூட்டுமாற்று அறுவை சிகிச்சைப் பிரிவு



தென்னிந்தியாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமான
### உடல் உறுப்பு மாற்று மருத்துவ மையம்

இருதயம் மற்றும் நுரையீரல் | கல்லீரல் | சிறுநீரகம் | எலும்பு மஜ்ஜை

அதிநவீன மற்றும் அதிநுட்பமான ரோபோட்டிக் அறுவை சிகிச்சை

- 1000 படுக்கை வசதி
- அனுபவமிக்க மருத்துவர்கள்
- 24 ஆபரேஷன் தியேட்டர்கள்

AWARD WINING PERFORMANCE
- by the Government of Tamil Nadu and Indian Chamber of Commerce & Industries (FICCI)

சிறப்பு ஆலோசனைகளுக்காக வருகைதரும் எமது சிறப்பு மருத்துவர்கள்



**Dr. S. Vivekanandan**
MRCS (Edin), FRCS (Intercollegiate)
Consultant Hepatobiliary Surgeon & Head of Liver Transplant Sergery



**Dr. Vignesh Kanda Kumar**
MD, DM (Medical Oncology)
Consultant Medical Oncologist



**Dr. Ajit S. Shinto**
DRM, DNB (Nuclear Medicine), MNAMS, PGDHA/HM
Consultant Nuclear Medicine Services, PET & Radionuclide Therapy

**For Appointment, Call: Sri Lanka Helpline +91 755 811 2333 (Whatsapp)**

# Kovai Medical Center and Hospital

Avanashi Road, Coimbatore - 641 014. Tamil Nadu, India. Ph: +91 422 4323 800 - 802, 3083 800.
www.kmchhospitals.com

MAKING THE IMPOSSIBLE POSSIBLE

# இலங்கை – சீனா இடையேயான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை நடப்பாண்டில் கைச்சாத்திட தீர்மானம்

## சீனத் தலைமை அமைச்சர் லீ கெகியான் தெரிவிப்பு

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையேயான சுதந்திரவர்த்தகஒப்பந்தத்தைநடப்பாண்டினுள்கைச்சாத்திடஎதிர்பார்த்துள்ளதான தகவல் சீனத் தலைமை அமைச்சர் லீ கெகியானால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

'ஒரே பிராந்தியம் ஒரே பாதை' எனும் தொனிப்பொருளின் கீழான மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சீனா பயணமாகியிருந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்காவை பீஜிங் நகரில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இந்த விடயங்கள் சீனத் தலைமை அமைச்சரால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

"போக்குவரத்து, நிதி, வணிகம் போன்ற துறைகளை அடிப்படையாகக்கொண்டு இந்துசமுத்திரத்தின் கேந்திர நிலையமாக இலங்கையை முன்னேற்றமடையச் செய்ய தேவையான ஒத்துழைப்பு மற்றும் உதவிகளை வழங்க சீனா தயாராகவே உள்ளது.

அதற்குத் தேவையான முதலீட்டுச் சூழலை இலங்கையில் உருவாக்க வேண்டும். நிலைபேறான உறுதித்தன்மை மற்றும் பலமான சட்டக் கட்டமைப்பு உருவாக்கப்படும் சந்தர்ப்பத்திலே பன்னாடுகளில் உள்ள அதிகமான முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு முன்வருவார்கள்.

அதேபோன்று இலங்கையில் தொழில் முயற்சிகளை ஆரம்பித்தல் மற்றும் முதலீடுகளை மேற்கொள்வதற்கு சீன நிறுவனங்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்" - என்றார்.



சீன அரச தலைவர் ஜின்பிங்

"இலங்கையின் அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கு நடப்பாண்டில் வழங்கப்படவுள்ளதான 400 மில்லியன் சீன யுவான் நிதி உதவித் தொகை வழங்கப்படவுள்ளதுடன் மேலதிகமாக 2018 ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரியதாக 2 பில்லியன் சீன யுவான் நிதி உதவி இலங்கைக்குக் கிடைக்கவுள்ளது"



## ஆயிரத்து 400 உற்பத்திகளுக்கான சந்தைவாய்ப்புக் கிடைக்கவுள்ளது

ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுமதியோடு இலங்கைக்கு மீண்டும் கிடைக்கவுள்ளதான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை மூலம் இலங்கையில் தயாரிக்கப்படுவதான ஆயிரத்து 400 உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பு கிடைக்கவுள்ளதான கருத்து சுதந்திர வர்த்தக வலய உற்பத்தியாளர்கள் சங்கத்தின் செயலாளர் தம்மிக்க பெர்னாண்டோவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

"அதிகளவான வரிச்சலுகை கிடைப்பதால், இலங்கையின் உற்பத்திகள் ஐரோப்பிய நாடுகளில் குறைந்த விலைகளில் கிடைக்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை மூலமாக இலங்கையின் ஆயிரத்து 400 உற்பத்திகள் 17 நாடுகளின் சந்தைகளில் சந்தைப்படுத்தப்படவுள்ளன.

இந்தக் காரண காரியங்கள் உள்நாட்டில் மட்டுமல்ல பன்னாடுகளிலும் தாக்கம் செலுத்தவுள்ளது.

முதலீட்டாளர்கள் அனைவரும் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதில் அதிக கவனம் செலுத்துவார்கள்" - என்றார்.



*அரசியல்...*

நினைவேந்தல் நிகழ்வில் முதலாவதாக அமைதியாக இருந்து 3 நிமிடங்கள் அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் இலங்கையின் எதிர்க் கட்சித் தலைவர் ஆகியோரின் உரைகள் இடம் பெற்றன.

எதிர்க்கட்சித் தலைவரின் உரை முடிந்ததும் முதன்மைச்சுடர் ஏற்றப்பட இருந்த பீடத்திற்குள் நுழைந்த பெண் ஒருவர் கோபாவேசமாகக் கத்தினார்.

"நாங்கள் இங்கே எங்கள் உறவுகளையும், குழந்தைகளையும், கணவர்களையும் இழந்து பரிதவித்துப்போய் வந்திருக்கிறோம். இங்கே வந்து நீங்கள் உங்கள் அரசியலைப் பேசிக் கொண்டிருக்காதீர்கள். வந்தீர்களா, அஞ்சலி செய்தீர்களா, உணர்வோடு நடந்துகொண்டீர்களா என்று இருங்கள். அதைவிடுத்து உங்கள் அரசியல் இங்கே தேவையில்லை" என்றார்.

முதலமைச்சர் முதன்மைச் சுடரை ஏற்றுவதற்கு வந்த சமயத்தில் அந்தப் பெண்மணி அவரையும் ஏனைய அரசியல்வாதிகளையும் பார்த்துச் சுட்டுவிரலை நீட்டி இவ்வாறு உணர்ச்சியோடு கொந்தளித்ததை அடுத்து அந்த இடத்தில் பதற்றம் தொற்றிக் கொண்டது.

எனினும் "நீங்கள் சொல்வதைப் போன்று தான் அஞ்சலி செலுத்தப்போகிறோம். அமைதியடையுங்கள்" என்று அந்தப் பெண்ணைச் சிலர் அமைதிப்படுத்தியைத் தொடர்ந்து முதலமைச்சர் சுடரை ஏற்றி வைத்தார். (உ)

**கடைகள் வாடகைக்கு**

யாழ் நகரின் மத்தியில் கடைகள்
வாடகைக்குண்டு.
நிறுவனங்களுக்கும் ஏற்றது.
077 162 0626

**விற்பனைக்கு உண்டு**

ரயர் கடையொன்றுக்குத்
தேவையான பொருள்கள்
விற்பனைக்கு உண்டு.
077 037 6616

**2018 A/L வெப்பவியல்**

By. M. Karunahnithy B.Sc (Hons)
SAT, SUN 4.30 pm
ஆரம்பம் 20.05.2017
The Science Corner Jaffna

**காணி விற்பனைக்கு**

மல்லாகம் சந்திக்கும் துர்க்கை அம்மன் கோவிலிற்கும் இடைப்பட்ட பகுதியில் (K.K.S வீதிக்கு அருகில்) 21/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு. 077 9151247

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
**கார்கிள்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




மஜெஸ்டிக் ப்ளாட்டினம்
10.30 / 1.30 / 4.30 / 7.30 வெள்ளி/சனி 9.30 PM



சில்வர் / ப்ரொன்ஸ்
10.30 / 2.30 / 6.30 வெள்ளி/சனி 10.30 PM
விசாரணை 021- 2227712
MajesticCineplexSL
www.ceylontheatres.lk

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ். மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 23 அரசடி வீதி ஆதன இல 56 என்ற இலக்கத்தைக்கொண்ட ஆதனம் பாலசுப்பிரமணியம் பெண் ராதாராணி என்னும் பெயரில் ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை இல.64 அரசடி வீதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கந்தசாமி கைம்பெண் தங்கம்மா அவர்களால் பிரசித்த நொத்தாரிசு அம்பிகைகாகர் சண்முகநாதன் முகதாவில் நிறைவேறிய சீதன உறுதி இல. 365/1976.03.27 படியும் அதே பிரசித்த நொத்தாரிசு முகதாவில் நிறைவேறிய சீதன திருத்தல் உறுதி இல. 384/24.10.1976 மூலமும் சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம் பெண் ராதாராணிக்கு சீதனமாக வழங்கப்பட்டுள்ளது தற்பொழுது பிரசித்த நொத்தாரிசு S.சோதிலிங்கம் முகதாவில் நிறைவேறிய உரித்து விளம்பல் உறுதி இல. 91/ 2016.10.26 மூலம் நாவேந்தன் பெண் வித்தியாஷினி என்பவர் தனது தயாரான பாலசுப்பிரமணியம் ராதாராணி 22.04.1998 இறக்க குறித்த ஆதனம் ஏகவாரிசாகிய தனக்கு வழியுரித்தாக வந்தடைந்ததெனவும் தானே இவ்வாதனத்திற்கு சொந்தக்காரியும் ஆவேன் என வெளிப்படுத்தியுள்ளார்.

**ஆதன விவரம் - வட மாகாண யாழ்ப்பாண மாநகர சபைப்பகுதி நல்லூர் பிரதேச செயலர் பிரிவு நீராவியடி J/101 கிராம அலுவலர் பிரிவு வண்ணார்பண்ணை இறை நினைவன சீமா பெரிய தோட்டம் பெரிய சீமா இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ந.கேதீஸ்வரன் அவர்களின் வரைபட இலக்கம் 3163/2016.05.21 இல் துண்டு 1 எனக் காட்டப்பட்ட நிலப்பரப்பு 3 குளி 01.15 ஆகும் இதற்கு எல்லை**

கிழக்கு - சிவயோதி சுரேஸ் பெண் கிருஸ்ணபிரியா கருணைலிங்கம் மகள் ஈஸ்வர ஜெனனி ஆனந் பெண் சுகந்தினியின் ஆதனம்
வடக்கு - சுரேஸ் பெண் கிருஸ்ணபிரியாவின் ஆதனம் அரசடி வீதி மயில்வாகனம் சுந்தரமூர்த்தியின் ஆதனம்
மேற்கு - பாலச்சந்திரன் மகள் சுசரித்தாவின் ஆதனம் மயில்வாகனம் சுந்தரமூர்த்தியின் ஆதனம்
தெற்கு - சிவகுருநாதன் பெண் ஸ்ரீகுலராணியின் ஆதனம்

**தற்போது இவ்வாதனத்தை நாவேந்தன் பெண் வித்தியாஷினி தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது நாவேந்தன் பெண் வித்தியாஷினி என்னும் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்**

ஆணையாளர்
மாநகரசபை.

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவில் சாவகச்சேரி வடக்கு (J/303) கல்வயல் (J/305) வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றும்
**திருமதி கேதா செந்தூரன்**
அவர்களின் அன்புத் தந்தையும்
**திரு. ச. செந்தூரன்** அவர்களின்
அன்பு மாமனும் ஆகிய
**நாகலிங்கம் சரவணமுத்து**
அவர்களின் தீடீர் இழப்பால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

**உத்தியோகத்தர்கள் நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம், தென்மராட்சி.**

## மரண அறிவித்தல்

### திருமதி சறோஜனிதேவி மகேஸ்பரன்



மலர்வு 01.10.1936
உதிர்வு 12.05.2017

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடா Markham இனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினிதேவி மகேஸ்பரன் கடந்த (12.05.2017) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வரதரட்னராசா பூலோகநாயகி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற மகேஸ்பரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, குலசிங்கம் மற்றும் செல்வரட்ணம் (UK), பஞ்சரட்ணம் (UK), கனகேந்திரன் (கனடா), ஜெயமலர் (இலங்கை), சந்திரகுமார்(கனடா)ஆகியோரின்அன்புச்சகோதரியும்நிவேத்தாதேவி (இலங்கை), பஞ்சராணி (ஜேர்மனி), காலஞ்சென்ற ராஜேஸ்வரி மற்றும்புஷ்பராணி(UK), குணமணி(கனடா), சந்திரகாந்தன்(இலங்கை), ஜீவா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஷகிலா (UK), சசிகலா (UK), சதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் துஷயந்தன் (UK), சிதம்பரநாதன் (UK), பவிதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் அபிஷன் (UK), அஷாயினி (UK), நிதுஷன் (UK), தமஷ்வினி (UK), தனுஜன் (UK), தர்மஜன் (UK), சாருஜன் (கனடா), சரணியா (கனடா), சஜீவன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20.05.2017) சனிக்கிழமை 8911, WOODBINE AVE, MARKHAM, ON L3R 5G1 இல் அமைந்துள்ள Chapel Ridge Funeral Home & Cremation Centre இல் பி.ப. 4.00 - 9.00 வரை பார்வைக்கு வைக்கப்பட்டு ஞாயிற்றுக் கிழமை 21.05.2017 காலை 9.00 - 11.30 வரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று 1591, Elgin Mills Road, Richmond Park on Las IM9. இல் அமைந்துள்ள Cemetery இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சதீஸ் (மகன்-கனடா) 905 4711251,
416 560 0704
ஷகிலா (மகள்-UK) 208 478 2205
சசிகலா (மகள்-UK) 208 554 4448
ரூபன் (பெறாமகன்-இலங்கை) 9477 224 8322**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## இலங்கை இளங்கலைஞர் மன்றம்வழங்கும்

## 38 ஆவது இசைவிழா

**இடம் - இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
காலம் - 19, 20, 21 - 05 - 2017)
(வெள்ளி, சனி, ஞாயிறு)**

**இன்று (19.05.2017) வெள்ளிக்கிழமை முதலாம் நாள் நிகழ்ச்சிகள்**

**தலைவர் - திரு. ச. லலீசன் அவர்கள்
முதன்மை விருந்தினர் - பேராசிரியர் திருமதி சுபதினி ரமேஷ்
(சிரேஷ்ட விரிவுரையாளர், மொழியியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்)**

மாலை 5.00 மணி - மங்கல இசை
நாதஸ்வர தவில் இளங்கலைஞர்கள்
நாதஸ்வரம் : ம. கோபிராஜ், இ. சம்யுதன்
தவில் : ஸ்ரீசிந்துஜன், ஸ்ரீபங்கஜன்
மாலை 5.30 மணி - மங்கலவிளக்கேற்றல்
இறைவணக்கம் : செல்வன் N.ஜெயந்தன்
இளங்கலைஞர்மன்றக்கீதம் : இளங்கலைஞர்மன்ற மாணவர்கள்
மாலை 5.45 மணி - குழுப்பாடல்
பாடுபவர்கள்
இளங்கலைஞர் மன்ற மாணவர்கள்
வயலின் : செல்வி எஸ். நிரஞ்சலா, மிருதங்கம் : செல்வன் க. இசைநிலவன்
மாலை 6.05 மணி - புல்லாங்குழல் இசை
புல்லாங்குழல் : திரு.க.தேசிகன், வயலின் : திரு. ப. சியாம்கிருஷ்ணா
மிருதங்கம் : திரு. M. பிரணவன், கெஞ்சிரா : திரு. K. ஞானவேல்
மாலை 6.35 இசையரங்கம்
பாட்டு : திரு. A.K கருணாகரன், வயலின் : திரு. K.குகபரன்
மிருதங்கம் : திரு . K.கஜன், முகர்சிங் : திரு. S.செந்தூரன்
மாலை 7.35 முதன்மை விருந்தினர் உரை
7.45 : சீத்தா சுயம்பரம்
நாட்டிய நாடகம் : நெறியாள்கை க.ரிஷிவர்மன்
8.00 - சிறுப்பிட்டியூர்
வில்லிசைக்கலைமாமணி
சத்தியதாஸ் வில்லிசைக்குழுவினர் வழங்கும்
திருநீலகண்டர் சரிதம் வில்லிசை

அனைவரையும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

**இளங்கலைஞர் மன்றம்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## சின்னத்தம்பி இராசநாயகம்

**( பிரசித்த நொத்தாரிஸ்)**

**தோற்றம்** 28.02 .1939
**மறைவு** 19.04.2017

**தொழிலுக்கு ஓர் ஆசானாய் உண்மைக்கு ஓர் உத்தமனாய்
பேச்சில் வல்லவராய் சிரிப்பின் சிகரமாய் வாழ்ந்தவர் நீங்கள்
மனிதருள் மாணிக்கமாய் மனிதத்தை மதித்தவர்
வறியவர் வாழ்வில் வசந்தமாய் வீசியவர்
உறவினருக்கு ஒரு பாலமாய் உரிமையுடன் வாழ்ந்தவர்
இசையில் உங்களது பிரியம் இமையம் தொடும்
இறுதி வரை உங்கள் நினைவு எம் இமையோடு கலந்திருக்கும்.**

எமது குடும்பத்தலைவர் சிவபதமடைந்தசெய்தி கேட்டு எமது இல்லத்திற்கு வருகை தந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் உள் நாட்டில் இருந்தும் வெளிநாட்டில் இருந்தும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் எமக்கு சகலவழிகளிலும் உதவியவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இல. 07, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.**

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1364
சீட்டிழுப்பு திகதி 2017.05.18
வெற்றி இலக்கங்கள்
02 06 11 25 C
அடுத்த டிக்கட்டிழுவைக்கான ஜக்பொட்
ரூ. 11,846,840/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 651
சீட்டிழுப்பு திகதி 18.05.2017 வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
09 29 51 71 E
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 45, 544,608/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
நீல நிற டிக்கட்டுக்கள் 20.05.2017 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுக்கள் 06 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Development Fortune
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▶ 40
சீட்டிழுப்பு திகதி ▶ 18.05.2017 வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
20 21 33 53
சுப்பர் இலக்கம் 03
அதிர்ஷ்ட மாதம் ஓகஸ்ட்
அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் 1, 13,45, 970/=
அடுத்த சுப்பர் ஜக்பொட் 35, 07, 806/=
அடுத்த ஜக்பொட் 15, 08, 020/=
20.05.2017 திகதி சனிக்கிழமை இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

## கலைப்பீடம்,
## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் பட்டப்பின் கல்வியல் டிப்ளோமா கற்கைநெறி (முழுநேரம்) இரண்டாம் அரை ஆண்டு பரீட்சைகள்-2015

மேற்படி பரீட்சையானது எதிர்வரும் 27.06.2017 ஆம் திகதி முதல் 30.06.2017 ஆம் திகதி வரை நடைபெறும்.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 05.06.2017 ஆம் திகதி முதல் 12.06.2017 ஆம் திகதி வரை கல்வித்துறை அலுவலகத்தால் ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பங்களை கல்வித்துறை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைக்கான பரீட்சை அனுமதி அட்டையினை 19.06.2017 ஆம் திகதி முதல் 24.06.2017 திகதி வரை கல்வித்துறை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சார்த்திகள் பரீட்சைக்கட்டணத்தினை பல்கலைக்கழக காசாளரிடமோ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கி கிளையிலோ செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம் பற்றுச்சீட்டை பரீட்சை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

**பதிவாளர் .18.05.2017**

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 16 . 06 . 1995 — இறப்பு 18 . 05 . 2017

### கந்தசாமி பிரதீபன்

எமது நிறுவனத்தின் பணியாளர் **கந்தசாமி பிரதீபன்** அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**S.V.Murugesu CALTEX - JAFFNA.**
**உரிமையாளர் பணியாளர்கள்.**

## மரண அறிவித்தல்கள்

### சரவணமுத்து சிவக்கொழுந்து



பிறப்பு 17.04.1916 — இறப்பு 18.05.2017

கோவில் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சிவக்கொழுந்து நேற்று (18.05.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**077 466 5343, 026 222 7538 (நீதன்)**

### நடராசா பாஸ்கரன்
(காந்தன்)



தோற்றம் - 08.03.1962
மறைவு -17.05.2017

தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா பாஸ்கரன் (17.05.2017) புதன் கிழமை காலமானார் .

அன்னார் காலஞ்சென்ற நடராசா மற்றும் பூபதி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சிவகாமியின் அன்புக்கணவரும் தயாபரனின் (FRANCE) அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19.05.2017) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முகவரி:**
**தாவடி தெற்கு, கொக்குவில்**
**021 320 1149**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Yarl Beauty & Language's Skills College
YBLSC




இல.17, 3ம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(ராசி கலெக்சனுக்கு அருகில் உள்ள ஒழுங்கை)

## தேவை

**சுன்னாகத்தில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு கணினி அறிவுடைய பெண் கணக்கியல் உதவியாளர் மற்றும் ஆண் விற்பனை உதவியாளர் தேவை.**

**தகைமைகள்**
**கணக்காளர் (உதவியாளர் பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)**
*க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருக்க வேண்டும்
*ஆங்கிலம் எழுத பேச தெரிந்திருக்க வேண்டும்
*வருமானவரி கணக்குகள் தொடர்பான பூரண அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
*கணக்காய்வு நிறுவனத்திலோ அல்லது நிதி நிறுவனத்திலோ கணக்காய்வு உதவியாளராக பணிபுரிந்திருத்தல் வேண்டும்.
*கணினி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
*வயதெல்லை 21 - 30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**விற்பனை உதவியாளர் (ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)**
*க.பொ.த (சாதாரணம்) கற்றிருத்தல் வேண்டும்.
*முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்
*வயதெல்லை 19 - 45 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிவரக்கோவை, அடையாள அட்டை போட்டோபிரதி, சான்றிதழ்களின் போட்டோபிரதி ஆகியவற்றை இணைத்து 30.05.2017 இற்கு முன்னதாக கீழ் குறிப்பிட்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். பிற்குறிப்பு மாத சம்பளமாக ரூ25000 வழங்கப்படும்.

**விளம்பர இல - 5535**
**மே/பா உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

### வைத்தி சின்னப்பு
**(பாரம்பரிய வைத்தியர், ஆனந்தஜோதி வைத்தியசாலை RIMP,DAM,MIH, சகாஷ்ராபிஷேக வைத்தியசூரி, ஜனாதிபதி விருது வைத்தியரத்னம்)**



தோற்றம் - 10.12.1925
மறைவு - 18.05.2017

சாவகச்சேரி அகன்ஸ்மன் வீதி இலக்கம் 09 ஐ பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தி சின்னப்பு நேற்று (18.05.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2017) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப் பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**NO .09 ஆனந்தஜோதி வைத்தியசாலை**
**கொன்ஸ்மன் வீதி, சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 317 9771, 0777 448 366**

**முதலாம் பக்கத்தொடர்ச்சிகள்...**

### சம்பந்தர்...

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் கலந்துளள கொண்டனர்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முதன்மைச் சுடரை ஏற்றியதன் பின்னர் இரா.சம்பந்தனும் அதனை ஏற்றி வைத்தார். நிகழ்வில் கலந்துகொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் உயிரிழந்த மக்களுக்காக அஞ்சலி செலுத்தினார். கடந்த ஆண்டு இந்த நிகழ்வு முள்ளிவாய்க்காலில் நடந்தபோது இவர்கள் இருவரும் அதில் கலந்துகொண்டிருக்கவில்லை. இது ஒரு சர்ச்சையாக அப்போது இருந்தது. அரசுடன் இயைந்து போகும் போக்கைக் கைக்கொள்வதன் காரணமாகவே கொழும்புக்கு எதிரானதாகக் கொள்ளப்படும் இந்த நிகழ்வில் அவர்கள் இருவரும் கலந்துகொள்ளவில்லை என்று அவர்களின் அரசியல் எதிராளிகள் பலரும் விமர்சனங்களை முன்வைத்தனர். சமூக வலைத்தளங்களிலும் அது பற்றிக் கடுமையாகச் சாடி பதிவுகள் வெளியாகின.

கடந்தமுறை எழுந்த விமர்சனங் களைப் பொய்யாக்கும் விதத்தில் இவர்கள் இருவரும் முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் நேற்றுக் கலந்து கொண்டனர்.

(உ)

### மஹாசேன்...

நேரம் பதற்றம் ஏற்பட்டது.

இந்தக் கும்பல் முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் இரு நிறங்கள் இல்லாத சிங்கக் கொடிகளை நகரின் மத்தியில் உள்ள மின்கம் பங்களில் பறக்க விட்டுவிட்டு யாழ்ப்பாணம் நோக்கித் தப்பி ஓடினர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஈழத்தின் பெருந்துயரான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்றுத் தமிழர் தாயகம் எங்கும் உணர்வெழுச்சியுடன் தமிழ் மக்களால் கடைப்பிடிக்கப்பட்ட நிலையில், அவற்றைக் குழப்பும் வகையில் மஹாசேன் பலகாய அமைப்பினர் இந்த அடாவடியில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டப் பட்டுள்ளது.

பேருந்து ஒன்றில் வந்த இவர்கள் சில நிமிட நேரம் கிளிநொச்சி நகரின் மத்தியில் தரித்து நின்று சிங்கக் கொடிகளை மின்கம்பங்களில் கட்டிவிட்டு வேகமாக அங்கிருந்து தப்பிச் சென்றதாகக் கிளிநொச்சி மக்கள் கூறினர்.

போரில் உயிரிழந்த ஆயிரக்கணக்கான உறவுகளைத் தமிழ் மக்கள் நேற்று நினைந்துருகி அஞ்சலித்த துக்க தினத்தில் தமிழர்களின் மனதைப் புண்படுத்தும் வகையில் மஹாசேன் பலகாய அமைப்பு நன்கு திட்டமிட்டே இந்த அடாவடித்தனத்தில் ஈடுபட்டதாகக் கிளிநொச்சி மக்கள் விசனம் வெளியிட்டனர்.

(கு-21.35)

## கத்திக்....

காலை 9.30 மணிக்கு நிகழ்வு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கு முன்பாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாகாண சபை உறுப்பினர்கள் கட்சித் தலைவர்கள் பொது மக்கள் எனப் பலரும் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் குழுமியிருந்தனர்.

கடந்த இரண்டு வருடங்களில் இல்லாத வகையில் அனைத்து மதத் தலைவர்களும் நிகழ்விற்கு வருகை தந்திருந்தனர். சிறப்பாகப் பிக்குகள் இருவரும்கூட வருகை தந்திருந்தனர்.

சரியாக 9.30 மணிக்கு நினைவேந்தல் நிகழ்வு ஆரம்பமானது. போரில் உயிரிழந்த அனைவருக்காகவும் மூன்று நிமிட நேரம் அமைதியான அஞ்சலி செலுத்தப்பட்டது. அதன் பின்னர் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உரையாற்றினார். தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் உரையாற்றினார்.

கடந்த ஆண்டு கட்சித் தலைவர்கள் அனைவரும் உரையாற்ற அனுமதிக்கப்பட்டனர். இந்தத் தடவை அது நிறுத்தப்பட்டு இரு தலைவர்கள் மட்டுமே உரையாற்றினர். அஞ்சலி உரைகள் நிறைவுற்றதும் முதன்மைச் சுடர் ஏற்றப்பட்டது. முதலமைச்சர் அந்தச் சுடரை ஏற்றி வைத்தார்.

புதிதாகக் கைகள் பொருத்தப்பட்டு மெருகூட்டப்பட்டிருந்த சுடர் ஏந்தும் பீடத்தில் வைக்கப்பட்டிருந்த கற்பூரச் சட்டியில் தீக் குச்சியைக் கொண்டு தீபத்தை ஏற்றினார் முதல்வர். கொழுந்து விட்டு எரியத் தொடங்கிய அந்தச் சுடரினுள் மேலும் கற்பூரங்களை இட்டு அதனைப் பிரகாசமாக்கிய எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், இரு கைகளையும் கூப்பி மனமுருகி தீபத்தின் முன்பாக அஞ்சலி செலுத்தினார்.

அவரைத் தொடர்ந்து, போரில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் நால்வர் முதன்மைச் சுடரைச் சுற்றி நான்கு புறமும் நாட்டப்பட்டிருந்த சிறு சுடர்களை ஏற்றினர். தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் சுடரினை ஏற்றினர். அவர்களைத் தொடர்ந்தும் அவர்களின் இடையேயும் போரில் இழப்புக்களைச் சந்தித்தவர்களும் பொதுமக்களும் கதறியழுதபடி தமது அஞ்சலிகளைக் காணிக்கையாக்கினர். (உ)

## ஐக்கியம்...

ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்தப்போகின்றோம் என்று கூறும் அரசு தொடர்ந்து படையினரை இங்கு நிறுத்தி வைத்திருப்பதன் மர்மம் என்ன?

இவ்வாறு கேள்வி எழுப்பினார் வடக்கு மாகாண முதலமைச்சர். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் நேற்று அஞ்சலி உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:

2009ஆம் ஆண்டில் இறுதிப் போரின்போது போராளிகள் சிலரையும் அப்பாவி மக்கள் பலரையும் பாகுபாடின்றிக் கொன்றொழித்த ஒரு துயர நாளின் நினைவு நாளே இன்று. இலங்கை வாழ் தமிழ் மக்கள் வாழ்விலும் புலம்பெயர் தமிழ் மக்கள் வாழ்விலும் ஒரு மறக்க முடியாத துயரம் தோய்ந்த துன்பியல் நாள்.

இது தொடர்ந்தும் ஒரு துக்க நாளாகக் கடைப்பிடிக்கப்படவேண்டும். எமது துயரத்தை வேதனையைப் பிரதிபலிக்கும் இந்த நாள் எமது ஒற்றுமையையும் ஒருமித்த எதிர்பார்ப்புக்களையும் உலகறிய உதவும் நாளாகவும் பரிணமிக்க வேண்டும். எமது உறவுகளின் அநியாய இன அழிப்பே எமது இனத்தின் ஒற்றுமைக்கான வித்தாக அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன்.

தாயகத்திலும் புலத்திலும் பிரிந்து, பிளவுண்டு நிற்கும் தமிழ் மக்களை ஒன்றிணைக்கும் நாள் இது என்று தான் கருதுகின்றேன். ஏனென்றால் அநியாயமாக காரணமின்றி அப்பாவி மக்கள் கொல்லப்பட்ட நாள் இது.

சென்ற வருடம் முள்ளிவாய்க்கால் சூழலில் மட்டும் பொலிஸார் நின்றார்கள். வழிநெடுக பொலிஸாரைக் கொண்டுவந்து குவிக்கவில்லை. ஆகவே உயிர் நீத்தோருக்கான எமது பிரார்த்தனை நிகழ்வு தற்போது அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவே நான் காண்கின்றேன். எனவே இந்த நிகழ்வு வருடந்தோறும் எமது மக்களை ஒன்றிணைக்கும் ஒரு நிகழ்வாக மாறவேண்டும். அகிம்சை முறையில் எமது எண்ணப்பாடைத் தெரிவிக்கும் ஒரு நாளாக மாறவேண்டும்.

இன்று மக்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைதியாகப் போராடுகிறார்கள். காணிகளைத் திருப்பித் தாருங்கள் என்கின்றார்கள். காணாதவர்களின் கதி என்னவென்று உரக்கக் கேட்கின்றார்கள். சிறையில் வாடும் அரசியல் கைதிகளை பொது மன்னிப்பில் விடுவிக்கக் கோருகின்றார்கள். வேலையற்றவர்கள் வேலைகோரி நிற்கின்றார்கள். மீனவர்கள் கடற்படையினரின் காரியங்கள் பற்றி காரசாரமாய்க் கதைக்கின்றார்கள். இவற்றிற்கு அடிப்படைக்காரணம் என்ன என்று பார்த்தால் போர் முடிந்து எட்டு வருடங்களுக்குப் பின்னரும் எந்தவித அரசியல் ரீதியான வன்முறைகள் தலைதூக்காத நிலையிலும் ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேலான படையினர் வடமாகாணத்தில் குவித்துவைக்கப்பட்டிருக்கின்றமைதான்.

அண்மையில் இந்த இடத்திற்குப் பிரார்த்தனைக்காக வந்த கனடாவின் ஒன்டாரியோ மாநிலத்தின் நகர பிதா ஜோன் டோரி (John Tory) தான் செல்லும் வழியில் இருக்கும் ஒவ்வொரு இராணுவ முகாம்களையும் அடையாளப்படுத்திச் சென்றார். போருக்குப் பின் ஏன் இத்தனை படை முகாம்கள் என்று இங்கு கேட்டார்; கனடாவிலும் கேட்டார்.

அதற்குப் பதில் சொல்ல வேண்டிய காலம் இப்பொழுது கனிந்துள்ளது. போரின்போது அல்லது போர் முடிவின்போது மனித உரிமைகளுக்கு மாறான போர்க்குற்றங்களை இழைத்தவர்கள் படையினர். போர் முடிந்து நாட்டின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்தப் போகின்றோம் என்று கூறும் அரசு தொடர்ந்து படையினரை இங்கு நிறுத்தி வைத்திருப்பதன் மர்மம் என்ன?

இன்று போர் முறைகள் மாறிவிட்டன. ஓர் அறைக்குள் இருந்து கொண்டே வடமாகாணம் முழுவதும் என்ன நடக்கின்றதென்பதை நவீனத் தொழில்நுட்ப அறிவைக் கொண்டு அறிந்து கொள்ளமுடியும். அதற்காக எமது காணிகளைச் சுவீகரித்து, வீடுகளைக் கையகப்படுத்தி, தொழில்களைத் தம்வசப்படுத்தி, எமது நீர் நிலைகளைக் கைப்பற்றி, வெளி மாகாண மீனவர்களை வருந்தியழைத்து எம்மக்களின் வாழ்வாதாரங்களை முடங்கச் செய்து, எம் பாதிக்கப்பட்ட பெண்களின் பாதுகாப்புக்களை கேள்விக்குறியாக்கி, வருந்தியழைத்து வெளி மாகாண மக்களை எம்மாகாணங்களில் குடியிருத்தி, பௌத்தர்கள் இல்லாத இடங்களில் புத்த உருவச்சிலைகளை உருவமைக்க உதவிசெய்து எனப் பலவற்றையும் செய்யவேண்டுமா என்ற கேள்வி எழுகின்றது.

இராணுவமே வெளியேறு! கடற்படையே வெளியேறு! வான்படையினரே வெளியேறுங்கள்! என்று எம்மக்கள் சேர்ந்து குரலெழுப்பும் நன்நாள் வெகு தூரத்தில் இல்லை. காரணமின்றி காழ்ப்புணர்ச்சியுடன் இங்கு அவர்கள் காலங்கடத்துவதைக் காரசாரமாக விவாதிக்கப்போகும் நாள் தொலைவில் இல்லை. உண்மையில் இராணுவத்திற்கும் கடற்படைக்கும் வான்படைக்கும் இங்கு வேலையில்லை. பாதுகாப்பைப் பொலிஸ் படையினர் செய்யலாம்.

ஆகவே இந்தத் தினத்தை நாம் கட்சி, மத, வர்க்க, பிராந்திய பேதங்கள் இன்றி ஒருமித்து நினைவேந்துவோம்! எங்கள் ஒருமித்த குரல் ஒலிக்க வேண்டிய கட்டாயம் உண்டு என்பதை மறவாதிருப்போமாக!

வடமாகாணசபையாகிய எமக்கு அதிகாரங்கள் போதிய அளவு இருக்கின்றதோ இல்லையோ வடமாகாண மக்களின் வாக்குகளின் பிரதிபலிப்பே நாங்கள். ஜனநாயக ரீதியாக எமது மக்கள் யாவரையும் ஒன்றிணைக்கும் ஓர் அமைப்பே வடமாகாண சபை. அதன் தலைமகன் என்ற முறையிலேயே நான் இந்த நினைவேந்தலில் கலந்துகொண்டுள்ளேன். கட்சிகளுக்கு அப்பாற்பட்டு மக்களின் ஏகோபித்த குரலாக, கரமாக, அதிகாரமாக நான் செயற்பட்டே இந்தச் சுடரை ஏற்றுகின்றேன்.

இதேபோன்று இந்த நிகழ்வு தொடர்ந்தும் எமது மக்களின் துயரத்தையும் சோகத்தையும் அதேநேரம் எமது ஒற்றுமையையும் ஒருங்கிணைப்பையும் பிரதிபலிக்கும் நாளாக வருடாவருடம் மிளிர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன் - என்றார். (உ)

## குழப்பகரமான...

ஏற்பட்டது. நிகழ்வுக்கான கட்டுப்பாட்டு எல்லைகள் சிவப்பு மஞ்சள் கொடிகளைக் கொண்டு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. எனினும் அவர்கள் அதனை மீறி அஞ்சலி உரையாற்றியவர்களை நெருங்கிச் சென்றதால் ஒருவித அமைதியின்மை தொடர்ந்து கொண்டிருந்தது. இதனால் நெரிசல், தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

எதிர்க் கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் உரையாற்றிக் கொண்டிருந்தபோது குறுக்கிட்ட ஊடகவியலாளர் ஒருவர், "பயங்கரவாதத்தைத் தோற்கடித்த அரசுக்கு நாடாளுமன்றத்தில் பாராட்டுத் தெரிவித்த நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள்" என்று கேள்வி எழுப்ப முற்பட்டார்.

உடனடியாக அவருக்கு எதிராக அங்கிருந்த அனைவரும் குரல் எழுப்பியதுடன், நிகழ்வைக் குழப்பும் வகையில் அமைந்த அவரது செயலைக் கடுமையாகக் கண்டித்து அவரை அடக்கி விட்டனர். இதனாலும் நிகழ்வில் சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டது.

இந்தச் சலசலப்பைப் பொருட்படுத்தாத எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், தனது உரையை ஆற்றி முடித்தார்.

நினைவு முற்றத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போதே அந்தப் பகுதிக்கு வந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், சி.தவராசா, அனந்தி சசிதரன் ஆகியோரின் குழுவினர் தாம் பிறிதாக ஒரு அஞ்சலி நிகழ்வை அங்கு நடத்தினர். இது மற்றொரு அமைதியின்மையை ஏற்படுத்தியது.

அந்தக் குழுவினர் கடந்த ஒரு வாரமாகப் பல்வேறு இடத்திலும் தாம் நடத்தி வந்த நினைவேந்தலின் இறுதியாகவே முள்ளிவாய்க்காலிலும் நிகழ்வை நடத்தினர். எனினும் முதன்மை நிகழ்வு இடம்பெற்றுக் கொண்டிருக்கையிலேயே மற்றொரு நிகழ்வும் அந்த இடத்தில் நடந்ததும் சிவாஜிலிங்கம் பெருங்குரலில் உரையாற்றிக் கொண்டிருந்ததும் அந்த இடத்தின் அமைதியைக் குலைத்தது.

இதனைப் பார்த்த கூடியிருந்த பொதுமக்கள் "தமிழன் எங்கு போனாலும் ஒற்றுமையாக இருக்கமாட்டான். அவனைத் திருத்தவே முடியாது" என்று பேசிக்கொண்டு விலகிச் சென்றனர். (உ)

## இனியொரு...

சுடரினை ஏற்றுவதற்கு முன்னர் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

30 ஆண்டு காலமாக நடைபெற்ற போர், இறுதியில் இங்குதான் முடிவடைந்தது. அதில் உயிரிழந்த மக்களை நினைவு கூரும் வகையில், அந்தப் போரில் மடிந்த மக்கள் அனைவருக்கும், மரியாதை செய்யும் வகையில், ஆத்மா சாந்தியடையும் வகையிலும் இந்த நிகழ்வு நடைபெறுகின்றது.

இந்தப் போர் ஏன் நடைபெற்றது? ஏன் முப்பது வருட காலமாக அது நீடித்தது? இந்தப் போரின் உண்மையான நோக்கம் என்ன? அந்தக் குறிக்கோளை நாங்கள் அடைந்துள்ளோமா? இனிமேலும் இந்த நாட்டில் ஒரு போர் ஏற்படாத வகையில் நிலமைகள் தற்போது மாறியுள்ளனவா? மாற்றம் அடையவேண்டிய தேவை உள்ளனவா? மாற்றம் அடைய வேண்டிய தேவை இருந்தால் அந்த மாற்றத்தை அடைவதற்கு என்ன நடைபெற வேண்டும்? இந்த விதமான கேள்விகளுக்கு இன்று நடைபெறும் நிகழ்வு பதில் அளிக்க வேண்டும்.

இந்தக் கேள்விகளுக்கு விடையளிப்பதற்காக உண்மையைக் கண்டறியவேண்டும். அதற்காக நீதியான விசாரணை இடம்பெறவேண்டும்; நீதி கிடைக்கவேண்டும். அதனடிப்படையிலேயே பரிகாரம்காணவேண்டும். போர் இனிமேலும் இடம்பெறாதிருக்க இவற்றினையே பரிசீலிக்க வேண்டும். அப்போது தான், உண்மையான, சமத்துவமான நியாயம் பிறக்கும்.

இந்த நாட்டின் ஆட்சி முறையில் பெரிய மாற்றங்கள் நிகழ வேண்டும். அதன் அடிப்படையில் நாட்டில் நிரந்தரமான சமத்துவமான சமாதானம் ஏற்படக்கூடிய வழிபிறக்கும். அதை எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டும். அது மாத்திரம் அல்ல இவ்விதமான சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாமல் இருப்பதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்.

இன்றைய நிகழ்வு முள்ளிவாய்காலில் நடைபெறுகின்றபோது இங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாத்திரம் அல்ல இங்கு வந்திருக்கின்றார்கள் பௌத்த குருமார்கள். இஸ்லாமிய குருமார்கள், கத்தோலிக்க குருமார்கள் மற்றும் இந்த நாட்டில் உள்ள மக்கள் மட்டும் அல்ல, பன்னாட்டுச் சமூகம் பார்த்துக்கொண்டு இருக்கின்றது.

ஆரம்பத்தில் நான் கூறியிருந்தேன், உண்மை கண்டறியப்பட வேண்டும். உண்மை அறிய வேண்டும் என்றால் போரின்போது நடைபெற்ற சம்பவங்கள் வெளிவரவேண்டும். உண்மை வெளிப்பட வேண்டும். போர் நடைபெறுவதற்கு முன்னதாக இந்தப் பகுதியில் கடமையாற்றிக்கொண்டு இருந்த பன்னாட்டு நிபுணர்கள், ஐ.நா.அதிகாரிகள், செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் உள்நாட்டில் கடமையாற்றிய அதிகாரிகள் வெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் இங்கு வரக்கூடிய நிலமைகள் இருக்கவில்லை. இந்தப் பிரதேசத்தில் 60 ஆயிரம் பொதுமக்கள் தான் வாழ்கின்றார்கள் என்று அரசு தெரிவித்தது. ஆனால் உண்மையில் இங்கு 4 லட்சம் மக்கள் வாழ்ந்துள்ளார்கள். அவ்விதமான உண்மைகள் வெளிவர வேண்டும். அந்த உண்மையின் அடிப்படையில் மக்களுக்கு தீர்வுகள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (உ-7.101)

## சின்னப்பர்...

அண்மையில் நினைவேந்தல் நிகழ்வை நடத்த முல்லைத்தீவு நீதிவான் மன்று இடைக்காலத் தடை உத்தரவு விதித்திருந்தது. எனினும் சின்னப்பர் தேவாலயத்தில் நடத்த வழங்கப்பட்ட அனுமதியையடுத்தே நேற்று மாலை நினைவேந்தல் நடைபெற்றது.

முள்ளிவாய்க்கால் சின்னப்பர் தேவாயலத்துக்கு அருகில் இறுதிப் போரில் உயிர்நீத்த உறவுகளில் குறிப்பிட்ட சிலரின் பெயர்கள் பொறிக்கப்பட்டு நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்படவிருந்தது.

நினைவேந்தலுக்கான நினைவுக்கற்கள் அமைக்கப்படுவது தொடர்பாக ஏற்பாட்டாளரான அருட்தந்தை எழில்ரஜன் முல்லைத்தீவுப் பொலிஸாரால் விசாரணைக்கு உட்பட்டிருந்தார். நினைவேந்தல் நிகழ்வுக்காக அமைக்கப்பட்ட நினைவுக்கற்களிலுள்ள பெயர்கள் யாருடையது என்பதை உறுதிப்படுத்த முடியாது உள்ளது என்று முல்லைத்தீவு பொலிஸார் முல்லைத்தீவு நீதிவான் மன்றுக்கு அறிவித்தனர். எனவே நினைவேந்தல் நிகழ்வுக்கு அவர்கள் தடை உத்தரவை மன்றில் கோரியிருந்தனர்.

இந்த நிலையில் சின்னப்பர் கத்தோலிக்க இல்லத்துக்கு அண்மையில் நினைவுக்கற்கள் அமைக்கப்பட்ட இடத்தில் நினைவேந்தலை நடத்த முல்லைத்தீவு நீதிவான் மன்று நேற்றுமுந்தினம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்தது. எனினும் நினைவுக்கற்கள் நடப்பட்டுள்ள இடத்தில் அல்லாமல் தேவாலயத்தில் நினைவேந்தலை முன்னெடுக்க அனுமதி வழங்கப்பட்டது. இதனை அடுத்து நேற்று மாலை ஆலயத்துக்கு முன்பாக நினைவேந்தல் நடைபெற்றது.

நிகழ்வில் முள்ளிவாய்காலில் கொல்லப்பட்ட மக்களின் உறவினர்கள், அருட்தந்தைகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். உயிரிழந்தவர்களுக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. கொல்லப்பட்ட உறவுகளை நினைத்து மக்கள் கண்ணீர்விட்டுக் கதறி அழுதார்கள். அருட்தந்தைகள், பொது மக்கள் உறவுகளுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். முள்ளிவாய்காலில் உயிரிழந்த உறவுகளின் பெயர்கள் தாங்கிய சில நினைவுக் கற்களையும் அவர்கள் வைத்திருந்து கதறிஅழுது அஞ்சலி செலுத்தினர். (வ-21,7)

## முல்லையில்...

நிகழ்வுகளைத் தொடர்ந்து அவர்கள் தங்கள் வர்த்தக நிலையங்களை மூடிக் கடையடைப்பை முன்னெடுத்திருந்தனர்.

உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கடையடைப்பு நடத்தப்பட்டது என்று புதுக்குடியிருப்பு வர்தக சங்கத்தலைவர் செ.செல்வச்சந்திரன் தெரிவித்தார். (ற-21.7)

## முள்ளிவாய்க்கால்...

இலங்கைச் சிவசேனைத் தலைவர் மறவன் புலவு க.சச்சிதானந்தன், தமிழ்நாடு இந்து மக்கள் கட்சிச் செயலாளர் இராம இரவிக்குமார் மயிலாப்பூரில் அருள்மிகு கபாலீச்சரர் கோயிலில் போர்க்களத்தில் உயிர் நீத்த பல இலட்சம் தமிழருக்காக நீத்தார் வழிபாடு நேற்றுச் செய்தனர்.

நூற்றுக்கணக்கான சிவ அடியார்களும் தொண்டர்களும் இந்து மக்கள் கட்சித் தலைவர் அருச்சுனர் சம்பத்தர் தலைமையில் கூடினர். வழிபாட்டில் பங்கேற்றனர். உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனும் வழிபட்டார்.

அத்துடன், இந்து மக்கள் கட்சித் தொண்டர்கள் உத்தரப் பிரதேசம் காசியில் கங்கைக் கரையிலும் தமிழ்நாட்டில் இராமேச்சரத்திலும் சீர்காழியிலும் மதுரையிலும் தஞ்சாவூரிலும் கும்பகேணத்திலும் கோயம்புத்தூரிலும் நீத்தார் வழிபாடு செய்தனர். (வ-5)

## எப்போது நடைபெறும் சதுரங்கத் தொடர்கள்

யாழ்ப்பாணம், மே 19
வடமாகாண முதலமைச்சர் கிண்ணத்துக்கான நடப்பு வருட சதுரங்கத் தொடர் நடத்தப்படுவதற்கான காலப்பகுதி கடந்துள்ள போதிலும் தொடர் நடத்தப்படுவது தொடர்பில் உறுதியான தகவல்கள் எதுவும் வெளிப்படுத்தப்படவில்லை.
இது தொடர்பாக வடமாகாண கல்வி திணைக்களத்தின் மாகாண கல்வி பணிப்பாளர் செ.உதயகுமாருடன் தொடர்புகொண்டு கேட்டபோது "வடமாகாண சபை இந்தத் தொடருக்கான நிதியை இன்னும் ஒதுக்கி தரவில்லை. ஒதுக்கீடு செய்யப்பட்டால் போட்டிகள் நடைபெறும்" என அவர் தெரிவித்தார். (ம-422)



# சென். சேவியர் சம்பியனானது

யாழ்ப்பாணம், மே 19
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் 18 வயது ஆண்கள் பிரிவில் மன்னார் சென். சேவியர் அணி மாகாணத்தில் மகுடம் சூடியது. யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற இறுதியாட்டத்தில் சென். சேவியரை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மோதியது. இரு அணிகளும் மிகச் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தின. பந்து அங்கும் இங்குமாக அல்லாடித் திரிந்ததே மிச்சம். கோலெதுவும் பதிவாகாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.
இரண்டாம் பாதியிலும் அதேநிலைதான். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்கள் நிறைவில் கோலெதுவும் பதிவாகாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:2 என்ற கோல் கணக்கில் சென். சேவியர் அணி கிண்ணம் வென்றது. (ம-23)

## வலைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மே 19
வடமாகாகண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நாளை மறுதினம் தொடக்கம் செவ்வாய்க்கிழமை வரை நடைபெறவுள்ளது. (ம-23)

## துடுப்பாட்டம்

யாழ்ப்பாணம், மே 19
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தத் திட்டமிட்ட துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இன்று முதல் ஆரம்பமாகின்றன.
இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பருத்தித்துறை வீனஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சாவகச்சேரி சி.ஆர்.சி. விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம108)

## நியூசி. வெற்றி

முத்தரப்புத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தி நியூசிலாந்து அணி வெற்றிபெற்றது.
அயர்லாந்து, நியூசிலாந்து, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடர் அயர்லாந்தில் நடைபெற்று வருகிறது. நியூசிலாந்து - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 9 இலக்குகள் இழப்புக்கு 257 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக சர்க்கர் 61 ஓட்டங்களைக் குவித்தார். பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து 15 பந்துகள் மீதமிருக்க 6 இலக்குகள் இழப்புக்கு வெற்றிபெற்றது. (ம)



## ஞானமுருகன் – யங்ஹென்றிஸ் நாளைமறுதினம் பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், மே 19
உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழின் நட்சந்திர வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி நாளைமறுதினம் மோதவுள்ளது.
உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இறுதியாட்டம் நடைபெறவுள்ளது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதவுள்ளது.
நிகழ்வுக்கு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான இ.ஆனல்ட் மற்றும் பா.கஜதீபன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-23)

## செல்டாவை வென்றது ரியல் மட்ரிட் கழகம்

### றொனால்டோ நெருப்பாட்டம்

லாலிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ரியல் மட்ரிட் அணி அபார வெற்றிபெற்றது.
ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடர் மிகவும் பழமையானது. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் செல்டாவை எதிர்த்து ரியல் மட்ரிட் மோதியது. ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் மட்ரிட்டின் முதல் கோலைப் பதிவுசெய்தார் றொனால்டோ. முதல் பாதியின் முடிவுவரை வேறெந்த மாற்றங்களும் இடம்பெறவில்லை.
இரண்டாம் பாதியின் ஆரம்பத்தில் அதாவது ஆட்டத்தின் 49 ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட்டின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார் றொனால்டோ.
69 ஆவது நிமிடத்தில் கைடெட்டி, செல்டாவின் கோலைப் பதிவுசெய்தார். ஆட்டத்தின் 70 ஆவது நிமிடத்தில் பென்சிமா, 88 ஆவது றொனி குரூஸ் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட் அணி. இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றதன் மூலம் லா லிகா புள்ளிப்பட்டியலில் முதலிடம் பிடித்து கிண்ணம் வெல்வதற்கான வாய்ப்பை அதிகப்படுத்தியது ரியல் மட்ரிட். (ம)




## வடக்கு வீரர்களுக்கு முறையான பயிற்சி வழங்கினால் பன்னாட்டு அரங்கிலும் நிச்சயமாகச் சாதிக்க இயலும்

### வேலாயுதம் கணேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 19
வடமாகாண வீரர் மற்றும் கழக வீராங்கனைகளுக்கு முறையான பயிற்சி வழங்கினால் அவர்களால் பன்னாட்டு அரங்கில் நிச்சயம் சாதிக்க இயலும் இவ்வாறு தெரிவித்தார் சிவன் அறக்கட்டளை நிறுவுனரும், ரெலோவின் கொள்கைப் பரப்புச் செயலாளருமான வேலாயுதம் கணேஸ்வரன்.
குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டமும் பரிசளிப்பு நிகழ்வும் நேற்றுமுன்தினம் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்றது. அதில் தலைமை விருந்தினராக



கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். "போர் தந்த வலிகளில் இருந்து மீள்வதற்கு கல்வி மற்றும் விளையாட்டை நாம் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும்.
விளையாட்டைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு விளையாட் டுக்களி லும் பன்னாட்டு அரங்கில் சாதிக்க கூடிய பல வீரர், வீராங்கனைகள் எமது மண்ணில் உள்ளனர்.
அவர்களை ஒருங்கிணைத்து போதிய பயிற்சிகள் ஏனைய இதர வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலம் தேசிய மட்டத்தில் மட்டுமல்லாது பன்னாட்டிலும் சாதிக்க முடியும்.
அதற்கு வேண்டிய பங்களிப்புக்களைச் செய்ய புலம் பெயர் அமைப்புக்களும் சிவன் பவுண்டேசனும் தயாராகவுள்ளன" என அவர் மேலும் தெரிவித்தார். (ம-108)



# விண்மீனை தோற்கடித்து றோயல் சூடியது மகுடம்

கரணவாய், மே 19
குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியில் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் ஊரெழு றோயல் அணி கிண்ணம் வென்றது.

இறுதியாட்டமும் பரிசளிப்பு நிகழ்வும் நேற்றுமுன்தினம் இரவு குறிஞ்சிக்குமரன் வி.கழக மைதானத்தில் இடம்பெற்றது. ஊரெழு றோயல் அணியும் பலாலி விண்மீன் அணியும் மோதின.

ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் விண்மீன் அணியின் டேமியன் முதல் கோலைப் பதிவுசெய்தார். 20 ஆவது நிமிடத்தில் நிசாந்தன் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது விண்மீன்.

இரண்டாம் பாதியின் 32 ஆவது நிமிடத்தில் றோயலின் முதல் கோலைப் பதிவுசெய்தார் நிதர்சன். 35 ஆவது நிமிடத்தில் நிதர்சன் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய கோல் கணக்கு 2:2 என்றானது.

43 ஆவது நிமிடத்தில் டேமியன் றோயலின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்தார். றோயலின் ஆதிக்கம் அதிகரிக்க ஆரம்பிக்க கபிலன் மற்றொரு கோலைப் பதிவுசெய்து கோல் கணக்கை 3:3 என்றாக்கினார்.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா மூன்று கோலைப் பதிவுசெய்தமையை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் றோயல் அணி வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.

ஆட்ட நாயகனாக பலாலி விண்மீனின் காண்டீபன், தொடராட்டநாயகனாக றோயலின் கஜகோபன், சிறந்த கோல் காப்பாளராக யங் ஹென்றிஸ் அணியின் அமல்ராஜ், வளர்ந்து வரும் வீரராக மன்னார் சென். ஜோசவ்வாஸ் நகர் அணியின் டெசில் ஆகியோர் தெரிவாகினர்.

வெற்றிபெற்ற அணிகளுக்கான வெற்றிக்கிண்ணங்களையும் பதக்கங்களையும் நிகழ்வில் விருந்தினர்களாக கலந்து கொண்ட சிவன் அறக்கட்டளை நிறுவுனர் வேலாயுதம் கணேஸ்வரன், வடமாகாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் க.கணேசநாதன் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

(ம-108)

## குறிஞ்சிக்குமரனின் கௌரவிப்பு நிகழ்வு

கரணவாய் மே19
தேசிய ரீதியில் சாதனை படைத்த விளையாட்டு வீரர், வீராங்கனைகள் மற்றும் கால்பந்தாட்ட பயிற்றுனர்கள் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகத்தால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. பரிசளிப்பு நிகழ்வில் வைத்தே இந்த கௌரவிப்பு வழங்கப்பட்டது.

கோலூன்றிப் பாய்தலில் சாதனை நிகழ்த்திவரும் ஜெ.அனித்தா மற்றும் கால்பந்தாட்டத்தில் சாதித்துவரும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.எடிசன், யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த பிறேம்குமார், எஸ்.நிதர்சன், எஸ்.ரிதுசன், கிளிநொச்சி மாவட்ட கால்பந்தாட்டப் பயிற்றுனர் எல்.அனுராகாந்தன் யாழ்ப்பாண மாவட்ட பயிற்றுவிப்பாளர் பா.முகுந்தன் மற்றும் பாடசாலை இளம் வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கான அக்கடமியின் தலைமைப் பயிற்சியாளர் டனிஸ்ரன் விஜயகுமார் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

(ம-108)

## ஆதிசக்தி – அன்ரனிஸ் இறுதியில் பலப்பரீட்சை

கரணவாய் மே 19
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திவரும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டமும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று இடம்பெறவுள்ளன.

ஐக்கியம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று மாலை நடைபெறும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. தொடர்ந்து நடைபெறும் இறுதியாட்டத்தில் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

கழகத் தலைவர் ஜே.அரவிந்தன் தலைமையில் இடம்பெறும் பரிசளிப்பு நிழ்வில் தலைமை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் எம்கே.சிவாஜிலிங்கம், சிறப்பு விருந்தினராக சிவன் அறக்கட்டளையின் நிறுவுனர் வேலாயுதம் கணேஸ்வரன் இருவரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ம-108)


## நடப்புச் சம்பியன் வெளியேற்றம்

ஐ.பி,எல். தொடரில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தா வெற்றிபெற்றதை அடுத்து தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டது ஹைதராபாத்.


பிளே ஒவ் சுற்றின் விலகலாட்டமாக இந்த ஆட்டம் அமைந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று களத்தடுப்பைத் தீர்மானித்தது கொல்கத்தா. முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணி 7 இலக்குகள் இழப்புக்கு 128 ஓட்டங்களைக் குவித்தது. வோர்ணர் 37 ஓட்டங்களையும், வில்லியம்சன் 24 ஓட்டங்களையும், சங்கர் 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கட்டர் நைல் 3 இலக்குகளையும், உமேஸ் யாதவ் 2 இலக்குகளையும், போல்ட், சாவ்லா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

கொல்கத்தா அணி துடுப்பெடுத்தாடக் களமிறங்கும் வேளையில் மழை அதிகரித்திருந்தமையால் ஆட்டம் பிற்போடப்பட்டது. டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 6 பந்துப்பரிமாற்றங்களில் 48 ஓட்டங்கள் கொல்கத்தாவுக்கு இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. அந்த அணி 3 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது.

(ம)



மினி உலகக் கிண்ணத் தொடர் இங்கிலாந்தில் எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் கலந்து கொள்வதற்கான இலங்கை அணி நேற்று முன்தினம் புறப்பட்டுச் சென்றது.
(ம)



## வல்வை அணி சம்பியன்

கரணவாய், மே 19
பருத்தித்துறை பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவில் அனைத்து விளையாட்டுக்களிலும் சேர்த்து அதிகூடிய புள்ளிகளைப் பெற்று நடப்புவருட சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது வல்வை இளைஞர் கழகம்.

குறித்த போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வுகள் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. வல்வை அணி ஒட்டுமொத்தமாக 37 புள்ளிகளைப் பெற்று சம்பியனானது. 26 புள்ளிகளுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாடுக் கழகம் இரண்டாம் இடத்தைத் தனதாக்கியது.



கிண்ணங்களையும், பதக்கங்களையும் தலைமை விருந்தினராக கலந்துகொண்ட சிவன் அறக்கட்டளை நிறுவுனர் வேலாயுதம் கணேஸ்வரன் வழங்கிக் கௌரவித்தார்.

(ம-108)

# மினி உலகக்கிண்ணம்: ஆஸியில் ஸ்ரொய்னிஸ்

தோள்பட்டை காயம் குணமடைந்து உடல் தகுதியை எட்டி இருக்கும் ஆஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் ஸ்ரொய்னிஸ் மினி உலகக் கிண்ணத் தொடரில் மீண்டும் களமிறங்குவார் என்று ஆஸ்திரேலிய ஊடகங்கள் குறிப்பிட்டன.

27 வயதேயான இளம் வீரர் ஸ்ரொன்ஸ், மினி உலகக்கிண்ணத் தொடருக்கான ஆஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்ட போது காயமடைந்திருந்தார். இதனால் அவர் அணியில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. தற்போது அவர் காயத்தில் இருந்து மீண்டுள்ளார். இதனால் அணியில் அவர் சேர்த்துக்கொள்ளப்படலாம் என்று கருதப்படுகிறது.

மினி உலகக்கிண்ணத் தொடர் இங்கிலாந்தில் நடைபெறுகிறது. இங்கிலாந்தில் வேகப்பந்துவீசக்கூடிய சகலதுறை வீரர் அணிக்கு மிகவும் அவசியமானவர் என்று கருதப்படுகிறது. ஸ்ரொய்னில் அவ்வாறான ஆற்றல் படைத்தவர் என்பதால் அவர் ஆஸ்திரேலிய அணிக்குள் மீண்டும் சேர்த்துக்கொள்ளப்படுவார் என்று கருதப்படுகிறது.

ஆஸ்திரேலிய அணி கண்ட சிறந்த சகலதுறை வீரர்களில் ஒருவராக ஸ்ரொய்னிஸ் உருவெடுப்பார் என்று அந்த அணியின் தலைவர் சிமித் அண்மையில் நம்பிக்கை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)






# இலங்கைக்கு எதிராக வருகிறார் லோகேஸ்

## நீண்ட இடைவெளியின் பின்னர்

காயம் காரணமாக கடந்த இரு மாதங்களாக ஓய்விலுள்ள இந்திய அணியின் இளம் துடுப்பாட்ட வீரர் லோகேஸ் ராகுல், ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு எதிரான தொடரில் களமிறங்குவார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அண்மையில் முடிவடைந்த நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்திலேயே லோகேஸ் ராகுல் காயமடைந்தார். எனினும் காயத்துடன் ஆஸ்திரேலியத் தொடர் முழுவதும் விளையாடி 6 அரைச்சதங்கள் அடித்தார். காயம் பெரிதானதை அடுத்து ஐ.பி.எல். தொடரைக் கைவிட்டு இங்கிலாந்து சென்று அறுவைச் சிகிச்சை செய்துகொண்டார். தற்போது ஓய்வில் உள்ளார். அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ள மினி உலகக்கிண்ணத் தொடரிலும் லோகேஸ் களமிறங்க மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அவர் எப்போது களத்துக்குத் திரும்புவார் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளஇலங்கைக்கு எதிரான தொடரில் அவர் மீண்டும் வருவார் என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன.

லோகேஸின் வில கலை அடுத்து தவான் ஆரம்ப வீரனாக அணியில் சேர்த்துக் கொள்ளப் ப்பட்டார்.

நடப்பு வருட ஐ.பி.எல்.தொடரில் லோகேஸ் ராகுல் விளையாடவில்லை. இதனால் அவர் பிரதிநிதுத்துவம் செய்யும் பெங்களூர் அணி கடும் பின்ன டைவைச் சந்தித்து புள்ளிப் பட்டியலில் கடைசி இடத்தைப் பிடித்தது.

(ம)

**வீடு வாடகைக்கு**

06 அறைகள் கொண்ட அதில் 05 அறைகளுக்குவழிச் சீராக்கி பொருத்தப்பட்ட புதிய அழகிய வீடு வாடகைக்கு உண்டு அலுவலகப்பாவனைக்கு அல்லது தனியார் நிறுவனங்களுக்கு உகந்தது .அழகிய நீச்சல் தடாகமும் இதில் உண்டு . வாடகை பேசித்தீர்மானிக்கலாம். **தொடர்பு. 076 925 5588**

"A" என்ற அருங்கனியைப் பெற்றிட

**வணிகக்கல்வி தொடர்பரீட்சை (2017 A/L , DAYCLASS)**

பரீட்சை - 06

மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட பரீட்சையில்
65 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களை

**பாராட்டி வாழ்த்துதல்**

வளவாளர் (வலிகாமம் கல்வி வலயம், வணிகக்கல்வி)
S.K. Balasabesh B.Com (HN.Dip.in Acc (ATI))
P.G.Dip . in Edu (OUSI)

**Tutorial Staff, Jaffna College**

| இல | பெயர் | புள்ளி | மாவட்ட நிலை | பாடசாலை பெயர் |
|---|---|---|---|---|
| 01 | S.அனோயா | 90 | 01 | யா/ மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி |
| 02 | P.ஜனனி | 82 | 02 | யா/ இந்து மகளிர் கல்லூரி |
| 03 | P.மரிஸ்ரலா | 82 | 02 | யா/ வேம்படி பெண்கள் உயர் தர பாடசாலை |
| 04 | B.தயானிகா | 81 | 04 | யா/ மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி |
| 05 | R.இலக்கியா | 80 | 05 | யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை |
| 06 | A.லூர்த்திகா | 79 | 06 | யா/ திருக்குடும்ப கன்னியர்மடம் |
| 07 | S.டிலக்ஷனா | 78 | 07 | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| 08 | S.நிருஷா | 75 | 08 | யா/ மகாஜனக் கல்லூரி |
| 09 | A.லெனின் | 75 | 08 | |
| 10 | J.சிந்தியா | 74 | 10 | யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி |
| 11 | B.தனுஷா | 74 | 10 | யாழ்ப்பாண கல்லூரி வட்டுக்கோட்டை |
| 12 | A.மேரிசோனியா | 73 | 12 | யா/ திருக்குடும்ப கன்னியர்மடம் |
| 13 | S.கீர்த்தனா | 71 | 13 | யா/ கொக்குவில் இந்து கல்லூரி |
| 14 | S.அஸ்வினி | 71 | 13 | யாழ்ப்பாண கல்லூரி வட்டுக்கோட்டை |
| 15 | A.மேரிடானியா | 69 | 15 | யா/ திருக்குடும்ப கன்னியர்மடம் |
| 16 | G.சஸ்மிதா | 68 | 16 | யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி |
| 17 | U.கபீஷா | 68 | 16 | யா/ இந்து மகளிர் கல்லூரி |
| 18 | J.அபிராமி | 68 | 16 | யா/ இந்து மகளிர் கல்லூரி |
| 19 | M.கஜீபா | 67 | 19 | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| 20 | A.கனுஷா | 66 | 20 | யா/ திருக்குடும்ப கன்னியர்மடம் |
| 21 | T.லக்ஷனா | 66 | 20 | யா/ இந்து மகளிர் கல்லூரி |
| 22 | M.பதுஷன் | 65 | 22 | பூநகரி மத்திய கல்லூரி |
| 23 | K.சரணிகா | 65 | 22 | யா/ முத்துத்தம்பி மகாவித்தியாலயம் |
| 24 | S.தர்மினா | 65 | 22 | யா/ மகாஜனக் கல்லூரி |
| 25 | U.நிஷாந்தன் | 65 | 22 | பளை மத்திய கல்லூரி |
| 26 | A.டியோனி | 65 | 22 | யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. |

*"பரீட்சை கடினமாக அமைந்தால் பெறுபேறுகள் உயர்வாக அமையும்"*

**பரீட்சை நிலையங்கள்**

NEC - பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்
NEC - ஆனைப்பந்தி
HAC - மீசாலை
BPI - குருநகர்
SKB Business Hall - கொழும்புத்துறை.
BARATHY - சித்தங்கேணி

*"ஏமாற்றங்களை தவிர்த்து வெற்றிகளை தொடர இணையுங்கள்"*

# இந்தியாவின் பந்து வீச்சுக் கூட்டணி உலகிலேயே முதல் நிலையானது

## சமிந்த வாஸ் புகழாரம்

27ம், 28ம் திகதிகளில் நடைபெறவுள்ள
**முகாமைத்துவ உதவியாளர்**
பரீட்சைக்கான விசேட இறுதி
**கருத்தரங்கு**
வழமையான விரிவுரையாளர்
சனி(20/5), ஞாயிறு(21/5)
பி.ப.1.00- 5.00மணிவரை
தொடர்புகளுக்கு.
**076 688 3394**
**D.M.I**
ஆரியகுளம் சந்தி

**முகாமைத்துவ உதவியாளர்**
விசேட இறுதிக் கருத்தரங்கு
**காலம்**
26.05.2017,27.05.2017
வெள்ளி, சனி
9.00 - 4.00 Pm
**விரிவுரையாளர்கள்**
P.உமாசங்கர்
P. கமலதாசன்
அனுமதிகளை முற்கூட்டியே பதிவு செய்யவும்.
**SLAS**
(OPEN / LIMITED)
May - 20,27,28 ஆம் திகதிகளில் மாதிரிப் பரீட்சை
*வெளி மாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றலாம்.
**நாவலர்**
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி,யாழ்நகர்
**077 469 6695**



மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட் நெருங்கும் தருணத்தில் தற்போதைய இந்திய அணியின் பந்து வீச்சுக் கூட்டணி உலகிலேயே மிகவும் சிறந்தது என்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் இடது கை வேகப்பந்து வீச்சாளர் சமிந்தா வாஸ் தெரிவித்தார்.

குறிப்பாக மொகமது ஷமி, உமேஷ் யாதவ், புவனேஷ் குமார், ஜஸ்பிரித் பும்ரா ஆகியோர் அடங்கிய பந்து வீச்சு வரிசை தற்போது உலகில் மிகச்சிறந்ததாகும் என்று வாஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

'முதலில் முக்கியமானது உடற்தகுதி. இவர்கள் வலிமையாக உள்ளனர். வேகமாக வீசுகின்றனர். ஒவ்வொரு போட்டியிலிருந்தும் விரைவில் கற்றுக் கொண்டு மிகச்சீராக வீசி வருகின்றனர். உலகிலேயே இந்தப் பந்து வீச்சு வரிசைதான் மிகச்சிறந்தது. ஐபிஎல் மற்றும் பிற தொடர்களில் ஆடுவதன் மூலம் இந்தியாவிலிருந்து மேலும் வேகப்பந்து வீச்சாளர்கள் வந்து கொண்டேயிருப்பார்கள்.

ஜஸ்பிரித் பும்ரா குறைந்த அளவில் ஆடினாலும் பிரமாதமாக ஆடிவருகிறார். மலிங்கா, ஷேன் பொண்ட் ஆகியோர் பும்ராவுக்கு பெரிய அளவில் உதவி புரிகின்றனர் என்று நான் கருதுகிறேன்' - என்றார் வாஸ்.

(5)

**தவறிவிட்டது**

ஜெபரட்ணம் ஜோய் மாதவன் என்பவருடைய அடையாள அட்டை(913064070V).ATM Card (BOC).Driving License .photos என்பன 15.05.2017 திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் பேருந்து நிலையத்துக்கும் இடையில் காலை 7.15 Am - 10.15 Am மணிக்கு இடையில் தவறவிடப்பட்டுள்ளது.கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். **075 064 9898, 075 4011013**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.